
REGD. NO. M. 4392



GD. 24-172 TM



சிறந்த சலவை...
இந்த
OK
கொண்டுதான்!
ஓ. கே. சலவை சோப்பை
தயாரிப்பவர்கள்:
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
மதராஸ்



NOPAIN
நீங்கள் 'நோபெயின்'
உபயோகித்தால்
உபாதையே இராது!
NOPAIN
CALCUTTA CHEMICAL CO., LD
எல்லா உபாதை
களையும் இது மாய
மாய்ப் போக்கி
உடனே குண
மளிக்கிறது.
Calcutta Chemical Product


கல்கி



KALKI ஜனவரி 29, 1950 **4** அணா

ஜகப் பிரசித்திபெற்ற இந்த
டிரேட் மார்க்கை கவனியுங்கள்.

இன்று
மிகவும் நேர்த்தியான
சைகிள்களில்



உலகிலேயே ஏராளமாக
உற்பத்தி செய்யப்படுவது

தி ஹெர்குலஸ் சைகிள் அன்
மோட்டார் கம்பெனி லிமிடெட்,
பர்மிங்ஹாம், இங்கிலாந்து



'ஹெர்குலஸ்' மூன்று வேக
ஹப்பை எவ்வித மாடல்களி
லும் பொருத்தலாம். அல்லது
தனியாகவும் கிடைக்கும்.

ஹெர்குலஸ்
சைகிள்கள்

எல்லா பிரபல வியாபாரிகளாலும் விற்கப்படுவது

HCX/17/4

அருமையாகப் பெற்ற சுதந்திரத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்


காரண்டியும் நேர்த்தியும் உள்ள கைக் கடியாரங்கள் சரசமான விலையில் கிடைக்கின்றன. ஜாக்கிரதையான பரிசோதனைக்குப் பிறகு ஏழு காணும் கடியாரங்கள் மிகவும் அழகான ஸ்ட்ராப்புடன் விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன. பாக்கிங் சார்ஜோ தபால் கூலியோ கிடையாது. வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட இலங்கை ஆர்டர்கள் போஸ்டல் ஆர்டருடன் அனுப்ப வேண்டும்.




★ மதிப்புள்ள பரிசுகள் ★


நான்கு கைக் கடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ஒரு அழகான அலாரம் கடியாரம் ஆர்டருடன் அனுப்பி வைக்கப்படும். மூன்று கைக் கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ஒரு ஸ்வின் பாக்கெட் கடியாரமும் அனுப்பி வைக்கப்படும். இரண்டு கைக் கடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் அழகான அமெரிக்கன் பௌண்டன் பேனா இனமாக அனுப்பப்படும். 7-2-50க்குள் ஆர்டர் செய்து இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.



805	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	ரூ. 31
806	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	36
859	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	40
860	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	50
861	20 மைக்ரான் ரோல்டு கோல்டு 15 ஜுவல்	53




809	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	ரூ. 36
810	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	41
862	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	45
863	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	55
888	வாட்டர் ப்ரூப், ஷாக் ப்ரூப் ஸ்டீல் பாக், 15 ஜுவல்	65



821	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 36
822	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41
833	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	42
834	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	47
871	க்ரோம் கேஸ் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	55
872	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	65



824	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 36
825	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41
836	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	42
837	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	47
875	க்ரோம் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	55
876	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	65



813	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 27
814	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	32
815	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	32
816	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	37
865	க்ரோம் கேஸ் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	65
866	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	75



817	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 31
818	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	36
819	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	35
820	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	40
868	க்ரோம் கேஸ் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	70
869	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	80

CAROLINE AGENCIES (India). Dept. 7, P. B. 6 6+, Bombay 22

Edited, ... and Published by R. Krishna...rthy at the "Kalki" Press
...Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

அழுக்குப்படிந்த கோலிக்குண்டுகள் தீங்கு விளைவிக்காதவை போல் இருக்கின்றன. ஆனால் உண்மையில்

இந்த கைகள்

மறைந்திருக்கும் அபாயத்தை

வகிக்கின்றன


அழுக்கிலிருக்கும் கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளில் அபாயமிருக்கிறது.



லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும்




கிருமிகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுகிறது!

L. 137-50 TM


க்ருஷென்
எனது ஒல்லியான பருமனற்ற தேகத்தைத் திருப்பியளித்தது
KRUSCHEN SALTS
Kruschen
கல்யாணமான புதிதில் சாரா அவளது அழகிய கொடிபோன்ற உருவத்திற்காகப் போற்றப்பட்டாள். ஆனால் வருஷங்கள் செல்லச் செல்ல மிகுந்த பருமனாய் வளர்ந்து விட்டாள்.
"ஊளைச் சதையினால் ஏற்பட்ட எனது தொல்லைகள் அஜீரணத்தினாலும், மூச்சுத் திணறலினாலும் அதிகரித்தன. எனக்கு நடக்கவும் முடியாமல் என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பின்னர் ஒரு சிநேகிதி "க்ருஷென்" சால்ட் சிபாரிசு செய்தாள். அவள் புத்திமதிப் பிரகாரமே ஒரு பாட்டில் "க்ருஷென்" வாங்கினேன். இப்பொழுது நான்கு மாத க்ருஷென் சிகிச்சைக்குப் பிறகு தேகம் பருமன் குறைந்து மறுபடியும் சுறுசுறுப்பாக இருக்கிறேன். இதயத் துடிப்பு, அஜீர்ணம் இவைகளினின்று விடுபட்டேன். நான் அவ்வாறிருப்பதை ஸ்திரப்படுத்திக் கொள்ளுவதற்காகப் பிரதி காலையிலும் சிறிதளவு க்ருஷென் உட்கொள்ளுகிறேன்."
ஊளைச்சதையும் அதனால் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளும் மூச்சுத் திணறலும் உடம்பில் விஷத்தன்மையுள்ள கழிவுப் பொருள்களின் சேர்க்கையாலேயே உண்டாகின்றன. இவை, கழிவுகளை வெளியேற்றும் அவயவங்களின் வேலையைச் சரிவரச் செய்ய முடியாதபடி தடுக்கின்றன. க்ருஷெனிலுள்ள ஜீவ தாதுக்கள் கொழுப்பை உண்டாக்கும் அசுத்தங்களை உடலினின்றும் விடுவிக்கின்றன. அவயவங்களை ஒழுங்காகவே இயங்குமாறு செய்வதன்றி அபாயமற்றதும் இயற்கையானதுமாய் அமைந்திருக்கின்றது.
இன்றே க்ருஷென் வாங்குங்கள். எல்லாக் கெமிஸ்டுகளாலும், வியாபாரிகளாலும், மஞ்சள் பெட்டியில் ரூ. 1-8-0க்கு விற்கப்படுகின்றது.
நீங்களும் அந்த க்ருஷென்
உணர்ச்சியைப் பெறலாம்


பொங்கலோ பொங்கல்!
"பிச்சைக்கு வரவில்லை என்றாயே! பின் எதற்கு வந்தாய்?"
"பிச்சை வேண்டாம்; பொங்கல் இனாம் கொடுங்க!"
"பொங்கல் ஆசீர்வாதம் பண்ணுங்கோ!"
"நீ, க்ஷேமமாக இருக்கணும். போய்விட்டு, வா!"
"பொங்கல் இனாம் இல்லையா?"
"அடே, 'அப்பாயுசே'! வேறு வேலையில்லை. சீ, போ!"
"நீதான் கொஞ்ச நாளாய் மணி யார்டர் கொடுக்கிற வழக்கத்தையே விட்டு விட்டாயே. பொங்கல் இனாம் கிடையாது, போ!"
சாமா.



இந்த பிரபலமான மூன்று சோப்புகளும் ஜனங்களின் விசேஷ நன்மதிப்பைப் பெற்றுள்ளன...

இந்த பெயர்களையும் டிசைன்களையும் கொண்ட சோப்புகளின் விசேஷ குணங்களில் பொதுஜனங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். வேறு சோப்புகளைத் தயாரிக்கும் நம்பிக்கை வைக்கக்கூடாத சிலர் தங்களுடைய சோப்புகளின் குறிகளுக்கும், பெயர்களுக்கும், டிசைன்களுக்கும் 'ஸன்லைட்', 'லக்ஸ் டாய்லட்', 'லைப்பாய்' சோப் இவைகளுடைய குறிகளையும், பெயர்களையும், டிசைன்களையும் போலுள்ள இதர வணிகக்குறிகளை சட்டத்திற்கு மீறி உபயோகித்துவந்ததும், உபயோகித்து வருவதும் காணப்படுகிறது. இது மாதிரி குறிகளையும், பெயர்களையும், டிசைன்களையும் உபயோகிப்பது, பொதுஜனங்களை ஏமாற்றுவதற்கென்றே வேண்டுமெனச் செய்வதாகக் கருதப்படுகிறது.

எச்சரிக்கை!

வணிகக்குறிகளின் துஷ்பிரயோகம்

லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்—'ஸன்லைட் சோப்', 'லக்ஸ் டாய்லட் சோப்', 'லைப்பாய் சோப்' இவைகளை தயாரிப்பவர்கள்—இதன் மூலம் எச்சரிப்பது என்னவென்றால்: லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் தயாரிக்கும் சோப்புகளைத்தவிர மற்ற ஏதேனுமொரு நபர், வர்த்தகக்கூட்டம், கம்பெனி, சோப்புகளிலோ, கார்டன்களிலோ, உறைகளிலோ, அட்டைப் பெட்டிகளிலோ, 'ஸன்லைட்', 'லக்ஸ் டாய்லட்' அல்லது 'லைப்பாய்' சோப் இவைகளுடைய பெயர்களையோ, குறிகளையோ அல்லது டிசைன்களையோ கொண்ட சாமான்களை, சட்டத்தை மீறி, தயாரிப்பதில் ஈடுபடவோ, விற்கவோ, விற்பனைக்கு கொடுக்கவோ, விலசிக்கவோ, விற்பனைக்கு அனுப்பவோ, அல்லது பிரசுரப்படுத்தவோ, அல்லது மேற்கூறியவைகளில் ஏதேனுமொன்றைச் செய்ய உதவுவார்களேயானால் அவர்களின்மேல் சிவில் மூலமோ கிரிமினல் மூலமோ அல்லது இரண்டின் மூலமோ லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் தங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வார்கள்.

இந்த வணிகக்குறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் பொது ஜன நன்மையைக்கருதி இந்தப் பிரகாரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

L COM. 71-111 TM

வான்களுக்கு மேடைக் கச்சேரி செய்ய வசதிகளிருப்பதால் வேண்டா வெறுப்பில் நடந்துவரும் இந்த நிகழ்ச்சியை நிறுத்துவதை எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள் என்றெண்ணுகிறேன்.

உற்சவப் பந்தலில் வந்து கூடும் ஜனங்களுக்கு இப்போது அநேக வசதிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முதலில் கூட்டத்தை அமைதியுடன் நிர்வகிக்கச் சாரணர் படைகளும் போலீஸ் பந்தோபஸ்தும் பந்தலிலேயே காபி, சாப்பாடு ஓட்டல் வசதிகளும், தபாலாபீஸ் வசதிகளும் ஏற்பாடாகியிருக்கின்றன. மற்றப்படி பழங்கள் தின்பண்டங்கள், வெற்றிலை பாக்கு புகையிலை, சோடா கலர் போன்ற அத்தியாவசியமான பொருள்களும், இன்னும் 'ஸோப், ரிப்பன், பௌடர், ஸ்நோ, சீப்பு, கண்ணாடி போன்ற சாமான்களும் கிடைக்கக்கூடிய கடை வசதிகளும் இருக்கின்றன. இன்னும் சில வருஷங்களில் 'எக்ஸிபிஷன்' போன்ற பொருட் காட்சிகளும் உற்சவப் பந்தலுக்குச் சமீபத்தில் நடைபெற்றாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. தவிர கச்சேரி நடக்கும் போதே வெற்றிலை பாக்கு புகையிலைகளைப் போட்டுக்கொண்டு அநுபவித்துப் பழகிவரும் தாம்பூல ரஸிகர்களுக்குக் கச்சேரி நடுவில் எழுந்திருந்து வெளியில் போய்த்தான் துப்பவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைக் கொடுக்காமல் உற்சவப் பந்தலிலேயே ஆங்காங்கு துப்புவதற்குத் தொட்டி வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

96 கோடி நாம ஜபங்களை ஜபித்துச் சித்திபெற்று ஸாக்ஷாத் ராமபிரானைப் பரிவாரங்களுடன் நேரில் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்று அநேகாயிரம் கீர்த்தனைகளைச் சம்பிரதாய முறை வழுவாமல் பாடி அந்திய காலத்தில் துரீயாசிரமத்தையும் பெற்று ஸமாதி யடைந்த ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் மகோத்ஸவம் இப்போது ஒரு திருவிழாவாகவே கொண்டாடப் படுவதால் பொது மக்களின் கவனம் முழுவதையும் அது கவர்ந்து வருகிறது. இதனால் அந்த மகானிடம் பக்தியுள்ள அநேகர் வாழ்க்கையில் தங்களுக்கு வேண்டியவற்றைப் பிரார்த்தித்து அடைந்து வருவதால் உற்சவ சமயத்தில் பால் காவடிகள் மற்றும் அபிஷேக சாமான்களை இழுத்துவரும் அலகு காவடிகள் அங்கப் பிரதக்ஷிணம் போன்ற பிரார்த்தனைகளைச் செலுத்துவதற்காகப் பக்தர்கள் கூட்டம் கூட்டமாய் வருவதை வெகு சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம். கலியப்பெருமாள் திருவிழா, மாரியம்மன் திருவிழா, காளியம்மன் திருவிழா போன்றவைகளுக்கு லக்ஷக் கணக்கான பொதுமக்களும் அநேகாயிர ரூபாய் பெறுமான முன்ன பிரார்த்தனைத் திரவியங்களும் வந்து குவிவது போல் இந்தத் திருவிழாவிலும் வந்து குவியலாம் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆகவே அதற்கேற்றபடி இந்த விழாவில் பொதுமக்கள் அவரவர்கள் இஷ்டப்படி ஈடுபடும் வசதிகளைச் செய்ய வேண்டியது அவசியமானாலும் உத்தமமான சங்கீதக் கலைக்கும் சம்பிரதாய சங்கீதத்திற்கும் ஸத்குருவினால் செய்யப்பட்டிருக்கும் இணையற்ற தொண்டை எல்லோரும் அறியும் வண்ணம் பிரகடனப் படுத்திப் போற்றிக் காப்பாற்றி வருவது சங்கீத வித்துவான்களின் முக்கியமான கடமையாகும். உண்மையான ரஸிகர்களும் இளம் வித்துவான்களும் அவரவர்களுக்கு வேண்டிய பயனை இந்த உற்சவத்தின் மூலம் உண்மையில் பெறும்படி செய்வது முன்னணியில் விளங்கும் வித்துவான்களின் கடமையாகும்.

ஏற்கெனவே கிடைத்துவந்த அநேக சமஸ்தானங்களின் போஷணை இனி நிரந்தரமாய் எதிர்பார்ப்பதற்கில்லை. என்றாலும் சுதந்திர இந்தியாவின் மகா ஜனங்களுடைய அன்பும் ஆதரவும் வளர்பிறைச் சந்திரன்போல் அபிவிருத்தியாகி வருவதால் இந்தத் திருவிழா எல்லாம் வல்ல இறைவனருளால் சிறப்பான முறையில் அபிவிருத்தி யடையும் என்பதில் ஐயமில்லை. முற்றும்.

ரூபாய் நன்கொடை கொடுக்கும் ஆதரவாளர்களுக்கு உற்சவத்தில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் அனுபவிப்பதற் கேற்ற வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆனந்திக்க ஒலி பெருக்கி வசதிகளும் இருப்பதால் கச்சேரிகளை உள்ளே போய்த்தான் கேட்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லை. பந்தலுக்கு வெளியிலிருந்தே சுகமாய் அனுபவிக்கலாம். சில கச்சேரிகளை ரேடியோ மூலம் அஞ்சல் செய்வதால் திருவையாற்றுக்குக் கூடப் போகவேண்டு மென்பதில்லை. ரேடியோ வசதி யுள்ளவர்கள் தங்கள் தங்கள் வீட்டிலிருந்தே உற்சவத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆனந்திக்கலாம். பாடுபவர்கள் யாராயிருந்தாலும் அங்கு போய்ப் பாடிக் கைங்கரியம் செய்யலாம். அவர்கள் வித்துவான்களாகவோ அல்லது சங்கீதத் தொழிலில் உள்ளவர்களாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. பிரபல வித்துவான்களின் சிபாரிசும் அவர்களுக்கு வேண்டியதில்லை. ஏதோ சிற்சில உருப்படிகள் தெரிந்தால் கூடப் போதுமானது. இளம் வித்துவான்கள் அந்தக் காலத்து உற்சவத்தில் பாடுவதற்கே பயப்படுவார்கள். இந்தக் காலத்தில் இளம் வித்துவான்களின் சிஷ்யர்கள் கூடக் காலைக் கச்சேரி செய்ய வந்து விடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கும் அவகாசமோ பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கள் கூட இல்லை.

உற்சவப் பந்தல் பூராவும் ஒலிபெருக்கி வசதிகள் இருப்பதால் கச்சேரிகளைக் கேட்டு ஆனந்திக்கக் கூடியிருக்கும் ஜனங்களுக்குப் போதிய சிரத்தை ஏற்படுவதில்லை. தங்களுக்குப் பிடித்தமில்லாத கச்சேரிகளில் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். சில சமயம் விபரீதமான கரகோஷங்களைச் செய்து, பாடுகிறவர்களை எழுந்திருக்கச் செய்து விடுகிறார்கள். அனுபவமில்லாத சில இளம் பாடகர்கள் சபையின் மனப்பான்மையை அறியாமல் தங்களைக் கொண்டாடுவதாக எண்ணிக் கொண்டு மேலும் மேலும் பாட ஆரம்பிக்கிறார்கள். அந்தக் காலத்தில் இளம் வித்துவான்கள் பாடும்போது அனுபவம் உள்ள அநேக பெரிய வித்துவான்கள் முன்னணியில் உட்கார்ந்து அவர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் சாமர்த்தியம் முழுதும் வெளியாகும்படி செய்வார்கள்.

பெரிய வித்துவான்கள் தங்கள் முழு சாமர்த்தியங்களையும் காட்டி அநேக அபூர்வ கீர்த்தனைகள், ராகங்கள், பல்லவிகளைப் பாடி ரஸிகர்களை ஆனந்தக் கடலில் மூழ்கச் செய்கையில் மற்ற பெரிய வித்துவான்களும் அவைகளை மிகுந்த சிரத்தையுடன் கவனிப்பார்கள். இப்போது இம்மாதிரியான கலை விருந்துகளுக்குச் சந்தர்ப்பமோ அவகாசமோ கிடைப்பதில்லை. வித்துவத் கோஷ்டிகளும் அங்கு சேர்ந்தாற்போல் இப்போது தங்குவதில்லை. நிவாஸிகளில் சிலரை யன்றி மற்றவர்கள் தங்கள் கச்சேரி முடிந்தவுடன் கிளம்பி விடுகிறார்கள். சிலர் அங்கு வந்து தலையைக் காட்டிவிட்டுப் போய் விடுகிறார்கள். சிலர் வாராமலும் இருந்து விடுகிறார்கள். இப்போது புஷ்ய பகுள பஞ்சமி யன்று காலையில் நடக்கும் அதிஷ்டான பூஜையின்போது எல்லா வித்துவான்களும் பாடுகிறார்கள். மற்ற எல்லாப் பிடில், மிருதங்க வித்துவான்களும் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். என்றாலும் அவ்வளவு பேரும் பஞ்சரத்னக் கீர்த்தனைகளைச் சேர்ந்து ஒரே சமயத்தில் பாடியும் மற்றப் பக்க வாத்திய வித்துவான்கள் வாசித்தும் ஆகவேண்டும் என்ற நிலைமைக்கு வந்து விட்டபடியால் அங்கு நேரில் கேட்கும் மகா ஜனங்களுக்கோ ரேடியோ அஞ்சல் மூலம் கேட்கும் ரஸிகர்களுக்கோ உண்மையான ஆனந்தம் உண்டாவதாகச் சொல்வதற்கில்லை. தவிரவும் பெரிய கீர்த்தனைகளை இரண்டு பேர் ஜண்டையாகப் பாடுவதில் ஏற்படும் ஆனந்தம் பத்து அல்லது இருபது பேர் சேர்ந்து பாட ஆரம்பிக்கும்போது சிதறிப் போய்விடுகிறது. இதைவிடக் கட்சிகள் ஒன்று படுவதற்குமுன் நடந்தது போல் வந்திருக்கும் ஒவ்வொரு வித்துவானும் ஸத்குரு ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் சந்நிதியில் அவருடைய கீர்த்தனைகளில் ஒன்றை ஆத்மார்த்தமாய் மனமுருகி அனுபவித்துப் பாடினால் அதுவே நல்ல கைங்கரியமாகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயம்.

கடைசி நாள் இரவு நடத்தப்பட்டு வந்த 'படப் புறப்பாடு' என்ற நிகழ்ச்சி சென்ற சில வருஷங்களாகப் பஞ்சமி யன்று இரவிலேயே நடக்கிறது. எல்லா வித்துவான்களும் அது சமயம், கூட வரவேண்டுமென்பதற்காகவே இப்படி மாற்றப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் பெரும்பான்மையான வித்துவான்கள் சங்கீதக் கச்சேரிகளுக்காக வந்து கேட்கும் வழக்கம் வர வரக் குறைந்து விட்டபடியால் படப் புறப்பாட்டின்போது பனிக்கும், அகாலத்திற்கும் பயந்துகொண்டு எவரும் வருவதில்லை. முன்போலன்றி இப்போது நாதஸ்வர வித்து

1940-ம் வருஷத்திய உற்சவத்தை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து நடத்தினர். ஆதியில் (1914-ல்) கட்சிகளை ஒன்று சேர்க்கும் விஷயத்தில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்ட ஹரிகேசநல்லூர் முத்தய்யா பாகவதரும் குலமங்கலம் வைத்தியநாத பாகவதரும் கட்சிகள் ஒன்று சேர்ந்த வைபவத்தை நேரில் கண்டு களித்தனர். "ஸ்ரீ தியாகப் பிரம்ம மஹோத்ஸவ சபை, சென்னை" என்ற பெயரில் சபையை நிறுவி ரிஜிஸ்தர் செய்தனர். மைசூர், குவாலியர், திருவாங்கூர் போன்ற சமஸ்தானங்களின் போஷாதரவையும் பெற்றனர். காலஞ் சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்களை சபையின் தலைவராகவும் மூசிரி சுப்ரமணியய்யரும் திருவீழிமிழலை சுப்பிரமணியப் பிள்ளையும் காரியதரிசிகளாகவும், ஒருவர் பொக்கிஷதாரராகவும் சங்கீத வித்வான்களில் அநேகரும் சங்கீத ரஸிகர்களில் சிலருமாக 46 பேர்கள் நிர்வாக அங்கத்தினர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்விதம் 69 பேர்களால் நிர்வகிக்கப்படும் இந்தச் சபையில் மூன்றில் இரண்டு பங்கான 46 பேர்கள் சங்கீத கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பதும் மற்ற 23 பேர்கள் சங்கீத ரஸிகர்களும் அபிமானிகளும் என்பதும் குறிப்பிடத் தக்கது. கட்சிகள் ஒன்று சேர்ந்த பிறகு உற்சவமானது அதிஷ்டானத்துக்கு எதிரில் அமைக்கப்படும் விஸ்தாரமான பந்தலில் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

இந்தச் சபையார் உற்சவ நிதிக்காக அநேக ஊர்களில் சங்கீதக் கச்சேரிகளைத் தொடர்ச்சியாய் ஏற்பாடு செய்து பதினாயிரக் கணக்கில் வசூலித்தார்கள். அந்தந்த ஊர்களில் உள்ள ரஸிகர்களான பிரபல உத்தியோகஸ்தர்களும் ஐ. ஸி. எஸ். வர்க்கத்தினரும் தங்கள் தங்களாலாகிய உதவிகளை அவ்வப்போது செய்திருக்கின்றார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் சாப்பாடு முதலிய செலவுகளுக்காக அநேக ஆயிரம் ரூபாய்கள் செலவாகி யிருக்கின்றன. இதோடன்றி சபையின் பெயரில் சில நன்செய் நிலங்களும் திருவையாற்றில் சில வீடுகளும் வாங்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் பூர்வீக வீட்டை வாங்கியிருப்பதுடன் ஆராதனைகளையும் அந்த வீட்டிலேயே நடத்தி வருகிறார்கள். வருஷம் ஒன்றுக்கு ஐந்து

திருவையாறு திருவிழா

கோட்டு வாத்தியம் ஸ்ரீ ஆரையப்ப பாகவதர்

8. கட்சிகள் ஒன்றுபட்டன

அதிஷ்டான கட்டிடங்களைக் கட்டிய ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் வரவர அவைகளை விஸ்தரித்துக் கொண்டுவந்ததுடன் நண்பர்களின் பெரு முயற்சியினாலும் அன்பர்களின் பேருதவியாலும் அதிஷ்டானத்திற்கு இடப்புறமுள்ள காலி நிலங்களையும் வாங்கி அதில் பெரிய பந்தலாகப் போட்டு உற்சவத்தை நடத்த ஆரம்பித்தார். ஆகவே 'தியாகராஜாசிரமம்' என்ற அந்த இடம் முழு வசதிகளுடன் 1938-ம் வருஷம் முதல் விளங்க ஆரம்பித்தது. இந்த அதிஷ்டான சன்னிதானத்தை விட்டு மற்ற இடங்களில் ஏன் உற்சவம் செய்கிறார்கள் என்ற மனோபாவம் பொது மக்களிடையே நிலவி வர ஆரம்பித்தது.

ஏற்கெனவே நாம் குறிப்பிட்டபடி காலஞ்சென்ற கோவிந்தசாமிப் பிள்ளையின் அபிப்பிராயத்திற்கு இணங்க அன்னார் பூஜித்து வந்த ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் படத்தை உற்சவ நிர்வாகிகளா யிருந்து வந்த தஞ்சாவூர் கிருஷ்ணசாமி பிள்ளை, வாசுதேவ சாஸ்திரி ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண்டு பெரிய கட்சியாரின் உற்சவ நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட திருவீழிமிழலைச் சகோதரர்களும் நீடாமங்கலம் தவில் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையும் 1932-ம் வருஷம் முதல் திறம்பட நடத்தினார்கள். சில வருஷங்களுக்குப் பிறகு மிருதங்கம் அழகநம்பியாப் பிள்ளையும் காலமாகி விட்டார். என்றாலும் பழைய நிர்வாகிகளான ரயில்வே மணி அய்யர் போன்றவர்கள் ஒத்துழைத்தார்கள். பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை காலமான பிறகு தஞ்சை ஸ்ரீ சுதர்சன சபையார் பெரிய கட்சி உற்சவத்தில் போதிய சிரத்தை காட்டவில்லை. இதனால் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவ்வப்போது ஒரு நாடகம் நடத்தி வருவாரும் பணத்தை உற்சவத்திற்குச் சில வருஷங்கள் கொடுத்து உதவி ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் கைங்கரியத்தில் ஈடுபடும் பாக்கியத்தைப் பெற்றார்.

பெரிய கட்சியில் பிடிலுடன் மிருதங்கம், கடம், கஞ்சிரா, டோலக்கு, மோர்சிங் ஆகிய தாள வாத்தியங்களையும் மன்னார்குடி பக்கிரியா பிள்ளையின் சொன்னக்கோலையும் ஏற்பாடு செய்துகொண்டு கச்சேரியை வெகு பிரபலமாய் நடத்திவந்தார் காஞ்சிபுரம் நாயினாப் பிள்ளை. அவர் காலமான பிறகு அந்த ஸ்தானத்தை அன்னாரின் சிஷ்யராகிய சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை திறம்பட வகித்து நடத்திவந்தார். அதேபோல் வாழையடி வாழையாகப் பக்கிரியா பிள்ளையின் குமாரராகிய வைத்திலிங்கம் பிள்ளையும் வகித்தார். முசிரி சுப்பிரமணிய அய்யரும் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யரும் கட்சிகள் ஒன்று சேர்ந்தாலன்றி தாங்கள் இரண்டு கட்சிகளுக்கும் வரப்போவதில்லை என்று சொல்லிவிட்டார்கள். இரண்டு வருஷம் சின்னக் கட்சியில் சம்பந்தப்படாமல் புஷ்ய மண்டபத்தில் தம் கதையை மட்டும் சிதம்பர பாகவதர் நடத்திய காலத்தில், திருவீழிமிழலைச் சகோதரர்கள் சிலருடன் போய் பாகவதரைக் கண்டு தங்கள் கட்சியில் வந்து கதை செய்து உற்சவத்தை நடத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பாகவதர் அதுமட்டும் தம்மால் முடியாது என்று தெரிவித்து விட்டார்.

பெரிய கட்சி உற்சவ நிர்வாக விஷயத்தில் திருவீழிமிழலை சகோதரர்களுக்குச் சில வருஷங்களில் கொஞ்சம் கைப்பொறுப்பும் ஏற்பட்டு வந்தபடியால் எப்படியாவது கட்சிகளை ஒன்று சேர்க்கும் விஷயத்தில் அவர்களும் ஊக்கம் கொண்டனர். பிடில் ராஜமாணிக்கம் பிள்ளையின் உதவியுடன் முசிரி சுப்பிரமணிய அய்யர் செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் ஆகியோரிடம் தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்தார்கள். எல்லோருமாகப் பல்லடம் சஞ்சீவிராவையும் அரியக்குடி ராமானுஜய்யங்காரையும் கண்டு பேசினர். முசிரி சுப்பிரமணிய அய்யரின் பெரு முயற்சியால் கட்சிகள் ஒன்றுபட்டன.

● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ●

ஒத்துழையாமை

★

ஒத்துழையாமை இயக்கத்தை விளக்கிக் காந்திஜி 1921-ம் வருஷம் தம் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதியதாவது :

"பிரகலாதன் தன் தந்தை செய்த தீமையில் கலந்து கொள்ளாமல் விலகி யிருந்தான். சீதை, இராவணன் தனக்குச் செய்ய வந்த நன்மைகளைக் கண்ணெடுத்தும் பாராமல் தள்ளி விட்டாள். பரதன் தன்னுடைய அன்னையாகிய கைகேயி தனக்குத் தேடி வைத்திருந்த ராஜ்யத்தை வேண்டாமென்று தள்ளி விட்டான்.

"தீயவனை விட்டு விலகி யிருப்பது-அதாவது தீமை செய்வதில் அவனோடு கலந்து கொள்ளாமலும் அவனுக்கு உதவி செய்யாமலும் இருப்பது ஒவ்வொரு நற்குடி மகனுடைய கடமையாகும்."

● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ●

புதுவையிலே தமிழ்த் தவம் புரியும் யோகி சுத்தானந்தர் இந்தக் குறையை நீக்க ஆய்த எழுத்தை உபயோகிக்கச் சொன்ன கருத்தைக் காட்டிலும் அன்பர் சீனிவாசன் F, Z என்ற எழுத்துக்களையே தமிழாக்கிக் கொள்ளலாம் என்று கூறிய கருத்து சிறந்ததாகத் தோன்றுகிறது. தமிழ் பற்றிய மகாநாடுகள் இதுபோன்ற விஷயங்களில் திட்டமான முடிவுகள் செய்வது நலமாகும்.

மதுரை
16–1–50 ஆர். ராமநாதன்

○●○

★ ஆதரிப்பவர் யார் ?

15—5—50-ம் தேதி "கல்கி" இதழ் 'வட்ட மேஜை'ப் பகுதியில் நாகப்பட்டினம், ஸ்ரீ அனந்தராமன் எழுதிய இளம்படைப்பாளர்கள் என்னும் கடிதத்தைப் பார்த்தேன். உடனே, இவர்கள் நிலைக்குச் சற்றும் தாழ்ந்து விடவில்லை இளம் எழுத்தாளர்களின் நிலை என்று தோன்றியது.

பல வருஷங்கள் பல புஸ்தகங்களை இரவு பகலாய்க் கஷ்டப்பட்டுக் கருத்தூன்றிப் படிக்கவேண்டி யிருக்கிறது. பிறகு சேவை மனப்பான்மையுடன் (பரிசுகளை விரும்பாது) ஓய்வில்லாத கூலிப் பிழைப்பினிடையில் ஒருவேளை உணவையும் ஒழித்து, ஸ்டாம்ப் வாங்கிக் கட்டுரைகள் தீட்டிப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறோம். அந்தக் கட்டுரைகளைப் பல பத்திரிகாசிரியர்கள், இளம் எழுத்தாளர்கள் என அலட்சியம் செய்து, எவ்விதமான ஆசிரியரின் கருத்தும் எழுதாமல் ஆபீஸ் ரப்பர் ஸ்டாம்ப்கூட வைக்காமலேயே திருப்பி அனுப்புகின்றனர்.

பிறக்கும்போதே பெரிய எழுத்தாளராகவோ, பேச்சாளராகவோ தோன்றியவர் யார்? காலவட்டத்தில் ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும்தானே இளம் எழுத்தாளர்கள் பெரிய கற்பனைச் சித்திரம் தீட்டும் கருத்தோவியர்களாக முடியும்?

இதனாலன்றோ 'சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற பழமொழி விளக்கிற்று. இந்தப் பழமொழியை (பழம்—மொழி) பழமையானது, கெட்டுப் போனது என அவர்களின் கற்பனா சக்தியினால் கருதிக் கொண்டனர் போலும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள். அதனாலன்றோ, கட்டுரையைக் கண்டவுடனேயே, தீட்டியவர் பிரபல எழுத்தாளரா? நம்களுக்கு வேண்டியவரா? என்றெல்லாம் பார்க்கின்றனர். கருத்தைக் கவனிக்கின்றனரோ? புதிய ஆளா விருப்பின் மனம் கூசாது மறு தபாலில் (ரிப்ளை ஸ்டாம்ப் இருந்தால்) உடனே அனுப்பிவிடுகின்றனர். தன் கட்டுரையைத் திரும்பப் பெற்றதின் காரணமே தெரியாது கலங்குகிறான் இளம் எழுத்தாளன். அந்தோ! அவன் படும் மனவேதனையை என்னவென்று உரைப்பது?

தப்பித் தவறி ஒருவேளை பிரசுரமாகி விட்டாலும் அந்தப் பிரதி 'காம்ப்ளிமெண்ட்ரி' காப்பியாவது அனுப்பப்படுமா? அதுவும் கிடையாது. சில பத்திரிகாசிரியர்களிடம் அந்தப் பழக்கமே கிடையாது. அத்திபூத்தது போல், நூற்றுக் கணக்கான தோல்வியினிடையில் ஒரு தடவை தன் கருத்து பிரசுரிக்கப்பட்டதைக் கண்டு ஆனந்த சாகரத்தில் அழுந்தி விடுகிறான். தான் தொண்ணூற்றொன்பது தடவை தோற்றதைக்கூட மறந்து மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறான். அபூர்வமாய்த்தான் சிலர் பெரிய வெற்றி கண்டு விடுகின்றனர்.

ஆகவே, பத்திரிகாலய மாஜி இளம் எழுத்தாளர்களே! தற்கால இளம் எழுத்தாளர்களைக் கருணையுடன் நீங்கள் ஆதரிக்க வேண்டும். இல்லையேல் உங்கள் வழித்தோன்றல்களாகிய எங்களை ஆதரிக்கத்தான் யார் இருக்கிறார்கள்?

அருப்புக்கோட்டை
21–1–50 ஆர். எஸ். மணி

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "யாத வேண்டும்!" என்ற கடிதம் எழுதிய புதுக்கோட்டை ஸ்ரீ ரா. நடராஜனுக்கும், "ஆதரிப்பவர் யார்?" என்ற கடிதம் எழுதிய அருப்புக்கோட்டை ஸ்ரீ ஆர். எஸ். மணிக்கும், ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

எவ்வளவு காலம், கருத்து, பணம், பகுத்தறிவு பாழ் என்பதைக் குறித்து எழுதியிருந்தது கண்டு மகிழ்ந்தேன். அதையொட்டி "உங்கள் காலபலன்" என்று திரு எம். எஸ். மணி எழுதிய குறிப்பையும் படித்து ரசித்துச் சிரித்த நண்பர்களுள் நானும் ஒருவன்.

இந்தகைய மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டிக்கும் உங்கள் போன்றோரைக் கண்டிக்கவும் குறை கூறவும் துணிந்து விடுகிறார்கள் சிலர். மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டிப்பதைக் கண்டு கோபப்படுபவர்கள், தங்கள் கோபத்தை அடக்கிச் சிறிது நிதானமாய்ச் சிந்தித்துப் பார்த்தால் தாமாகவே திருந்திவிடலாம்.

எல்லா இந்துக்களும் விதித் தத்துவத்தின்மீது பரிபூரண நம்பிக்கை யுடையவர்களா யிருக்கிறார்கள். ஒரே சமயத்தில், விதியின் மேல் நம்பிக்கை யுடையவர்கள், நாள், கோள், சகுனம், நட்சத்திரம் பார்ப்பதிலும் நம்பிக்கை யுடையவர்களாயு மிருக்கிறார்கள். இதிலேதான் விசித்திரம் விளைகிறது. ஆனால் அது அவர்களுக்குத் தெரிவதில்லை. உதாரணமாக எல்லாம் விதியின்படி நடக்கும் என்பதிலே உறுதியும் நம்பிக்கையு முடையவர்கள் நாள், கோள் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. எவ்வளவுதான் நல்ல நாளில், நல்ல வேளையில், நல்ல சகுனத்தில் செய்தாலும் அவருடைய விதியின்படி அந்தக் காரியம் கெடுதலாக முடிவுடையதா யிருந்தால் அந்த நாள் பார்ப்பதில் அர்த்தமே கிடையாது. அப்படியின்றி நாள் பார்ப்பதில் நற்பலன் கிடைக்கும் என்பதாயின் விதித் தத்துவம் பயனளிக்காமல் போய்விடுகிறது. எனவே விதியை நம்புபவர்கள் நாள் நட்சத்திரத்தின்மேல் நம்பிக்கை வைப்பதில் அர்த்தம் கிடையாது. நாள், நட்சத்திரத்தின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள் விதியின் மேல் நம்பிக்கை வைப்பதில் அர்த்தம் கிடையாது. இரண்டின் மேலும் ஏககாலத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் பகுத்தறிவின் மீது நம்பிக்கை யற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

எது எப்படி யிருந்தபோதிலும் விதியோ, நாளோ, கோளோ, ஜோசியமோ மக்களுடைய முன்னேற்றத்திற்குத் தடை செய்வதாகவோ, மக்களுடைய பொன்னான நேரத்தை வீணாக்குவதாகவோ இருந்தால் அதை அனுமதிக்கவே கூடாது. இந்த அளவுக்கு மக்களுடைய மனோபாவம் அவசியம் மாற வேண்டும்—மாற வழி செய்ய வேண்டும், அறிஞர்கள்!

மதுரை
15–1–59 புத்ததேரி-ரா. நடராஜன்

○●○

F, Z பற்றி

இந்த வாரத்திய (15–1–50) 'வட்டமேஜை'ப் பகுதியில் ஸ்ரீ வி. ஜி. சீனிவாசன் எழுதிய கடிதத்தைப் படித்தேன். அதில் தமிழ்மொழிச் சீர்திருத்தத்திற்கான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒரு மொழி வளம் பெறப் புதிய சொற்கள் பல அம்மொழியிற் சேர வேண்டுமென்பது தமிழ்த் தாத்தாவான டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் முடிவு. தமிழ் சம்பந்தமான ஆராய்ச்சிகளும் தமிழ் மொழி பல்வேறு காலங்களில் புதிய எழுத்துக்களையும் வார்த்தைகளையும் சேர்த்துக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஆதலின் F, Z என்ற ஒலிகள் இல்லாக் குறையை நீக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் மொழிக்கு மேன்மையே உண்டாகும்.

அபிப்பிராய பேதம்!



அரைச் செவிடு:—நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

குல்லாய்க்காரர்:— பாகவதர் எவ்வளவு இனிமையாகப் பாடுகிறார் பார்த்தீர்களா?

அரைச் செவிடு:—பாகவதர் கத்துகிற சத்தத்தில் நீங்கள் சொல்வது என் காதிலேயே விழவில்லை, ஸார்!

வட்ட மேஜை

சகுன பலன்

ஸ்ரீ எம். என். மணி எழுதியிருப்பது நிஜமாகவே ஹாஸ்யக் கட்டுரைதானா, அல்லது ‘கல்கி’யிலும் ‘ஜோசிய’ப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ என்று நிர்ணயிக்க முடியவில்லை. எதற்கும் அடுத்த இதழையும் பார்ப்போம் என்று காத்திருந்தேன்.

இந்த வாரக் ‘கல்கி’ இதழ் (15-1-50) ஐக் கெட்டியதும் வழக்கம் போலவே மள மள வென்று பொருளடக்கத்தில் கண்ணோட்டினேன். “உங்கள் ராசிபலன்” என்ற தலைப்பு இந்த இதழிலும் கண்டவுடன் மனம்மிக நொந்தேன். அப்பக்கத்தைப் புரட்டிப் பார்த்த பிறகு மகிழ்ச்சியடைந்தேன்.

நான், நட்சத்திரம், சோதிடம், ஜாதகம் இவைகள் பார்ப்பதைக் கட்டோடு வெறுப்பவன் நான். அது போலவே சகுனம் பார்ப்பதும் வெறும் மூட நம்பிக்கை என்பது என் கொள்கை. அதை மேலும் திடப்படுத்துமாறு என் வாழ்க்கையில் நடந்த ஒரு சிறு உண்மைச் சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் எஸ். எஸ். எல். ஸி. படித்துக் கொண்டிருந்தபோது, பரீக்ஷை வந்தது. முதல் பரீக்ஷை சனிக்கிழமையன்று காலை பத்து மணிக்குத் தொடக்கம்.

நான் எப்போதுமே, வகுப்புத் தொடக்கச் சரியாக ஐந்து நிமிஷம் இருக்கும்போது தான் பள்ளிக்கூடம் போய்ச் சேருவது வழக்கம். சில பையன்களைப் போல ஒரு மணி, அரை மணி முன்னதாகவே போய்க் கூத்தடிக்க எனக்குப் பிடிக்காது. அது போலவே பரீக்ஷை ஆரம்ப தினத்தன்றும் என் வழக்கப்படியே ஒன்பதே முக்காலுக்கு வீட்டிலிருந்து புறப்பட்டேன். அதைக் கண்டதும் என்மீது உயிரையே வைத்திருக்கும் என் தமையனாரின் முகம் வாடியது.

“மணி, இன்றாவது சற்று முன்னதாகக் கிளம்பி இருக்கலாகாதா? ஒன்பது மணிக்கு முன்னால் கிளம்பியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!” என்றார் வருத்தத்துடன்.

எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. அன்று சனிக்கிழமை யாதலால் ஒன்பது மணி முதல் பத்தரை மணி வரை ராகு காலம். அதுதான் அவர் வருத்தத்திற்குக் காரணம் என்பதை அறிந்து கொண்டேன்.

அண்ணாவுக்குச் சமாதானம் சொல்லி விட்டு வாசற்படியை விட்டு இறங்கினேன். அவ்வளவுதான். என் வகுப்பு மாணவன் ஒருவன் எதிரில் வந்தான். அவன் பிராம்மணப் பையன்!

என் தமையனாரின் மனோ நிலை இப்போது எப்படி இருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். ‘ஒற்றைப் பார்ப்பான் சகுனமும் வேறு?’ என்று அவர் அடைந்த மன வருத்தம் கொஞ்சமல்ல.

ஆனாலும் நான் தைரியத்தைக் கை விடாமல் போனேன். எனக்குப் பாஸ் மார்க்காவது கிடைக்காமலா போய்விடும் என்று ஒரு குருட்டு நம்பிக்கை!

பரீக்ஷை ஹாலில் போய் உட்கார்ந்து கேள்வித் தாளைக் கையில் வாங்கிப் பார்த்தால், என்ன ஆச்சரியம்! என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கேள்விகள் பெரும்பாலும் வெகு சுலபமாகவே இருந்தன.

விஷயத்தை அதிகம் வளர்த்துவானேன்? பாஸ் மார்க்கு வருமோ என்று சந்தேகப்பட்டது போக நூற்றுக்கு எண்பது மார்க்குகள் எனக்குக் கிடைத்தன!

இப்போது இந்தக் கடிதம் கூட ராகு காலம் பாராமல்தான் எழுதுகிறேன்! ‘வட்ட மேஜை’யில் போடுவதும் போடாததும் தங்கள் இஷ்டம். ஆனால் கடிதம் பிரசுரமாகாவிட்டால், “நீ ராகு காலத்தில் எழுதியிருப்பாய். அதனால்தான் போடவில்லை” என்று என் தமையனார் சொல்லுவார் என்பது மட்டும் நிச்சயம்!

சிக்கபாணாவர்
19—1—50 என். வி. சுப்பிரமணியம்

○●○

மாற வேண்டும்!

★ ‘கல்கி’யின் 8, 15–1–60 இதழ்களில் ‘கோள் என் செய்யும்?’ என்ற தலைப்பில் நாள் பார்த்தல், நட்சத்திரம் பார்த்தல், ஜோசியம் பார்த்தல் ஆகியவற்றின் மூலம்

"ஆமாம்; அன்றைக்கே பாரதியார் என்ன சொன்னார் தெரியுமோ?"

"என்ன?"

"'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்றார்."

"நீயும் நானும் ராஜாவானால் குடியரசுத் தலைவர் என்று ஒருவர் இருக்காரே, அப்பா! அவர்......"

"அவர் நம்ம வேலையாளுடா?"

"இது என்னப்பா அவ்வளவு பெரிய மனுஷரைப்போய் நம்ம 'வேலையாளு' என்கிறயே? கேலியா அப்பா பண்ணுகிறே!" என்றான் சிறுவன்.

"ஏண்டா, உனக்குத் துணி தோய்த்துப்போட்டு, பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டால் தான் வேலையாள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறயா? அப்படியில்லை. உன் இஷ்டத்துக்கும், என் இஷ்டத்துக்கும் ஜனங்களுடைய இஷ்டத்துக்கும் தகுந்தபடி நடந்தாலே வேலையாள்தான்."

"உன் இஷ்டத்துக்கும் என் இஷ்டத்துக்கும் எப்படி அப்பா நடப்பார்?"

"சொல்லுகிறேன் கேளு. இப்போது ஊருக்கு ஊர் பள்ளிக்கூடம் வைக்க வேண்டியிருக்கு. அதுக்கு சர்க்காரிலே பணமில்லை என்று வைச்சுக்கோ. அப்போது ஜனங்களிடம் ரூபாய்க்குத் தம்பிடி கொடுங்கோ என்று சொல்லி முன் காலத்து ராஜாக்களானால் வரி விதிக்க விடுவார்கள்."

"இவர் அப்படிப் பண்ணமாட்டாரா? அந்தப் பணத்தை ஏதாகிலும் மந்திரம் செய்து கொண்டு வந்துவிடுவாரா, அப்பா?" என்றான் பையன்.

"முட்டாள், வாய் மூடிக்கொண்டு சொல்றதைக் கேளுடா!—ராஜா ஜனங்களைக் கேட்காமல் விதித்த வரியை நம்ம குடியரசுத் தலைவர் 'நான் இதுபோல் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு ரூபாய்க்குத் தம்பிடி வரி போடப் போகிறேன் உங்களுக்குக் கொடுக்க இஷ்டமா?' என்று கேட்பார். அப்போது நீ சொல்லலாம், 'நீங்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு தம்பிடி வரி விதித்தால், ஒரு ரூபாய் பப்பர்மிண்ட் சாப்பிடுவதில் இரண்டு பப்பர்மிண்ட் குறைந்துபோகும். அதனால் எனக்குப் பள்ளிக்கூடம் வேண்டாம். நான் படிக்காமல் இருப்பேனே யொழிய இரண்டு மிட்டாய் குறைச்சலாகச் சாப்பிட முடியாது இதுதான் உங்கள் வரியினால் ஏற்படும் பலன் என்று சொல்லலாம். — சொல்லலாம் இல்லை — சொல்ல வேண்டும். அது உன் கடமை" என்றார்.



சிறுவன் சற்றுப்புத்திசாலி. தகப்பனார் 'கடமை' என்ற வார்த்தையைச் சொன்னவுடன் ஒரு கணம் யோசித்தான். அவனுக்கு ஏதோ குழப்பமாக இருந்தது.

"என்ன அப்பா இது? சரியாகவே சொல்லமாட்டேன், என்கிறயே?" என்றான்.

"என்னடா சரியாகச் சொல்லவில்லை?"

"இரண்டு நாள் முன்னால் பகவத்கீதை பாராயணம் பண்ணிக் கொண்டிருந்த போது 'உன் கடமையைச் செய்; பலனைப் பற்றி நினைக்காதே' என்று இதிலே சொல்லியிருக்கு என்றாயே! அதற்குள் இன்னிக்கு வந்து பலனைப் பற்றிப் பேசு; அதுதான் உன் கடமை என்கிறயே, அப்பா!'

"கெட்டிக்காரண்டா நீ. பேஷ்! நல்ல கேள்வி கேட்டாய்! உன் சொந்த விஷயத்திலே பலனைப் பற்றி நினைக்காமல் காரியம் செய்ய வேண்டும். ஆனால், அரசாங்க விஷயத்தில் அப்படியல்ல. குடியரசுத் தலைவரும், மந்திரிகளும் அவர்கள் செய்யப் போகிற காரியங்களின் பலாபலன் எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியது பொது ஜனங்களாகிய நம்முடைய கடமை! நம்முடைய இஷ்டத்தையும் கஷ்டத்தையும் சொல்ல முடிகிறதினால்தான் குடியரசு என்று இதற்குப் பெயர். நம்ம வார்த்தையும் இலட்சியம் செய்து ராஜாங்க காரியம் நடப்பதனால் தான் நாம் இந்நாட்டுக்கு மன்னர் ஆகிறோம். புரிந்ததா?"

"புரிந்தது, அப்பா!" என்றான் சிறுவன்.

"உங்கள் சொந்த விஷயத்திற்காக மக்களை வரி செலுத்தும்படி செய்யலாமா?"

"என் சொந்த விஷயமா? எது என் சொந்த விஷயம்? கோயில் கட்டுதல் என் சொந்த விஷயமா? எனக்காகவா கோயில் கட்டிக் கொள்ளுகிறேன்? எனக்குக் கடவுளை வணங்க வேண்டுமென்றால் என் உள்ளத்தில் உறையும் இறைவனுக்கே நான் வணக்கம் செலுத்து விடுவேன். கோயில் கட்டினால் மக்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிக் கோவிலுக்கு வருவார்கள். தேர், திருவிழா என்றால் எல்லோரும் பத்து நாட்கள் உல்லாசமாகவும் சந்தோஷமாகவும் பொழுதைப் போக்குவார்கள். நாதஸ்வரம், நாட்டியம், சங்கீதம் போன்ற உயர்ந்த கலைகளை அநுபவிக்கும் பாக்கியம் பணக்காரனிலிருந்து பாமரன் வரை யாவருக்கும் கிடைக்கும். இப்படி அவர்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்க வசதி செய்து தரவேண்டியது மன்னனின் கடமை.

"குளங்கள் எதற்கு வெட்டுகிறேன் என்று நீ கேட்கலாம்? பாமர மக்கள் குடிதண்ணீருக்கு வேண்டிய கிணறுகள் அவர்களே வெட்டிக்கொள்ள இயலாது. அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வசதி செய்து தரவேண்டியது முடிதரித்த மன்னனின் கடமை.

"பாசறைகள் எதற்கு? சைன்யம் எதற்கு? வேற்றரசர்கள் வந்து நம் குடிகளின் அமைதியான வாழ்க்கையைக் கொடுக்காமல் தடுப்பதற்குத்தான். அவர்களுடைய நிம்மதியான வாழ்க்கைக்கு ஊறு நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மன்னனின் கடமை" என்று பாண்டிய மன்னர் கூறினார்.



"அப்பா! நீங்கள் ஏதோ மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்வதாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் மக்கள் அவ்வாறு கருத வேண்டுமே?"

"குமாரா! சூரியன் ஒளி பெற்று எத்தனையோ உயிர்கள் தளிர்த்து ஓங்கி வளர்கின்றன; எத்தனையோ உயிர்கள் தீய்ந்து அழிந்து போகின்றன. ஆகவே, ஒரு காரியத்தினால் நன்மையும் விளைவதுண்டு தீமையும் விளைவதுண்டு. ஆனால் நான் முதலிலேயே சொல்லி விட்டேன். நான் செய்கின்ற காரியங்கள் யாவும் கடமையின்பாற் பட்டது என்று. கடமையைச் செய்பவன் விளைவைப் பற்றி எண்ணுவதில்லை. மன்னனின் கடமை மக்களுக்கு எது உகந்தது என்று நினைக்கிறானோ அதைச் செய்ய வேண்டும் என்பதுதான். மக்கள் உல்லாசமாகச் சென்று ஆண்டவனைத் தொழ வேண்டும் என்று கோயில் அமைத்தால், அதையே வம்புச் சாவடியாகவும் சூதாடும் கூடமாகவும் மக்கள் மாற்றிக் கொள்ளலாம். குடி தண்ணீர் சுரக்கும் குளங்களை விஷ நீர் சுரக்கும் பொய்கைகளாக மாற்றிக் கொள்ளலாம். பாசறைகளைப் பகையை விரட்டுவதற்குப் பதிலாகத் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்ளவும் உபயோகித்துக் கொள்ளலாம். இதற்குப் பயந்து மக்களுக்கு எது உபயோகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேனோ அதைச் செய்யாமலிருக்க முடியாது. எனது முன்னோர்கள் செய்து வந்த கடமையிலிருந்து நான் சற்றும்வழுவ முடியாது" என்றார் பாண்டிய மன்னர்.

• • •

1950-ம் வருஷம், ஜனவரி மாதம் 26-ம் தேதி.

"அப்பா! இன்றைக்கு என்னப்பா விசேஷம்? எங்கே கண்டாலும் ஒரே குதூகலமாக இருக்கிறதே?"

"இன்றைக்குத்தான் பாரத நாடு குடியரசு ஆகும் திருநாள்."

"'குடியரசு' என்றால் என்ன அப்பா?"

"குடியரசு என்றால் ஜனங்களை ஜனங்களே ஆள்வது என்று அர்த்தம்."

"அப்படியானால் நீயும் நானும் ஆளுவோமா, அப்பா?"

"ஆமாம்!"

"ராஜா மாதிரியா?"

"ஆமாம்."

"அப்படியானால் நீயும் ராஜா நானும் ராஜாவா?" என்று உற்சாக மிகுதியில் பையன் கண்களில் ஒளி வீசக் கேட்டான்.



தந்தையும் மகனும்

எம். வி. என்.

"அப்பா! அந்த விதையை நட்டு விட்டேன், அப்பா!"

"ரொம்ப சரி!"

"அப்பா......!" என்று மறுபடியும் ஏதோ சொல்ல வாய் எடுத்தான்.

"என்னடா?"

"ஒன்றுமில்லை அப்பா, அந்த விதை எப்போது முளைவிடும்?"

"இன்னும் மூன்று நாளாகும்?"

"எப்போ அப்பா நல்ல மரமாகும்?"

"நாலு வருஷம் ஆகும்."

"அது எப்போ அப்பா காய்க்கும்?"

"அதற்கு ஆறு வருஷம் ஆகும்!"

"அப்படியானல் ஆறு வருஷம் நாம் உயிரோடிருந்தால் இந்த மரத்தின் பழம் சாப்பிடலாம், இல்லையாப்பா?"

"ஆறு வருஷம் நீ மட்டும் உயிரோடிருந்தால் போதாது?"

"ஏன் அப்பா?"

"ஆறு வருஷம் செடியும் உயிரோடிருக்க வேண்டும்!"

"ஏன் அப்பா அப்படிச் சொல்கிறாய்?"

"மனுஷனுக்கு எத்தனை ஆபத்துகள் நேரலாமோ, அத்தனை ஆபத்துகள் செடி கொடிகளுக்கும் நேரலாம். அதிக மழை பெய்து செடி அழிந்து போகலாம். மழையே இன்றி வெய்யில் காய்ந்து வெந்து கள்ளியாகவும் போகலாம். இரண்டுமின்றி ஆடுமாடுகள் வந்து, பசுமையாக இருக்கும் செடியை, நாம் கவனமின்றியிருக்கும்போது தின்றுவிட்டும் போய்விடலாம். இவ்வளவு மின்றிச் செடிகளுக்கு நோய்களும் வருவதுண்டு. அந்த நோய்கள் வந்தால் செடிகள் அப்படியே பட்டுப் போய் விடும். அதனால் இந்தச் செடி ஆறு வருஷம் கழித்துக் காய்த்துப் பழம் கொடுக்கும் என்று இப்போது பிடித்தே நிச்சயமாக ஒன்றும் சொல்லி விட முடியாது."

"செடி காய்ப்பதும், நாம் உயிரோடிருந்து சாப்பிடக் கொடுத்து வைப்பதும், சந்தேகமாக இருக்கும்போது நாம் ஏன் அப்பா விதை விதைத்துச் செடியை வளர்த்துப் பாடுபட வேண்டும்?"

"அது நமது கடமை. பலனை எதிர்பார்க்காமல், அவரவர்கள் தங்கள் காரியங்களைச் செய்ய வேண்டும். இப்படித்தான் நம் நாட்டில் மக்கள் இத்தனை வருஷ காலம் செய்து வந்திருக்கிறார்கள்."

"சமுதாயத்தில் தனிப்பட்ட நபர் பலனை எதிர்பாராது கடமையைச் செய்ய வேண்டும் என்கிறாயா, அப்பா!"

"அதுவேதான். நன்றாகப் புரிந்து கொண்டு விட்டாயே, கெட்டிக்காரன் நீ!" என்று தோட்டக்காரன் தன் மகனைத் தட்டிக் கொடுத்தான்.

* * *

11த்தாம் நூற்றாண்டிலே பாண்டியர்கள் தலைநகராகிய கூடல் மாநகரத்தில் ஒரு தண்ணிலவு வீசும் இரவு.

நிலா முற்றத்தில் பாண்டிய மன்னனும், பாண்டிய குமாரனும் உட்கார்ந்து அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள்.

"அப்பா!"

"என்ன குமாரா?"

"நீங்கள் மக்களிடமிருந்து அவர்கள் வருவாயில் ஆறில் ஒரு பங்கு வசூலிக்கப் போகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்."

"ஆமாம். உண்மையே."

"எதற்கப்பா?"

"கோயில்கள் கட்ட வேண்டும்; குளங்கள் வெட்டவேண்டும். ஏரிகள் நிர்மாணிக்கவேண்டும். இன்னும் தர்மாஸ்பத்திரிகள் பாடசாலைகள் அமைக்கவேண்டும்."

நீங்குறு பிரிவினுல்த்
தேய்ந்த தேய்வற,—
வீங்கின இராகவன்
மீளித் தோள்களே.

[ஆங்கவன் அமர்த்தொழிற்கு அனுவினன் என: ஏதோ ஒளிந்துகொண்டு வம்பும் தொந்தரவும் பண்ணிக் கொண்டிருப்பானே ராவணன் என்ற சந்தேகம் இருந்தது ராமனுக்கு. அந்தச் சந்தேகம் தீர்ந்தது இப்போது. நேர் நேராகவே யுத்தம் செய்ய வந்துவிட்டான் என்பதைத் தெரிந்த மாத்திரத்தில் ராமனது கவலை நீங்குகிறது; வாங்கினன் சிலையை என்னும் வன்மையால்: சிலையே கைக்கு வந்தமாதிரி ஒரு உணர்ச்சி பிறந்து அதன் காரணமாக உடலுக்கு ஒரு திடம் உண்டாகி; நீங்குறு பிரிவினுல்த் தேய்ந்த தேய்வு அற: மிக்க கேடு உண்டாக்கும் பிரிவினுல் ஏற்பட்ட மெலிவு நீங்கவும்; வீங்கின இராகவன் மீளித் தோள்களே: தடித்துப் பூரித்தன ராமனது வலிய தோள்கள்.]

தந்திரத்திலும் ஏமாற்றத்திலும் பகையாளி தொந்தரவு செய்து கொண்டிருக்கலாம். அது யாருக்கும் சமாளிப்பது கஷ்டமான காரியம். நேருக்கு நேராக யுத்தம் செய்ய வந்தால், வீரம் திடம் எல்லாம் தொழில் செய்யும். அது வீரர்களுக்கு உவந்த காரியம்.

'ராவணன் தோன்றினன் யுத்த களத்தில்' என்று கேட்ட மாத்திரத்தில் ராமனுக்கு வந்த உறுதியும், களிப்பும் உண்மையான உணர்ச்சிகள். வீர தத்துவத்தோடு பொருந்தியவை.

அருமையான பாவம் கொண்ட செய்யுள்.

அடக்கம்

காந்திமகான் சிறையிலிருந்த பொழுது தம் ஆசிரமவாசிகளுக்கு எழுதிய ஒரு கடிதம்:—

சத்தியத்தையும் அஹிம்சையையும் நித்திய கர்மானுஷ்டானங்கள் மூலம் பயிரைப்போல வளர்க்க முடியும். ஆனால் அடக்க மனோபாவத்தை மட்டும் எவ்வித அப்பியாசத்தினாலும் வளர்க்க முடியாது. அடக்கம் என்பது உள்ளத்தின் பண்பு. சத்தியம், அஹிம்சை இவற்றை அளந்து விடலாம். ஆனால் அடக்கம் என்னும் பண்பை மட்டும் அளக்கவே முடியாது.

அடக்கமுள்ள மனிதனுக்குத் தன் விடத்தில் அந்தப் பண்பு இருக்கிறது என்பது தெரியவே தெரியாது.

இதை விளக்க விசுவாமித்திரரையும், வசிஷ்டரையும் குறித்து ஒரு கதை சொல்வது உண்டு.

கங்கா நதியின் இக்கரையில் வசிஷ்டரின் ஆசிரமமும் அக்கரையில் விசுவாமித்திரரின் ஆசிரமும் இருந்தன. ஒரு நாள் வசிஷ்டர் தம் பத்தினி அருந்ததியை அழைத்து, "அக்கரையிலிருக்கும் விசுவாமித்திரருக்கு அன்னமளித்து விட்டு வா" என்று கட்டளையிட்டார். அருந்ததி ஆகாராதிகளை எடுத்துக் கொண்டு கங்கைக் கரையை அடைந்தாள். கங்கையில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அவள் எப்படித் தாண்டுவாள்! ஆகவே திரும்பி வந்து தன் கணவரிடம் மிகப் பணிவாக, "கங்கையில் கரைபுரண்டு வெள்ளம் ஓடுகிறதே! எப்படித் தாண்டுவது?" என்று கேட்டாள்.

"கங்கைக் கரைக்குச் சென்று, கங்கையைப் பிரார்த்தித்து, 'ஹே கங்கா தேவி! விசுவாமித்திரர் அடக்க முள்ளவரானால் எனக்கு வழிவிடு' என்று சொல்" என்றார் வசிஷ்டர்.

அருந்ததி கங்கைக் கரையை அடைந்து அவ்வாறே வேண்டிக் கொண்டாள். கங்கை நதியும் வழி விட்டது. அக்கரை சென்று விசுவாமித்திரருக்கு ஆகாரம் அளித்தாள்.

கங்கையில் பூரணப் பிரவாகம் ஓடுகிறதே? எப்படித் திரும்புவது என்று விசுவாமித்திரரை வணங்கிக் கேட்டாள். அதற்கு அவர், "'அம்மா, என் கணவர் நித்தியப் பிரும்மசாரியானால் எனக்கு வழி விடு!' என்று கேட்டுப் பாருங்கள்" என்று சொல்லியனுப்பினார்.

அவ்விதமே அருந்ததி பிரார்த்திக்க ஆறும் வழி விட்டது.

அவ்விரு முனிவர்களும் தத்தம் பலத்தை அறிந்திலர். விசுவாமித்திரர் பெருமையை வசிஷ்டர் உணர்ந்திருந்தார். ஆகவே அவர் அவ்விதம் கூறினார். பல பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்த பொழுதிலும் காமத்துக்கு இலக்காகாமல் வசிஷ்டமுனிவர் இருந்தமையால் அவரை நித்தியப் பிரும்மசாரி என்றார் விசுவாமித்திரர்.

ஆகவே அடக்கம் அப்பியாசத்தினால் வருவதில்லை. அது உள்ளத்தின் பண்பு என்று விளங்குகிறதல்லவா!



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

280. வீங்கின வைரத் தோள்களே !

ராவணனது தேரின்மேல் நீண்டு உயர்ந்து வீசிக்கொண்டிருந்த யாழ்க் கொடியைப் பார்த்தோம்.

அந்தத் தேருக்குப் பக்கத்திலும் பின்னுமாக வேறு பல தேர்களும் யானைப் படைகளும் குதிரைப் படைகளும் நெருங்கி வந்தன. காலாட் படைகளும் திரள் திரளாக ராவணனது தேரைச் சுற்றி வந்தன.

மிக வலிமை கொண்டவான், வேல் முதலிய ஆயுதங்கள் பளபளவென்று மின்ன யுத்த சன்னத்தனாய் ராவணன் தோன்றுகிறான். இரு பக்கத்திலும் வந்த அரும் போர் வீரரான அரக்கர்கள் வீர முழக்கம் செய்து நெருங்கி வருகிறார்கள்.

ஊன்றிய பெரும்படை
ஒளிர,—உற்றுடன்
ஆன்ற போர்அரக்கர்கள்
நெருங்கி ஆர்த்தெழத்,
தோன்றினன் ;— உலகெலாந்
தொடர்ந்து நின்றன
மூன்றையுங் கடந்தொரு
வெற்றி முற்றினான்.

[ஊன்றிய பெரும் படை ஒளிர : உறுதியாகக் கட்டிய படைக்கலன்கள் பிரகாசிக்க ; உற்றுடன் ஆன்றபோர் அரக்கர்கள் : பக்கத்தில் சிறந்த போர்க்கலை வல்லவரான அரக்கர்கள் ; நெருங்கி ஆர்த்தெழ : நெருங்கி ஆரவாரித்து வர ; தோன்றினன்—ஊன்றிய பெரும்படை ஒளிரத் தோன்றினான் ; உலகெலாம் தொடர்ந்து நின்றன மூன்றையும் : உலகங்கள் எல்லாவற்றையுமே அடக்கியுள்ள மேலுலகம், கீழ் உலகம் மத்திய உலகம் என்று சொல்லப்பட்ட மூன்றிலும் உள்ள பகைவர்களையும் ; கடந்தொரு வெற்றி முற்றினான் : போரில் வென்று வெற்றி கொண்டவன் என்று சொல்லும்படியான ராவணன்.

குறிப்பு :—ராவணனது சாம்ராஜ்யமும் வீரப் பிரதாபமும் யாருக்கும் இல்லாதபடி அவ்வளவு விரிந்து இருந்தன என்பது விஷயம்.]

வானரத் தலைவர்கள் ராவணனது கருங் கடலுக்குச் சமமான சேனையைப் பார்த்துக் கொண்டார்கள்.

'ஓதுறு கருங்கடற்(கு)
ஒத்த தானையான்
தீதுறு சிறுதொழில்
அரக்கன், சீற்றத்தால்
போதுறு பெருங்களம்
புகுந்துளான்' எனத்
தூதுவர் நாயகற்(கு)
அறியச் சொல்லினர்.

[ஓதுறு கருங்கடற்கு ஒத்த தானையான் : கருங்கடலுக்குச் சமானம் என்று நன்றாய்ச் சொல்லும்படியான (ஓதுறு) கரு நிற அரக்கச் சேனையை உடையவனான ராவணன் (தானை : சேனை); தீதுறு சிறு தொழில் அரக்கன் : மிகக் கேடான அற்பத் தொழில் செய்யும் ராவணன் ; சீற்றத்தால் போதுறு பெருங்களம் : கோப வெறி மயமாய் உள்ள அந்தப் பெரிய போர்க்களத்திற்குள் ; புகுந்துளான் என : வந்துவிட்டான் என்று ; தூதுவர் நாயகற்கு அறியச் சொல்லினர் : தூதுவர் ராமனிடம் வந்து சொன்னார்கள்.]

*
*

பகைவனான ராவணன் யுத்தம் செய்வதற்கே வந்துவிட்டான் என்று கேட்ட மாத்திரத்தில் என்றும் இல்லாத உத்ஸாகம் பிறந்துவிட்டது வீரனான ராமனுக்கு. சீதாப் பிராட்டியே தன் கைக்குள் வந்துவிட்டதாகவே எண்ணித் தேகத்தில் புதிய வலிமை ஊறிவிட்டது.

ஆங்கவன் அமர்த்தொழிற்(கு)
அணுகினானென,
வாங்கினன் சீதையை
யென்னும் வண்மையால்,

காலக்ஷேபம்



அட, பாவமே!

"நான் ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டேன், ஸார்!"

"ஓஹோ! அப்படி அங்கே யெல்லாம் போய்ச் சுற்றிப் பார்ப்பதற்கு என்னத்தைக் கெட்டுப் போக்கிவிட்டீர்கள்?"

★

எப்படி?

டாக்டர் (நோயாளியைப் பார்த்து):—கவலைப்படாதீர்கள்; எனக்கும் முன்பு உங்களுக்கு வந்திருக்கும் நோயே வந்திருந்தது. இப்பொழுது முற்றிலும் குணமாகி விட்டது......!

நோயாளி:—டாக்டர் ஸார், அப்படியானால் உங்களுக்குச் சிகிச்சை செய்த டாக்டரின் பெயரையும் விலாசத்தையும் தயவு செய்து சொல்லுங்களேன்!

★

அவசியமில்லை!

வீட்டுக்காரர் (குடியிருப்பவரைப் பார்த்து):—அப்பாடா! இப்பொழுதுதான் எனக்கு நிம்மதியாயிருக்கிறது......!

குடியிருப்பவர்:—ஏன், என்ன சமாசாரம்?

வீட்டுக்காரர்:—நீங்கள் தினம் தவறாமல் மேலேயிருந்த ஓட்டுக் காரை பெயர்ந்து விழுகிறது என்று என்னிடம் புகார் சொல்லிக் கொண்டே இருந்தீர்கள். ஒரு வாரமாக அந்தப் புகாரை நிறுத்திவிட்டீர்கள்!

குடியிருப்பவர்:—ஆமாம், இனிமேல் புகார் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மேல் காரையெல்லாம்தான் பெயர்ந்து கீழே விழுந்துவிட்டதே!

பரஸ்பரம்

சோமு:—என்ன அப்பா, ராமு! கிட்டு என்ன அவ்வளவு குதூகலமாயிருக்கிறான்? என்ன விசேஷம்?

ராமு:—அதுவா? அவன் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே ரொம்ப மலிவான விலைக்கு ஒரு பழைய சைக்கிளை வாங்கினான். அதுதான் அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை!

சோமு:—ஓஹோ! கிட்டு மலிவான விலைக்கு சைக்கிள் வாங்கினான் என்றால் அவனுக்கு ஆனந்தமாய்த்தான் இருக்கும். ஆனால் உனக்குக்கூட ஆனந்தம் பொங்குகிறதே! அது ஏன்?

ராமு:—ஆமாம், எத்தனையோ நாட்களாக என்னிடமிருந்த ஓட்டை சைக்கிளைத்தானே அவன் வாங்கியிருக்கிறான்!

★

உண்மையைச் சொன்னால்......

நீதிபதி (கூண்டில் நிற்கும் சாட்சியைப் பார்த்து):—பொய் சொல்லக் கூடாது. பொய் சொன்னால் என்ன நேரும், தெரியுமா?

சாட்சி:—ஊம், நான் நரகத்துக்குப் போவேன்......


நீதிபதி:—சரிதான்; உண்மையைச் சொன்னால் என்ன நேரும்?

சாட்சி:—உண்மையைச் சொன்னால் இந்த வழக்குத் தோற்றுப் போய்விடும்!

★

மோசம்!

"என்ன ஸார், அப்படி நினைத்துவிட்டீர்கள்? டனக் கலையே என் ரத்தத்தில் கலந்திருக்கிறது! அதில் நான் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமே இல்லை."



"வாஸ்தவம்; ரத்த ஓட்டம் உங்கள் சரீரத்தில் ரொம்பக் குறைவு என்று தெரிகிறது. ஏனென்றால் அது உங்கள் கால்களை இன்னும் எட்டிக் கூடப் பார்க்கவில்லை போலிருக்கிறதே!"

மேலும் முயற்சி செய்து பார்த்த பிறகு, கடைசியாகத் தம் மனைவியைக் கேட்கலாம் என்று முடிவிற்கு வந்தார்.

●

மார்கரெட் இப்போதெல்லாம் முன் போல இல்லை. மாதம் பிறந்ததும் பேராசிரியருடைய சம்பளத்தை வாங்கித் தானே 'நிதி மந்திரி'யாக இருந்து, அதட்டி வேலை செய்தாளே, அதை விட்டு விட்டாள். இப்போது அவர் சம்பளம் அவரிடமே இருந்தது. மார்கரெட்டுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்காக மாதந்தோறும் அவர் பணம் கொடுத்து வந்தார். அந்தப் பணத்தைக் கொண்டு அவள் பல புத்தகங்களை வாங்கினாள்; அவற்றை மிகவும் ஊன்றிப் படித்தாள். முக்கியமான தலைவர்களின் மனைவியர் வாழ்க்கையைப் பற்றிப் படிக்கும் போது அழகான மணி மொழிகளை நீலப் பென்சிலால் கோடிட்டு வைத்தாள். பிறகு ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தில் அவைகளை எழுதி வைத்தாள். பத்திரிகைகளில் ஒன்றைக் கூடப் படிக்காமல் விடுவதில்லை. படித்த பிறகு தான் அனுபவித்தவற்றைத் தன் கணவனிடம் சொல்லி மகிழ்ந்தாள். இவ்வாறு மார்கரெட்டின் அன்றாட வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது பிரான்விலுக்கு விளங்காத ஒரு புதிராகவே இருந்தது.

கடைசி முயற்சியாகப் பிரான்வில், மார்கரெட்டின் அறை, அவள் டயரி முதலியவைகளை அவள் இல்லாத சமயங்களில் சோதித்துப் பார்த்தால் ஏதாவது கிடைக்கும் என்று எண்ணங் கொண்டார். ஒருநாள் அவள் 'லேடீஸ் கிளப்'பிற்குப் போயிருந்த சமயத்தில் அவள் அறைக்குள் முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே நுழைந்தார். அங்கிருந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் பரிசோதித்துப் பார்த்தார். அவர் முயற்சி தோல்வி அடையும் போலிருந்த சமயத்தில் அவள் டயரி குறுக்கே வந்தது. சாதாரணமாக அவள் வெளியே செல்லும்போதெல்லாம் தன் டயரியை எடுத்துக் கொண்டு போவது வழக்கம்; ஆனால் அவரது அதிருஷ்டவசமாக அன்று டயரி கிடைத்தது. அவர் புரட்டிக்கொண்டே வந்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் நெஞ்சு 'டபடப' என்று அடித்துக்கொண்டிருந்தது. கடைசியில் 1949 டிசம்பர் 15-ந் தேதிக்காக விடப்பட்டிருந்த இடத்தில் ஒரு சிறிய பத்திரிகைச் செய்தி கத்தரித்து ஒட்டப் பட்டிருந்தது. அதன்மேல்



"என் வாழ்வையே மாற்றிய செய்தி" என்று எழுதப் பட்டிருந்தது. அந்தச் செய்தி பின்வருமாறு:

கணவனுக்குத் தன் எலும்பைக் கொடுத்த காதலி

போஸ்டன், டிசம்பர் 12.

இங்கு இளம் பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் முதுகு எலும்புக் கோளாறைக் குணப்படுத்துவதற்கு அந்த நோயாளியின் மனைவி தன் கால் எலும்பையே கொடுத்ததாக மெஸாசுஸெட்ஸ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் அறிவிக்கின்றனர். அவளுடைய காலிலிருந்து எலும்பை எடுத்துக் கணவனின் முதுகு எலும்பிலிடையே பொருத்தி விட்டால் அவன் குணமடைந்து சாதாரண வாழ்க்கை நடத்த முடியுமென டாக்டர்கள் சொன்னார்கள். மனைவி சம்மதித்தாள்.

பேராசிரியர் இந்தச் செய்தியைப் படித்து முடிப்பதற்கும், அவருடைய மனைவி 'லேடீஸ் கிளப்'பிலிருந்து வருவதற்கும் சரியாயிருந்தது. தம் மனைவி வந்துவிட்டதை அறிந்ததும் பேராசிரியர் வெலவெலத்துப் போனார். நெற்றியில் துளித்த வியர்வையை அவர் தம் கைக்குட்டையால் அவசரம் அவசரமாகத் துடைத்துக் கொண்டே, "உன் அறையில் நீ இல்லாத வேளையில் நுழைந்து டயரியைப் பார்த்ததற்காக ..." என்று ஏதோ மென்று விழுங்கிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

மார்கரெட் குறுக்கிட்டு, "இதுவரை நடத்திய பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட்டு நான் தங்களுக்கு உண்மையான மனைவியாகி விட்ட பிறகு, தாங்கள் என் அறையில் நுழைந்ததையோ, டயரியைப் புரட்டிப் பார்த்ததையோ தவறாகக் கொள்ள மாட்டேன். தாங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும், இவ்வளவு நாள் நான் நடத்திய வாழ்க்கைக்காக!" என்றாள்.



பார்கள். ஆனால் பொறுமையின் உருவமான பிரான்வில் எவ்வாறே சமாளித்துக் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளை ஓட்டி விட்டார். இன்னும் சிறிது காலம் தள்ளி விட்டால் ஏழாண்டுகள் கழித்துத் தாம் 'ரிடய'ரான பிறகு மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தைக் கொண்டுதான் பிரான்வில் தம் வாழ்நாட்களைக் கடத்திக்கொண்டு வந்தார்.

●

இரண்டு வருடங்கள் சொல்லாமல் பறந்து விட்டன. அவர்கள் வாழ்க்கை அதேமாதிரிதான் நடந்து வந்தது. ஆனால் இப்போது பிரான்வில் வேறு வழிகளைக் கையாளத் தொடங்கினார். 'இலட்சியத் தம்பதிகள் எவ்வாறு இருப்பார்கள்?' என்று எந்தப் பத்திரிகையிலாவது எழுதியிருந்தால் உடனே அதை வாங்கித் தம் மனைவி பார்க்கும் இடத்தில் வைப்பார். 'உலகத்தில் பேரறிஞர்களுடைய மனைவிகள் எவ்வாறு இருந்தனர்?' என்பது போன்ற நூல்களை வாசகசாலைகளிலிருந்து வாங்கி வந்து, மனைவியின் பார்வை விழும் இடத்தில் வைப்பார். ஆனால் அவைகளை எல்லாம் மார்கரெட் மேலெழுந்தவாரியாகப் புரட்டிப் பார்த்து விட்டு 'நான்ஸென்ஸ்' 'யூஸ் லெஸ்' என்று ஏதாவது கூறி வீசி எறிவாள். பேராசிரியர் அவற்றைப் பொருட்படுத்தாமல் இலட்சியத் தம்பதிகளின் வாழ்க்கையை வர்ணிக்கும் சினிமாப் படங்கள் வந்தால் தம் மனைவிக்கு இலவசமாக டிக்கெட் வாங்கிக் கொடுத்துப் போகச் சொல்வார். பெரிய மனிதர்கள், அரசியல் பிரமுகர்கள் முதலியவர்களின் மனைவிமார்கள் சேர்ந்து ஏற்படுத்தியிருந்த 'லேடீஸ் கிளப்'பில் தம் மனைவியை அங்கத்தினராகச் சேர்த்தார்—அவர்களோடு சேர்ந்து, பேசி, பழகியாவது தம் மனைவி திருந்த மாட்டாளா என்ற எண்ணத்தில்! எதிலும் ஒருவிதமான பலனும் ஏற்படவில்லை. மேலும் மேலும் அவள் பிடிவாதமும், அதிகாரமும், ஆர்ப்பாட்டமும் அதிகரித்தனவே தவிரக் குறைந்தபாடாயில்லை.

திடீரென்று ஒரு நாள் ......!

எத்தனையோ நூல்களின் உதவியாலும், சினிமாப் படங்களின் துணையாலும் திருந்தாத அவள் உள்ளம் திடீரென மாறி விட்டது; பல ஆண்டுகளாக அவளைப் பிடித்திருந்த நோய் எப்படியோ பறந்து விட்டது. தம் மனைவியின் நடவடிக்கைகளில் பேராசிரியர் புரட்சிகரமான மாறுதலைக் கண்டார்; மனம் மகிழ்ந்தார். மார்கரெட்டின் இந்த மாறுதலுக்குக் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிக்க முயன்றார். எப்படித் திடீரென்று இவளது பிடிவாத குணமும், அதிகாரத் திமிரும் மறைந்தன? இப்பொழுதெல்லாம் இவள் என் தன்னைக் கலந்துகொண்டு காரியம் செய்கிறாள்? கேட்ட போதெல்லாம் பணம் கொடுத்து விடுகிறாளே, இது எப்படி? எதனால் இவள் உள்ளம் இப்படி ஒரேயடியாக மாறிவிட்டது?

சமீபத்தில் ஏதாவது நல்ல சினிமாப் படத்திற்குச் சென்று அதனால் அவள் மனம் மாறிவிட்டதோ? ஊஹூம்—இலவச டிக்கட்டுகள் வாங்கிக் கொடுத்தாலே போவதற்கு மூக்கால் அழுவாள்; தானாகவா போயிருக்கப் போகிறாள்?

அறிஞர்கள், விஞ்ஞானிகள் முதலியோரின் மனைவிகளைப் பற்றிப் படித்து அவள் மனம் திருந்தி இருக்கலாமோ? அதுவும் இருக்காது; அப்போதே பலன் தராத அது இப்போது எப்படிப் பலன் தந்திருக்கும்?

வேறு ஏதாவது வழிகள் இருந்திருக்குமா என்று எண்ணிப் பார்த்தார். என்னென்னவோ கேள்விகளைத் தமக்குள் கேட்டு, இதனால் அவள் மாறியிருப்பாளோ என்று யோசித்தார்; பிறகு தாமே இந்த மாதிரி நடந்திருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். கடைசியில் தம் மனைவியையே கேட்டுவிடலாம் என்று நினைத்தார். ஆனால் தன்னால் சாதாரணமான ஒரு மனோதத்துவப் புதிரை விடுவிக்க முடியவில்லையே என்ற வருத்தம் ஏற்பட்டது. இருந்தாலும்

மனோதத்துவம்

நா. ஜகந்நாதன்

சென்னையில் பிரான்ஸிஸைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அரசாங்கக் கல்லூரி ஒன்றில் மனோதத்துவப் பேராசிரியராக விளங்கிய அவர் மிகவும் பிரபலமான ஓர் ஆங்கிலோ இந்தியர். பொறுமைக்கு உறைவிடமாகவும், அறிவின் இருப்பிடமாகவும் இருந்து வந்த அவருக்கு வாய்த்த மனைவி மார்கரெட் நேர் எதிரான குணங்களைக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் எப்படி வாழ்கிறார்கள் என்பது 'உலகிற்கு ஒரு புதுமை'யாக இருந்தது.

பிரான்ஸிஸுக்கு நாற்பத்தெட்டு வயதாகிறது. எம். ஏ. பட்டம் பெற்ற இரண்டு வருடங்களில் மனோதத்துவத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து எம். லிட்., பட்டம் பெற்றார். அதற்குப் பிறகு பேராசிரியர் பதவி அவரைத் தேடி வந்தது. "அவர் வகுப்பில் மணி போவதே தெரியாது" என்பார்கள் சில மாணவர்கள். "ஆசிரியரென்றால் அவரல்லவா ஆசிரியர்!" என்று சிலர் கூறினர். "அவர் முகத்திலேயே மாணவர்களைக் கவரும் சக்தி இருக்கிறது!" என்று மற்றும் சிலர் உரைத்தனர். மாணவர்கள் எல்லாருடைய அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்த அவரை, மற்ற ஆசிரியர்கள் ஓர் 'இலட்சிய புருஷ'ராகக் கருதிக் கொண்டாடினர். இவ்வாறு கல்லூரியிலும், வெளி உலகத்திலும் மிகவும் புகழ் பெற்றிருந்த அவர், தம் மனைவியைக் கண்டதும் நடுங்குவார் என்பது சிலருக்கு ஆச்சரியமாகத் தானிருந்தது. ஆனால் மற்றும் சிலரோ 'இது வீண் வதந்தி; அவருக்குள்ள புகழைக் குறைக்க விஷமிகள் செய்யும் வேலை!' என்றனர்.

பிரான்ஸிஸ் கல்லூரியில் சம்பளமாகப் பெற்ற இருநூற்றெழுபது ரூபாயையும் அப்படியே தம் தர்ம பத்தினியிடம் கொடுத்து விடுவார். எல்லாச் செலவுகளையும் அவளே செய்வாள். தமக்கு ஏதாவது வாங்க வேண்டுமென்றாலும் அவளிடம் பலமுறை கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிறகு, கேட்ட பணத்தில் பாதியோ, அதற்கும் குறைவாகவோ கிடைக்கும். பிரான்ஸிஸ் மனோதத்துவத்தில் கரைகண்டவராதலால் அவரவர்கள் மனப்போக்குப்படி விட்டு விட வேண்டும் என்ற கொள்கை உடையவர். ஆகவே தம் மனைவியின் கொள்கைகளுக்கு விரோதமான கொள்கைகளைக் கொண்டு அவளிடம் சண்டை போடாமல் அவள் போகிற வழியே செல்ல விட்டு, அதனால் உண்டாகக் கூடிய கலகங்களைத் தவிர்த்தார். இதன் காரணமாகத்தான் அவர் தம் மனைவியின் சொற்படி நடந்து வந்தாரே தவிர வேறுவித காரணங்களால் அல்ல என்று நிச்சயமாகக் கூறலாம்.

ஆனால் இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடிக்கும் மனிதர்களைப் போல, மார்கரெட் தன் கணவர் தன்னிடம் அடங்கி நடப்பதைக் கண்டு கர்வம் கொண்டாள்; தன்னிடம் ஏதோ ஒரு சக்தி இருப்பதால் தான் எம். ஏ., எம். லிட். பட்டங்கள் பெற்ற ஒரு பேராசிரியர் அடங்கி நடப்பதாக நினைத்தாள். ஆகவே இன்னமும் தன் 'செங்கோலைச் செலுத்த' ஆரம்பித்தாள். பிரான்ஸிஸ் ஏதாவது நல்ல புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்க நினைத்தால் அவள் கொஞ்சத்தில் பணம் கொடுக்க மாட்டாள். 'அந்தப் புத்தகங்கள் இல்லாமல் உம்மால் ஆசிரியர் பதவி வகிக்க முடியாதா?' 'இந்தப் பத்திரிகைகள் இல்லாவிட்டால் என்ன குறைந்துவிடும்?' என்றெல்லாம் குறுக்குக் கேள்விகள் கேட்பாள். உடை விஷயத்தை எடுத்துக் கொண்டாலோ, 'இப்போதிருக்கும் 'டை' போதாதா?' 'சட்டையை இதற்குள் என் சலவைக்குப் போடவேண்டும்?' 'இந்த பூட்ஸ் இன்னும் இரண்டு மாதமாவது உழைக்குமே!" என்று பலவிதமான கேள்விகளைக் கேட்டுப் பேராசிரியரைத் திணற அடிப்பாள்.

நாளுக்குநாள் மார்கரெட்டின் அதிகாரம் வலுக்க ஆரம்பித்தது. பேராசிரியர் ஒன்றும் பேசாமல் தம் காரியங்களைக் கவனித்தார். பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒழிய, மற்ற நேரங்களில் பேச்சுக் கொடுத்து வீண் சண்டைகளுக்கு விதை தூவ மாட்டார். என்ன இருந்தாலும் மனத்தின் தத்துவத்தை அறிந்தவரல்லவா, அவர்? பிரான்ஸிஸின் இடத்தில் வேறு எவராவது இருந்திருந்தால் நிச்சயமாகக் கல்யாணம் செய்துகொண்ட இரண்டாவது மாதத்திலேயே 'விவாகரத்து' செய்திருப்

பாலசந்திரன் பதிலே பேசவில்லை. அவன் திகைத்துப் போய் விட்டான். லலிதாவும் பேசாமல் எழுந்து சென்றுவிட்டாள்.

அதுவரை அவர்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ஓர் உருவம், லலிதா சென்றதும் அங்கிருந்து நகர்ந்தது.

3

வாரம் ஒன்று ஓடி மறைந்தது. "ஏண்டா ராமு! வீட்டைக் காலி பண்ணப் போகிறாயாமே, ஏன்?" என்று கேட்டனர் தாத்தாவும் மற்றவர்களும்.

"அத்தையைக் கிராமத்திற்கு வரச்சொல்லிக் கடிதம் வந்திருக்கிறது. அவள் போக வேண்டும். அப்புறம் நான் மாத்திரம்தான். இங்கே ஆபீஸுக்குப் பக்கத்திலே ஓர் அறை காலியாயிருக்கிறது. ஹோட்டலும் அதற்குப் பக்கத்திலேயே இருக்கிறது. அப்படியே இருந்துவிடலாம்னு பார்க்கிறேன்!"

துக்கம் தொண்டையை அடைக்க, ராமு இந்த வார்த்தைகளைச் சொன்னான்.

"நன்றாத்தானிருக்கு, நீ நம் அகத்திலேயே சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாமே!" என்றாள் லலிதாவின் தாயார்.



மானேஜர் (தமாஷாக):— ஏண்டா, உன்னை மானேஜராகப் போட்டுவிட்டு நான் ஆபீஸ் பையனாக இருந்தால், நீ முதலில் என்னடா பண்ணுவே?

ஆபீஸ் பையன்:—முதலிலே ஆபீஸ் பையனை வேலையை விட்டு நீக்கிவிடுவேன், ஸார்!

"வேண்டாம், எனக்கு அதுதான் சௌகரியம்!" என்று ராமு மறுத்துவிட்டு, பாலுவிடம் வந்து "மிஸ்டர் பாலு, தொந்தரவு தருவதற்கு மன்னிக்கவும். ஒரு ஐந்து நிமிஷம் உங்களுடன் நான் தனிமையில் பேச வேண்டும்" என்றான்.

பாலுவும் ராமுவும் பேசுவதை மறைந்து நின்று கேட்டாள் லலிதா.

"நான் இன்று வேறு வீட்டிற்குப் போகிறேன். அதற்குமுன் உங்களிடம் ஒரு விஷயம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் வந்தேன்" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு "நான்கு வருஷங்களுக்கு முன் லலிதாவைப் போன்ற உயிருக்குயிரான ஒரு சகோதரியைப் பறி கொடுத்துவிட்டு, நான் இந்த வீட்டிற்கு வந்தேன். என் கண்களுக்கு லலிதாவே அந்தச் சகோதரியாகத் தோன்றினாள். ஒரு சகோதரன் செய்யவேண்டிய கடமைகள் எதுவோ அவைகளை லலிதாவுக்கு இன்று வரை நான் செய்து வந்திருக்கிறேன். நானும் அவளும் பழகிய விதத்தை நீங்கள் நேரிலிருந்து பார்த்திருந்தால் இப்படிப்பட்ட சந்தேகமெல்லாம் உங்களுக்கு எழுந்திருக்காது. தயவுசெய்து உங்கள் சந்தேகத்தை விட்டுவிடுங்கள். இனி அவள் என்னைப் பார்க்க வேண்டாம், என்னுடன் பேச வேண்டாம். அவள் எங்காவது சந்தோஷமாக இருக்கிறாள் என்ற செய்தி என் காதில் விழுந்தால் அதுவே போதும். அதற்குத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன். அதைத் தெரிவிக்கத்தான் தனிமையில் உங்களை அழைத்தேன். நான் வரட்டுமா?" என்றான் ராமு.


திக்பிரமை அடைந்த பாலு, "ராமு, உங்களைப் பற்றி நான் தவறாக நினைத்துக் கொண்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே ராமுவின் கைகளைப் பற்றினான்.

"மன்னிக்க வேண்டிய அவசியமில்லை; இது உலகில் இயற்கை!" என்று சொல்லிக் கொண்டே ராமு வெளியே வந்தான்.

அங்கே லலிதா நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும், "லலிதா! நான் போய் விட்டு வருகிறேன்!" என்று துக்கத்துடன் சொல்லிவிட்டு நடந்தான் ராமு.

அவன் கண்கள் கலங்கின.

லலிதா பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை. மனம் குமுற, கண்களில் நீர் வழிய அவன் சென்ற வழியையே அவள் பார்த்துக் கொண்டு நின்றாள்.



காப்பியை ஒரு வாய் பருகிய லலிதாவின் தந்தை, "ஏது அம்மா, சர்க்கரை? பிளாக் மார்க்கெட்டில் வாங்கினாயா?" என்று கேட்டார்.

"பிளாக் மார்க்கெட்டுமில்லை; ஒன்றுமில்லை. எல்லாம் ராமுவின் தயவு!" என்று சொல்லிக் கொண்டே லலிதா, ராமுவை நன்றி பொங்கும் விழிகளால் பார்த்தாள். பாலு அதைச் சந்தேகக் கண்களால் பார்த்தான்.

பதினைந்து தினங்கள் லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்த பாலு, வந்த இரண்டு தினங்களிலேயே ஊருக்குக் கிளம்புவதின் காரணமறியாது எல்லோரும் திகைத்தனர்.

அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பாலுவால் சரியான பதில் அளிக்க முடியவில்லை.

"லலிதாவைப் பிடிக்கவில்லையா?" என்று அவளைத் தவிர மற்றவர்களெல்லோரும் பாலுவைக் கேட்டனர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்ற ஒரே பதிலைத்தான் அவன் திருப்பித் திருப்பிக் கூறினான்.

அன்று மாலை லலிதா வீட்டில் யாருமில்லாத சமயம் பார்த்து, "என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று பாலுவைத் தட்டுத் தடுமாறிக் கொண்டே கேட்டு விட்டாள்.

மறு கணம் அவள் வதனத்திலே, நாணம் ரோஜா வர்ணத்தைத் தீட்டியது.

அவனும் ஒரு கணம் பதில் கூறமுடியாமல் தடுமாறித்தான் போனான். பிறகு, அவன் கூறிய பதில் அவளைத் திடுக்கிட வைத்தது.

"நீ ராமுவுடன் அவ்வளவு சகஜமாகப் பேசுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லையே தவிர, உன்னை எனக்குப் பிடிக்காமற் போகவில்லை. என்ன இருந்தாலும் அவன் 'யாரோ ஒருவன்!' உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன் கூட இல்லை..."

"நீங்கள் ராமுவைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர் என் சகோதரர் ஸ்தானத்திற்கும் மேலான ஸ்தானம் வகிப்பவர். தயவுசெய்து உங்கள் தவறான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுங்கள். அவரைப்போன்ற மனிதர் கிடைப்பது அரிது. அவருடன் பேசாமல் என்னால் இருக்க முடியாது."

அவள் உள்ளம் கொதித்தது. ராமுவின் மீது பாலு அநியாயமாக குற்றம் சாட்டுவதை அவளால் பொறுக்கமுடியவில்லை. வார்த்தைகள் படபடப்புடன் வெளிவந்து விட்டன.

சில சமயம், "நீ எனக்குப் பேரனாக இருந்திருக்க வேண்டுமடா, ராமு!" என்று நன்றி மிகுதியில் கூறுவார் தாத்தா.

அதேமாதிரி லலிதாவும் 'ராமு தனக்குச் சகோதரனாக இருந்திருக்கக் கூடாதா?' என்று நினைத்துப் பார்த்திருக்கிறாளே தவிர அவன் கணவனாக இருந்திருக்கக்கூடாதா என்று அவள் நினைத்ததே இல்லை.

அதற்கேற்றாற்போல் ராமுவும், "நம்ம லலிதாவுக்கு ஒரு வரன் இருக்கிறான், தாத்தா! நல்ல இடம். பையனைக்கூட எனக்குத் தெரியும். பீ. ஏ. ஆனர்ஸ் பாஸ் செய்திருக்கிறான். நல்ல வேலை; நல்ல குணம். வேண்டுமானால் பாருங்கோ, வரும் தை மாதத்திலேயே கல்யாணத்தை முடித்து விடலாம்" என்பான்.

தாத்தாவும் பேத்தியும் அவன் பொறுப்பு மிகுந்த பேச்சைக் கேட்டுப் பூரித்துப் போவார்கள்.

2

"என்ன லலிதா, பிரமாத யோசனை?"

ராமுவின் குரலொலியால் லலிதாவின் சிந்தனை தடைப்பட்டது. அவனிடமிருந்து கறிகாய்ப் பையைப் பெற்றுக்கொண்ட லலிதா, சமையல் வேலையில் ஈடுபட்டாள்.

அன்று மாலை "என் அம்மா, லலிதா! உன் அப்பா இன்றைக்கு வருவதாகக் கடிதம் எழுதி இருக்கிறானே, நீயும் வேண்டுமானால் ஸ்டேஷனுக்கு வருகிறாயா? நானும் ராமுவும் போகிறோம்!" என்றார் தாத்தா. "சரி" என்று சொல்லி, அலங்காரத்திற்கு ஆயத்தம் செய்ய ஆரம்பித்தாள் லலிதா. சிறிது நேரத்துக்கெல்லாம் மூவரும் ஸ்டேஷனுக்குக் கிளம்பினர்.

அங்கே அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அதாவது, தாய் தந்தையருடன் ஒரு நவநாகரிக யுவனும் இறங்கினான். அவனைக் கண்டு ராமு திகைத்துப்போனான். புதிதாக வந்தவன் வைத்த விழி வாங்காது ராமுவையும் லலிதாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்னப்பா, ராமு! எப்படி இருக்கே? சௌக்கியமா?" என்று லலிதாவின் தந்தை ராமுவின் முதுகில் ஒரு 'ஷொட்டு' வைத்தார்.

அவருடன் வந்திருந்த வாலிபனின் பெயர் பாலசந்திரன். அவன் அவருக்குத் தூரத்து உறவினன். ஏழ்மை நிலையிலிருந்த அவனைத் தம்முடன் பம்பாய்க்கு அழைத்துப் போய் ஒரு நல்ல உத்தியோகத்தில் அமர்த்தினார். கெட்டிக்காரத் தனத்தினாலும் நல்ல குணத்தினாலும் பாலசந்திரன் உத்தியோகத்தில் பெரிய பதவியை அடைந்தான். இதனால் லலிதாவைப் பாலசந்திரனுக்கே கல்யாணம் செய்து கொடுத்து விடுவதென்று அவளுடைய பெற்றோர் நிர்மாணித்திருந்தனர்.

பாலசந்திரன் எட்டிய உறவினனாய் இருந்தாலும் லலிதாவுடன் நெருங்கிப் பழகியவன். அவனுடைய குணம் அவள் மனதைக் கவர்ந்ததுண்டு. நெடு நாட்களுக்குப் பிறகு பாலசந்திரனைப் பார்த்தபொழுது அவளுக்கு என்னவோ போலிருந்தது. அவன் இளமையும் அழகும் அவளை வசீகரித்தன. அவனும் அவளைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பில்தான் வந்திருந்தான்.

• • •

மறு நாள் காலை, "ராமு! டிப்போவிலிருந்து கொஞ்சம் பால் வாங்கிக் கொண்டு வருகிறீர்களா?" என்று பாத்திரத்தை அவனிடம் கொடுத்தாள் லலிதா.

அதை ஒருவிதமாகக் கவனித்தான் பாலு. ராமு டிப்போவிலிருந்து பால் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்ததும் எல்லோருக்கும் காப்பி போட்டுக் கொடுத்தாள் லலிதா.



நாட்டுப் புறத்தான் (டாக்டரைப் பார்த்து):—என்னங்க டாக்டர்! நீங்க இவ்வளவு கேள்வி கேட்கிறீங்க? நம்ம ஊரிலே ஒரு வெடர்னரி டாக்டர் இருக்காரு, அவர் ஒரு கேள்விகூடக் கேட்காமல் வியாதி என்னன்னு கண்டு பிடிச்சிடுறாரே!

"யாரோ ஒருவன்!"

கண்ணம்மா

"என்ன, அம்மா! காப்பி வெல்லப் பாகு வாசனை அடிக்கிறதே!" என்றார் தாத்தா, பேத்தியைப் பார்த்து.

"என்ன தாத்தா, பண்ணுகிறது? காலு பலம் சர்க்கரை எத்தனை காலைக்கு வரும்?" என்றாள் லலிதா.

"ராமுவிடம் எங்கேயாவது சர்க்கரை கிடைக்குமா என்று கேளேன்; பார்த்து வாங்கித் தருவான்."

"கிடைத்தால் அவர் வீட்டுக்கு வேண்டாமோ?" என்றாள் லலிதா.

"எதற்கும் கேட்டு வையேன்; கிடைத்தால் வாங்கித் தருகிறான். இல்லாவிட்டால் வெல்லப் பாகு இருக்கவே இருக்கிறது!" என்று கூறிவிட்டுத் தெருத் திண்ணைக்கு எழுந்து சென்று விட்டார் தாத்தா சுந்தரமய்யர்.

* * *

"ராமு! ஒரு பத்து பலம் சர்க்கரை எப்படியாவது வாங்கித் தர முடியுமா? தாத்தாவுக்கு வெல்லக் காப்பி பிடிக்கவே இல்லை, உங்களைக் கேட்கச் சொன்னார்!" என்றாள் லலிதா.

"அடுத்த வாரம்தான் முடியும். இப்போதைக்கு எங்க அத்தையைக் கேட்டுக் கொஞ்சம் வாங்கிக் கொள்ளேன்!" என்றான் ராமு.

"கேட்டேன்; உங்கள் அகத்திலும் இல்லையாம்!" என்று கூறிய லலிதா, சமையலறைக்குள் விரைந்து சென்று கையிலே ஒரு பையுடன் வெளியே வந்து, "இதைத் தாத்தாவிடம் கொடுத்து விடுகிறீர்களா?" என்றாள்.

"மார்க்கெட்டுக்குப் போகவேண்டுமா? நானே வாங்கி வந்து விடுகிறேனே! என்ன வேண்டும், சொல்லு? தாத்தாவைச் சிரமப் படுத்த வேண்டாம்" என்று பையை வாங்கிக் கொண்டான் ராமு.

லலிதாவுக்கும் தள்ளாத வயதிலே தாத்தாவுக்கு வேலையிடுவது கஷ்டமாகத்தானிருந்தது. தானும் வெளியே செல்லும் வழக்கம் கிடையாது. ராமு ஊரார் வீட்டுப் பிள்ளை. எப்படிப் போகச் சொல்வது என்று யோசித்தாள். அவனே போகச் சம்மதித்தது அவளுக்குச் சௌகரியமாக இருந்தது.

வேண்டியதைக் கூறிவிட்டு, நன்றியறிதலோடு அவனைப் பார்த்தாள் லலிதா.

அவன் சென்ற பிறகு ராமுவைப் பற்றி லலிதாவின் மனம் சிந்தித்தது. சகோதரன் ஒருவன் இருந்தால் தன்னை இத்தனை ஆதரவுடன் கவனிப்பானா? தம் வீட்டு விஷயங்களில்தான் அவனுக்கு எவ்வளவு கருத்து!

கரி மூட்டை வேண்டுமா? உடனே வாங்கிக் கொண்டு வந்து வைத்து விடுவான். மார்க்கெட்டுக்குச் செல்வது, வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் வாங்கி வருவது, சர்க்கரை கிடைக்காத சமயங்களிலெல்லாம் சர்க்கரை வாங்கித் தருவது எல்லாம் ராமுவின் வேலைகள்தான். இதனால் ராமு, தாத்தாவுக்கு உகந்த பேரனாக இருந்தான்; லலிதாவுக்கு ஏற்ற சகோதரனாக இருந்தான். மொத்தத்தில் ராமு அவர்கள் வீட்டு நபர்களிலே ஒருவனாக ஐக்யமாகி விட்டான் என்றால் மிகையாகாது.

நேரம் போவதே தெரியாமல் வேடிக்கையும் விளையாட்டுமாக அவன் தாத்தாவிடம் எத்தனையோ சகஜமாகப் பேசுவான். ஆனால் பேச்சு எல்லைமீறிப் போகாது. மரியாதை, சகோதர மனப்பான்மை, கடமை உணர்ச்சி முதலியவைகள் நிரம்பிய அவன் பேச்சும், நடத்தையும் லலிதாவை அவனிடம் மதிப்புக் கொள்ளச் செய்தன.

லலிதாவின் தந்தைக்கு அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்தவரும் உத்தியோகம். ஓர் இடத்தில் நிலையில்லாத அவருடன் மனைவி மாத்திரம் சென்று கொண்டிருந்தாள். அந்தச் சமயம் அவர் பம்பாயிலே தங்கி இருந்தார். லலிதா, தாத்தாவுடன் சென்னையிலேயே இருப்பதாகக் கூறிவிட்டாள். எப்பொழுதாவது ஒரு முறை தம் மகளை வந்து பார்த்துவிட்டுப் போவார் அவர்.

இடத்திற்காகத் தவிக்கும் இக்காலத்திலே, லலிதாவின் தாத்தா ராமுவுக்கும் அவன் அத்தைக்குமாக இரண்டு அறைகளை வாடகைக்கு விட்டது அவர்களுக்குப் பெருத்த உபகாரமாகத் தோன்றியது. அதற்காகத் தங்கள் நன்றியை அவர்கள் தாத்தாவுக்கு எத்தனையோ விதத்தில் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

வேண்டுமென்று தீர்மானம் செய்தார். வீட்டில் ஜாதகங்கள் மலைபோலக் குவிய ஆரம்பித்தன. கங்காதரன் விருப்பப்படி 'பாடக்கூடிய ஜாதகங்கள்' சிலவற்றை அவன் தகப்பனார் பொறுக்கி எடுத்து அவனிடம் கொடுத்தார். அவனும் தன்னுடைய பெயரை அந்தப் பெண்களின் பெயரோடு ஒட்ட வைத்துப் பார்த்து எது கேட்பதற்கு அழகாக இருக்கிறது என்று கண்டு பிடிப்பதில் முனைந்தான். ஒரு பெயரும் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எதற்கும் முயற்சி செய்து பார்க்கலாம் என்று 'பெண் ரேடியோவில் பாடுகிறாளா?' என்று அந்தந்த ஜாதகம் அனுப்பின பெற்றோருக்கு எழுதிக் கேட்கும்படி தகப்பனாரிடம் சொன்னான்.

கங்காதரனுடைய சங்கீத ஆர்வம் இப்பொழுது கரை கடந்துவிட்டது. ரேடியோவில் பாடப்போகும் அல்லது பாடி வரும் ஒரு பெண் தனக்கு மாலையிடப் போகிறாள் என்பது நிச்சயமாகிவிட்டது. அவள் பாட இவன் ரசித்தால்தானே நன்றாக இருக்கும்? அதற்காகச் சங்கீதத்தைப் பற்றின விமரிசனங்கள், ரேடியோ விமரிசனங்கள், இசைப் பயிற்சி நிகழ்ச்சிகள் — இவற்றிலெல்லாம் ஆர்வம் காட்டினான்.

இவனுடைய கலி தீர்க்கும் முறையில் ஒரு ஜாதகம் வந்தது. ஜாதகத்துடன் ஒரு பட்டியலும் வந்தது. அந்தப் பட்டியலில் 1946-ம் வருஷத்திலிருந்து ஆரம்பமாகி அன்றுவரை அந்த ஜாதகத்துக்கு உடைய பெண் ரேடியோ நிலையங்களிலும், மேடைகளிலும் செய்த கச்சேரிகளின் விவரம் கொடுக்கப்பட்டிருந்தது. "1946 ஜனவரி 23உ சென்னை ரேடியோ, 1946 பிப்ரவரி 7உ ஆகாசவாணி, 1946 ஏப்ரல் 17உ மறுபடி சென்னை ரேடியோ, 1946 ஜூன் டில்லி நிலையம்..." என்பது போன்ற சுமார் ஐம்பது கச்சேரிகளின் விவரம் அதில் இருந்தது. பட்டியலைப் படித்த பிறகே ஜாதகத்தைப் பிரித்தார் கங்காதரனுடைய தகப்பனார். அந்த ஜாதகியின் பெயரைப் படித்தவுடன் அவருக்கே ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அவள் பெயர் கங்கா! "டேய் கங்காதரா, இங்கே வா!" என்று ஒரே உற்சாகத்தில் கத்தினார் அவர். ஜாதகத்தையும் பட்டியலையும் படித்து முடித்த கங்காதரன் ஒரு பெருமூச்சும் இரண்டு நெடுமூச்சும் விட்டான். அவன் வாழ்க்கை லட்சியம் ஈடேறிவிட்டது!

'கங்கா — கங்காதரன், கங்கா-கங்காதரன் — எவ்வளவு பொருத்தமான, இனிமையான பெயர்!' என்று அவன் அந்தப் பெயரைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தான்.

மறுநாள் ஜாதகம் சரியாக இருக்கிறது என்று பெண்ணின் தகப்பனாருக்குத் தந்தி பறந்தது. தந்தி பறந்த சில நாட்களுக்கெல்லாம் தையும் பிறக்கவே, சிரஞ்சீவி கங்காதரன் — சௌ. கங்கா கல்யாணம் அதி விமரிசையாக நடந்தேறியது. ஸ்ரீமதி கங்கா ஸ்ரீமதி கங்காதரனாக மாறிவிட்டாள். கங்காதரன் தன் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறி விட்டதென்று நினைத்தான்.

கல்யாண சந்தடிகள் எல்லாம் அடங்கினவுடன் தனிமையில் தன் மனைவியைச் சந்தித்த கங்காதரன் அவளைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி, "கங்கா, உன்னுடைய அடுத்த ரேடியோப் புரோக்கிராம் எப்பொழுது?" என்பதுதான்.

தன் கணவன் தன்னுடைய சங்கீதத்தில் காட்டும் ஆர்வத்தைக் கண்டு மனம் மகிழ்ந்த கங்கா, "அடுத்த மாதம் 30-ம் தேதி நான் பாடவேண்டும்" என்று குயிலினும் இனிய குரலில் பதில் மொழிந்தாள்.

"பத்திரிகைகளிலும், வானொலியிலும் உன் பெயரை இனிமேல் 'கங்கா-கங்காதரன்' என்று அச்சிடும்படி ரேடியோக்காரர்களுக்கு எழுதி விடுகிறாயா?" என்று கங்காதரன் மெதுவாகக் கேட்டான்.

"அதற்கென்ன, அப்படியே எழுதிவிடுகிறேன். இனிமேல் அப்படிச் செய்வதுதானே முறை!" என்று அவன் சொன்னதை அப்படியே ஆமோதித்தாள் ஸ்ரீமதி கங்கா-கங்காதரன்.

சுவாமி கொடுத்த வரத்தைப் பூசாரி மறுப்பதென்பது வசனத்தில் மாத்திரம் இல்லை; உண்மையில் நடக்கிறது என்பது நம் கங்காதரன் விஷயத்தில் நிரூபணமாகி விட்டது. ஸ்ரீமதி கங்கா-கங்காதரனுடைய கடிதத்துக்கு ரேடியோவிலிருந்து வந்த பதிலில், "தங்களுடைய பெயரை மாற்றுவது சாத்தியமில்லை. ஏனென்றால், 'கங்கா — கங்காதரன்' என்ற பெயருடைய வேறொரு அம்மணி எங்கள் நிலையத்திலிருந்து சுமார் பத்து வருஷங்களாகப் பாடி வருகிறார். நடுவில் இரண்டு வருஷ காலம் அவர் வெளியூர் சென்றிருந்தபடியால், பாடாமல் இருந்து மறுபடியும் இந்த மாதத்திலிருந்து அவர் பாடத் தொடங்கியிருக்கிறார். ஒரே பெயருடன் இரண்டு நபர்கள் பாடுவது குழப்பத்தை உண்டாக்குவதாக இருக்கும். மேலும் பிரபலமாகியுள்ள கங்கா என்ற பெயரிலேயே உங்கள் கச்சேரிகளை ஒலிபரப்ப நாங்கள் விரும்புகிறோம்" என்று எழுதியிருந்தது!

தில் படிக்கும்போதே அவனுக்குத் தெரிந்து போயிருந்தது. கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு இருக்கும் மரியாதையும் அவர்களுக்கு ஜனங்கள் கொடுக்கும் ஆதரவும் அவனுடைய இளம் நெஞ்சில் அழுத்தமாகப் பதிந்து போயிருந்தது.

மூன்று மணி நேரம் நடக்கும் சங்கீத விழாக் கச்சேரிகளை நடுவே ஒரு அரை மணி நேரமே ஒலி பரப்பும் ரேடியோக்காரர்கள்கூட ஆறு மணி நேரம் கிரிக்கெட் ஆட்ட விவரத்தை ஒலிபரப்புகிறார்கள் என்றால் நம் கங்காதரன் கிரிக்கெட் ஆட்டப் புலியாக விளங்க விரும்பியதில் வியப்பில்லை. இந்த ஆட்டம் ஆடுவதில் பெயர் பெற்று விட்டால் வெளிநாடுகளுக்குக்கூட இலவசமாகப் போய் வரலாம் என்ற ஆசை வேறு கங்காதரன் மனத்தில் வேர் ஊன்றி விட்டது.

ஆனால் ஜோஸியர் சொன்ன புகழ் கிரிக்கெட் ஆட்டத்தின் மூலம் கங்காதரனை அடைய மறுத்து விட்டது. நூறு ஓட்டங்கள் எடுப்பதற்குப் பதில் கங்காதரன் போகும் இடத்திலெல்லாம் 'முட்டை' வாங்கினான். பிராட்மன் 'முட்டை' எடுத்தால் அவருடைய படத்தைப் பிரசுரம் செய்து 'பிராட்மனே முட்டை எடுத்தார்!' என்று முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் போடுவார்கள் பத்திரிகையாசிரியர்கள். ஆனால் கங்காதரன் எடுத்த முட்டைகள் அவனைக் கிரிக்கெட் மைதானத்திலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற்றி விட்டன.

பத்திரிகை உலகில் புகுந்து கொண்டால் பெருக்கும் பிரக்யாதிக்கும் பஞ்சம் கிடையாது என்று யாரோ சொன்னதைக் கேட்டு எழுத்தாளனாக முயற்சி செய்தான் கங்காதரன். அவனுடைய நண்பர்கள் பலர் கங்காதரன் என்ற பெயரை மாற்றி 'கரன்', 'தரன்', 'கங்கா', 'காரன்', 'காதரன்' என்றெல்லாம் புனை பெயர் வைத்துக் கொள்ளச் சொல்லியும் கங்காதரன் மறுத்து விட்டான். கங்காதரன் என்ற பெயர், அவன் தகப்பனார் வைத்த, ஜோஸியர் புகழ்ந்த, அதே பெயர் அப்படியே பிரபலமடைய வேண்டுமென்று அவன் பெரிதும் விரும்பினான்.


ஆனால் அங்கும் ஏமாற்றமே காத்திருந்தது கங்காதரனுக்கு. அவன் மிகவும் சிரமப்பட்டு எழுதின கட்டுரைகளையெல்லாம் பத்திராதிபர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். காலேஜில் படித்துக்கொண்டே கதை, கட்டுரைகள் எழுதி வந்ததன் பலனாகக் கங்காதரனுடைய பெயர் பத்திரிகைகளில் வராமல் போனதுடன் அவனுடைய பெயருக்குப் பிரதியாக அவனுடைய பரீட்சை நம்பர் பத்திரிகைகளில் வருவதும்கூட முடியாமல் போய்விட்டது. இதன் விளைவாகக் கங்காதரன் பத்திரிகைகளுக்கும் பரீட்சைகளுக்கும் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வெளியே வந்தான்.

அவன் நண்பன் ஒருவன் சொன்ன யோசனை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன்படி அவனுடைய பெயர் அடிக்கடி பத்திரிகைகளில் வெளி வரும். தினசரிப் பத்திரிகைகள், வார, பட்ச, மாத இதழ்கள் எல்லாவற்றிலும் அவனுடைய பெயர் அடிபடும். அதற்காகக் கங்காதரன் ஒன்றும் சிரமமே படவேண்டியதில்லை. அவன் செய்ய வேண்டியதெல்லாம் நன்றாகப் பாடக்கூடிய, ரேடியோ, சங்கீத மேடைகளில் பிரபலமாகிக் கொண்டு வரும் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது. அவளுடைய கச்சேரிகளைப் பற்றின விளம்பரங்களில், விமரிசனங்களில் அவளுடைய பெயரும் அவன் பெயருடன் வரும். இவன் கதைகளைப் போட மறுத்த அதே பத்திரிகைகள் இவனுடைய பெயரைத் தங்கள் சங்கீதப் பகுதியில் போடத் தயங்கமாட்டார்கள் என்பதுதான் கங்காதரனுடைய நண்பன் சொன்ன யோசனை. அதனுடைய விளைவாகத்தான் இந்தக் கதையின் ஆரம்பத்தில் சொன்னபடி கங்காதரன் ஒரு காகிதத்தில் பல பெயர்களை எழுதிப் பார்த்து எந்தப் பெயர் கேட்க நன்றாக இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கங்காதரனுடைய தகப்பனாரும் பையனுக்குக் கல்யாணம் செய்து பார்த்துவிட



வக்கீல் ரஸிகர்:—வாருங்கள், ஸார்! வீட்டுக்குப் போய்விடலாம். பாகவதர் காம்போதி ராகத்தைக் கொலை பண்ணுகிறார். நாம் இங்கே இருந்தால் நம்மை 'விட்னஸ்'ஸாகப் போட்டு விடுவார்கள்!



புகழுக்கு அதிபதி

கு. ரா.

ஒரு காகிதத்தையும் பேனாவையும் கையில் எடுத்துக் கொண்டு கங்காதரன் தீவிரமான யோசனையில் ஈடுபட்டான். பிறகு மடமடவென்று காகிதத்தில் எழுத ஆரம்பித்தான். அவன் ஏதோ சிறு கதையோ, கட்டுரையோ, நாடகமோ எழுத ஆரம்பித்ததாக யாரும் நினைக்க வேண்டாம். அவன் காகிதத்தில் எழுதி இருந்தவை இவைதாம்— "ஊர்மிளா கங்காதரன்", "சரோஜா கங்காதரன்", "கோகிலா கங்காதரன்", "பிரமீளா கங்காதரன்", "லீலா கங்காதரன்", "சாவித்திரி கங்காதரன்"—இவ்வாறு அவன் எழுதியிருந்ததைப் படித்ததும் உங்களுக்குச் சிரிப்பு வரலாம். ஆனால் உங்களுக்குச் சிரிப்பைத் தரும் அந்த விஷயம் அவனுக்கு நெருப்பை விடச் சூடான பிரச்னையாக இருந்தது. இன்னமும் உங்களுக்கு விஷயம் புரியவில்லைபோலிருக்கிறது. சற்று விவரமாகவே சொல்லுகிறேன்:

கங்காதரனுடைய ஜாதகத்தைக் கணித்த ஜோஸியர் புகழுக்கு அதிதேவதையான புதன் அவன் பிறந்த வேளையில் உச்சாணிக் கொம்பில்—மன்னிக்கவும்—உச்சத்தில் இருந்ததாக அபிப்பிராயப் பட்டார். 'புகழுக்கு அதிபதி புதன் இல்லை; குரு' என்று யாரோ விஷயம் தெரிந்தவர் தப்பு கண்டு பிடிப்பதாகத் தெரிகிறது. புதனோ, குருவோ, சுக்கிரனோ, யுரானஸோ ஏதோ ஒரு சக்தி என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்தச் சக்தி கங்காதரனுடைய பெயரைப் பிற்காலத்தில் பிரபலமாக்கும் என்றுதான் அந்த ஜோஸியர் அபிப்பிராயப்பட்டார். அந்த அபிப்பிராயம் காரியத்தில் நடக்க வேண்டுமென்று கங்காதரனுடைய தகப்பனார் ஆசைப்பட்டார். நம்முடைய கங்காதரனோ தன்னுடைய தகப்பனார், ஜோஸியர் இருவருடைய கனவும் நனவாகப் பாடு பட்டான், பிரயாசைப்பட்டான், அவஸ்தைப்பட்டான் என்றும் சொல்லலாம்.

கிரிக்கெட் ஆட்டம் ஆடி அதில் நல்ல பெயரைச் சம்பாதித்தால் பெயரும் புகழும் அடையலாம் என்று பள்ளிக்கூடத்



கணவன் :—இந்தப் புடவையைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புவருகிறது!

மனைவி :—ஆமாம், ஆமாம் ; இப்போது சிரிப்பாய்த்தான் இருக்கும். நாளைக்கு பில் வரட்டும் ......!

கின்றனை. என்ன விலையோ ?......ஓ. இவற்றின் விலை அதிகம். என்னிடம் நாலணுத்தானே இருக்கிறது......!''

அவன் அடுத்த கடைக்குச் சென்றான். ஒரு பேலா ரசம் எடுக்க அவசியம் நான்கு பழங்கள் வேண்டியதுதான். அவன் கடைக்காரனிடம் சென்று பழத்தின் விலையைக் கேட்டான்.

" நீ தின்பதற்கா ?'' என்றான் பழக் கடைக்காரன்.

" இல்லை, காந்திஜிக்கு !'' என்றான் பையன்.

பழக்காரன் வாய்விட்டுச் சிரித்தான். பிறகு, கடைக்கு வந்திருந்த வேறொருவருடன் அவன் பேச ஆரம்பித்து விட்டான். கடைக்குக் கடை பழத்தின் விலை அதிகமாயிருந்தது. இப்போதுதான் முதல் முறையாகத் தனது ஏழ்மையைக் குறித்து வருத்தம் ஏற்பட்டது விட்டோபாவுக்கு. அவன் கண்களில் நீர் ததும்பியது முடிவாக, ஒரு ஏழைப் பழக்காரனைத் தேடியடைந்தான்.

பழக்காரனுக்குக் கருணை பிறந்தது. அவன் தன்னிடமிருந்த சிறிய வாடிய ஆரஞ்சுப் பழங்களைக் காண்பித்தான். '' என்னிடம் இவைதான் இருக்கின்றன. இவற்றை வேண்டுமானால் எடுத்துக் கொள்'' என்று சொன்னான்.

'' என்ன விலை?'' என்றான் விட்டோபா.

'' நான்கும் நாலணு !'' என்றான் அந்த ஏழைப் பழக்கடைக்காரன்.

மிகுந்த நன்றியுடன் கண்களில் நீர் மல்க விட்டோபா அந்தப் பழங்களை வாங்கிக் கொண்டான்.

பாபுஜி நோன்பு முடிக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. எங்கும் ஒரே பரபரப்பு. எல்லாருக்கும் மகிழ்ச்சி. அவர் பிழைத்தெழுமாறு இறைவனை வேண்டிக் கொண்டிருந்தனர். தங்களுடைய ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டு நோன்பை முடிக்கும்படியாகக் கூடை கூடையாகப் பழங்களை அனுப்பியிருந்தனர் சில பணக்காரர்கள். சிலர் ரசத்தையே பிழிந்தெடுத்துக் கொண்டு வந்திருந்தனர்.

'' என்ன, இன்னும் விட்டோபா வரவில்லையா?'' என்று கேட்டது உத்தமரின் சத்தியவாணி.

'' விட்டோபாவா! எதற்காக, பாபுஜி?''

'' அவன் கொண்டு வரும் ஆரஞ்சுப் பழ ரசத்தை அருந்தித்தான் நான் விரதத்தை முடிப்பதென்று இருக்கிறேன். அவன் எங்கே?''

அவ்வளவுதான் ; அனைவரும் விட்டோபாவைத் தேடத் தொடங்கினர். ஆசிரமவாசிகளுக்குத்தான் காந்திஜியை நன்றாகத் தெரியுமே !

விட்டோபா வெளியே நின்று கொண்டிருந்தான். உள்ளே செல்ல அவனால் முடியவில்லை. அவன் ஒரு பொருட்டா, என்ன ? கூட்டம் நெருக்கியது. 'ஐயோ ! பாபுஜி இந்நேரம் பழரசம் பருகியிருப்பாரே !' என ஏங்கித் தயங்கி நின்றான் ஹரிஜனச் சிறுவன்.

அதற்குள் ஆசிரமவாசிகள் அங்கு வந்தார்கள். அந்தச் சிறுவனைக் கண்டார்கள்.

" ஏ, பையா ! உன் பெயர் விட்டோபாவா ?''

'' ஆம், ஐயா!''

''சீக்கிரம் வா அப்பா, பாபுஜி உனது ஆரஞ்சுப் பழங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன, இவ்வளவு நேரம் கடந்து வருகிறாயே !''

இதைக் கேட்டதும் அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அவனால் பேச முடியவில்லை. அவன் உள்ளே சென்றான். காந்திஜியிடம் ஆரஞ்சுப் பழங்களைக் காணிக்கையாகக் கொடுத்தான்.

வாடிச் சிறுத்த அப் பழங்களின் நான்கு சொட்டு ரசத்தைப் பருகித் தமது உண்ணாவிரதத்தை முடித்தார் உலகப் பெரியார் காந்தி—தீனபந்து பாபு !

[''பால ஸகா'' என்ற தமிழ்ப் பத்திரிகையிலிருந்து எடுத்தது.]

★ ★ ★ "நான் மறுமுறை பிறக்க விரும்பவில்லை. அப்படிப் பிறக்க நேரிடுமானால் தீண்டாதார் இனத்தில் பிறக்கவே விரும்புகின்றேன். அதனால் அவர்களது துன்பத்தின் பங்காளியாக முடியும். அவர்களது கஷ்டங்களையும் அவமானத்தையும் ஏற்றுக் கொள்வேன்; துன்பம் நிறைந்த இழி நிலையிலிருந்து அவர்களை உயர்த்தப் பாடுபடுவேன்." — காந்திஜி.

தீனபந்து காந்தி

வி.ஜி.ஸ்ரீநிவாஸன்

காந்திஜி ஒருமுறை ஹரிஜன முன்னேற்றப் பிரச்னை சம்பந்தமாக உண்ணாவிரதம் ஆரம்பித்திருந்தார். அந்த உண்ணாவிரதக் காலத்தில், அருகிலே இருந்த ஒரு ஏழை ஹரிஜனச் சிறுவனிடம், "நீ கொண்டுவரும் ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டுதான் நான் உண்ணாவிரதத்தை முடிப்பேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். ஹரிஜனச் சிறுவன் விட்டோபாவுக்கு மகிழ்ச்சி எல்லை மீறிவிட்டது. அவன் திகைத்து விட்டான். உலகம் போற்றும் மகா புருஷராகிய காந்திஜி, தான் கொண்டு வரும் ஆரஞ்சுப் பழங்களைச் சாப்பிட்டு விரதத்தை முடிக்கப் போவதாகச் சொன்னால் அவன் திகைக்காமல் என்ன செய்வான்?

காந்திஜிக்கு ஆரஞ்சுப் பழங்கள் வாங்கித் தரும் அளவுக்குக் காசு சேர்ப்பது என்ற எண்ணத்தோடு, அவன் அன்றைய தினத்திலிருந்தே காசு சேர்க்க ஆரம்பித்து விட்டான்.

ஆயிற்று; நாட்கள் கடந்தன. நாளையே உண்ணாவிரதம் முறிந்து விடும். "நீ ஆரஞ்சு கொண்டு வா; உனது பழங்களைக் கொண்டுதான் உண்ணாவிரதத்தை முடிப்பேன்" என்று காந்திஜி சொல்லியிருக்கிறார். அவருடைய வாக்கு சத்திய வாக்கு. விட்டோபா பலரிடம் இதைப் பற்றிச் சொன்னான். அவர்களெல்லாம் அவனை முட்டாளென்றும், பைத்தியம் என்றும் ஏசினார்கள். அவனது தாயாரே அவன் சொன்னதை உண்மை என்று கொஞ்சங்கூட நம்பவில்லை.

ஆனால் விட்டோபா இந்த விஷயத்தில் உறுதியாக இருந்தான். அத்தனை நாட்களாகச் சிரமப்பட்டுச் சேர்த்திருந்தானல்லவா, — அந்தக் காசுகளை எண்ணிப் பார்த்தான். நான்கு அணுக்கள் இருந்தன. "சரி, நான்கு ஆரஞ்சுப் பழங்கள் கிடைக்கும்; பாபுஜிக்கு அவை போதும்" என்று நினைத்தான். உடனே அந்த நான்கு அணுக்களை எடுத்துக் கொண்டான். மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்துக் கொண்டே ஆரஞ்சுப் பழம் வாங்கச் சென்றான்.

அப்போது வழியில் சிலர் அவனைப் பார்த்து, "எங்கே போகிறாய்?" என்று கேட்டனர்.

"பாபுஜிக்கு ஆரஞ்சு வாங்கப் போகிறேன்; அவர் என்னை வாங்கிக்கொண்டு வரச்சொன்னார்......!"

"அழகுதான், போ! உன்னிடமா கேட்டார்? வேறு ஆளே கிடையாதா? பழங்கள் கூடை கூடையாகப் போய்க் கொண்டிருக்கின்றன. பெரிய பெரிய மனிதர்கள் அவருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நீ என்னடா என்றால்..."

அவர்களது கையாண்டிப் பேச்சைக் கேட்டு விட்டோபாவுக்கு அழுகை வந்து விட்டது. இருந்தபோதிலும், "அவர் எனது ஆரஞ்சு ரசத்தையே அருந்துவார், பாருங்களேன்!" என்று அவன் கம்பீரமாகச் சொல்லிவிட்டு நடந்தான்.

அங்கு ஒரு கடையில் உள்ள பழங்களைப் பார்த்தான்.


"இவைகள் மிகவும் நல்ல பழங்கள்; பெரிதாயுமிருக்கின்றன, புதிதாயுமிருக்



"மைந்தனே, உன் சாமர்த்தியத்தை மெச்சுகிறேன். அந்தச் சிங்கங்களிடமிருந்து எப்படி நீ தப்பி வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு அஹமத், "தந்தையே, என்னால் ஆனது ஒன்றும் இல்லை. எல்லாம் என் மனைவி என்மீது வைத்திருக்கும் அன்பினாலும் அவளது மந்திர சக்தியினாலும் தான்" என்று சொல்லி சுனைக்குச் சென்று வந்த விவரங்களைக் கூறினான்.

தன் மகன் கூறிய விவரங்களைக் கேட்ட சுல்தான் சந்தோஷமடைவது போல் காட்டிக் கொண்டாலும் மனதிற்குள் அஹமத் மீது கோபமும் பொறாமையும் ஆத்திரமும் கொண்டான். தன் மகன் சென்றவுடன் அந்த மந்திரவாதிக் கிழவியை வரவழைத்து அஹமதை வீழ்த்த வேறு யோசனை கூறும்படி கேட்டான். அவளும் புது யோசனை கூறினாள்.

மறுநாள் அஹமத் தன் தந்தையிடம் விடைபெற்றுச் செல்ல வந்தான். அச்சமயம் சுல்தானைச் சுற்றிலும் அவனுடைய மந்திரிகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் சுல்தான் அடுத்தபடியாகத் தான் விரும்புவது என்ன என்பதைத் தன் மகனிடம் கூறத் தொடங்கினான். (தொடரும்)



இதில் எத்தனை வட்டங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடியுங்கள்.

சென்ற வாரக் கணக்குக்கு விடை:
சாமு ரூ. 2; கோபு ரூ. 4; சோமு ரூ. 6; சீனு ரூ. 8; சரு ரூ. 10.

8—1—50-ல் வெளியான கணக்குக்குச் சரியான விடை 301.

மாறு வேஷ நிபுணர்

பழைய காலத்து அரசர்களைப் போல, பெர்லின் சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர் ஒரு சமயம் தன் சகா கோயரிங்குடன் மாறு வேடம் பூண்டு மக்கள் தங்களையும் தங்கள் அரசாட்சி முறையையும் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து வரப் புறப்பட்டார்.

மாறு வேடம் பூண்ட இருவரும் தேநீர் அருந்துவதற்காக ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தனர். தேநீர் அருந்தி முடிந்ததும் கோயரிங் 'பில்'லுக்குப் பணம் கொடுத்தார். பணப் பெட்டியருகே உட்கார்ந்திருந்த கிழவி பணத்தைப் பெற்றுக் கொண்டு, "வந்தனம், கோயரிங்!" என்று சொன்னாள்.

அதைக் கேட்டதும் கோயரிங்குக்கும் ஹிட்லருக்கும் தூக்கி வாரிப்போட்டது.

சில நாட்கள் கழித்து மறுபடியும் இருவரும் வேறுவிதமாக மாறு வேடம் போட்டுக்கொண்டு அதே ஹோட்டலில் தேநீர் அருந்தச் சென்றனர்.

தேநீர் அருந்தி முடிந்ததும், ஹிட்லர் பணம் கொடுக்கப் பெட்டியடியண்டை சென்றார். அன்றும் அந்தக் கிழவி தான் பணப் பெட்டியருகே உட்கார்ந்திருந்தாள். அவள் பணத்தைப் பெற்றுக் கொண்டு, "வந்தனம், ஹெர் ஹிட்லர்!" என்று சொன்னாள்.

அதைக் கேட்டதும் ஹிட்லர் துணுக்குற்றார். "இதேதடா இது! இந்தக் கிழவி இவ்வளவு அபார சாமர்த்தியக்காரியாக இருக்கிறாளே! நம்மை இது வரை யாரும் கண்டு பிடித்ததில்லை. இவள் இரண்டு தடவையும் கண்டு பிடித்து விட்டாளே" என்று மிகவும் ஆச்சரியப்பட்டார். ஆகவே அவள் அருகில் சென்று, "என் பாட்டி அம்மா! உங்களுக்கு எங்கள் இரண்டு பேரையும் எப்படி அடையாளம் தெரிந்தது?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாமல் போய் விட்டால் அப்புறம் என்ன இருக்கிறது? நான்தான் கோயபல்ஸ் ஆயிற்றே!" என்றாள் அந்தக் கிழவி. —அஞ்சம்.

ஒரு பெரிய அரண்மனையின் மத்தியில் இருக்கிறது. அந்த அரண்மனை வாயிலில் நான்கு சிங்கங்கள் காவல் புரிகின்றன. அவைகளில் இரண்டு தூங்கும்பொழுது மற்ற இரண்டு விழித்துக் கொண்டிருக்கும். ஆகையால் இவைகளைத் தாண்டிக் கொண்டு உள்ளே செல்வது சற்றுக் கஷ்டம். உள்ளே சென்று விட்டாலும் இந்தச் சிங்கங்களுக்குத் தப்பித் திரும்பி வருவது அதைவிடக் கஷ்டம். இந்தச் சிங்கங்களின் வாயில் அகப்பட்டு நீங்கள் இறந்து விடுவீர்கள் என்று உங்கள் தந்தையும் மந்திரவாதிக் கிழவியும் நினைக்கின்றனர். அவர்கள் நினைக்கிற மாதிரி நடக்கப் போவதில்லை. ஏனெனில் நீங்கள் பத்திரமாகப் போய் வருவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்!"

இவ்வாறு பேசுகையில் ராணி பானு நூல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். தன் கையிலிருந்த நூல் கண்டு ஒன்றை அஹமத்தின் கையில் கொடுத்து மேலும் அவள் கூறியதாவது:—

"நாளைக் காலையில் நீங்கள் குதிரை மீது ஏறிச் செல்லவேண்டும். உங்களுடன் மற்றொரு குதிரையை அழைத்துச் செல்லவேண்டும். ஒரு ஆட்டை நாலாக வெட்டி அந்தத் துண்டங்களை மூட்டையாகக் கட்டி மற்றொரு குதிரை மீது வைத்துக்கொண்டு செல்ல வேண்டும். சுனை நீரை எடுத்து வர ஒரு புட்டியும் எடுத்துக்கொள்ள வேண்டும். நம் அரண்மனை வாயிலில் உள்ள இரும்புக் கதவைத் தாண்டியவுடன், இந்த நூல் கண்டைக் கீழே போட்டுவிட்டு ஒரு நுனியை நீங்கள் பிடித்துக் கொள்ள வேண்டும். சுனையுள்ள அரண்மனைக்குப் போகும் வரையில் இந்த நூல் கண்டு விரிந்து கொண்டே போகும். இந்த நூல் கண்டு முடியும் சமயம் சுனையுள்ள அரண்மனை வாயிலுக்குப் போய்ச் சேருவீர்கள். நீங்கள் போனவுடன் அந்த அரண்மனை வாயிற்கதவு தானாகவே திறந்து கொள்ளும். உள்ளே நுழைந்தவுடன் நான் குறிப்பிட்ட நான்கு சிங்கங்களைப் பார்ப்பீர்கள். விழித்துக் கொண்டிருக்கும் இரு சிங்கங்கள் உங்களைப் பார்த்ததும் கர்ஜிக்கும். அந்த கர்ஜனை சத்தம் கேட்டு தூங்கும் சிங்கங்களும் விழித்துக் கொள்ளும். ஒவ்வொரு சிங்கத்துக்கும் ஒரு துண்டு ஆட்டு மாமிசத்தை விட்டெறியுங்கள். அவைகள் மாமிசத்தைத் தின்று கொண்டிருக்கும் சமயம் நீங்கள் உள்ளே சென்று புட்டியில் நீரைப் பிடித்துக் கொண்டு திரும்பி விடுங்கள்."

மறு நாள் காலை அஹமத் சுனைக்குப் புறப்பட்டான். தன் மனைவி கூறிய படியே செய்தான். சிங்கங்களைக் கண்டவுடன் ஆட்டு மாமிசத்தை அவைகள் முன்பு எறிந்தான். அவைகள் ஆர்வத்துடன் மாமிசம் சாப்பிடுகையில் அவன் வேகமாக உள்ளே சென்று சுனையிலிருந்து நீரைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டான். திரும்பும் பொழுது இரண்டு சிங்கங்கள் அஹமதைப் பின் தொடர்ந்தன. அஹமத் சிங்கங்கள் தன்னை என்ன செய்துவிடுமோ என்று பயந்தான். ஆனால் அவைகள் தனக்குக் காவலாக வருகின்றன என்பதை அறிந்ததும் பயம் நீங்கியவனாக மேலும் சென்றான். பின்தொடர்ந்த இரண்டு சிங்கங்களில் ஒன்று அஹமதிற்கு முன் சென்றது. மற்றொன்று அவனைப் பின்பற்றி வந்தது. இவ்வாறே தன் தந்தையின் அரண்மனைக்கு அஹமத் வந்து சேர்ந்தான். நேராக சிம்மாசனத்தில் தன் தந்தை அமர்ந்திருக்கும் இடத்திற்கு வந்து அவனிடம் மந்திர நீரைக் கொடுத்தான். சுல்தானுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தன் மகனைப் பார்த்து





அழைத்து வரும்படி ஆள் அனுப்பினான். அவனும் வந்தான். அரசனின் விருப்பத்தை அறிந்து அது நிறைவேற வழியும் கூறினான்.

“அரசே, நான் பானுவின் முன் நோய் வாய்ப் பட்டிருப்பதாகப் பாசாங்கு செய்தேன் அல்லவா? அச் சமயம் என் நோய் நீங்குவதற்காக அவள் ஒரு மருந்து கொடுத்தாள். பானுவின் ராஜ்யத்தில் சிங்கச்சுனை என்று ஒரு சுனை இருக்கிறது. அந்தச் சுனையிலிருந்து தண்ணீர் எடுத்துச் சாப்பிட்டால் எல்லாவித நோய்களும் நீங்கி விடுமாம். எனக்கு அந்தத் தண்ணீரைத்தான் கொடுத்தார்கள். அந்த நீரில் ஓரளவு கொண்டு வரும்படி தங்கள் மகன் அஹமதிற்குக் கட்டளையிடுங்கள்” என்றாள்.

இளவரசன் அஹமத் மாலையில் தன் தந்தையைப் பார்க்க வந்தான். சற்று நேரம் குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசி விட்டு சுல்தான் தன் மகனிடம் சொன்னான்: “மகனே, நீ கொண்டு வந்து கொடுத்த கூடாரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் தெய்வ சக்தி வாய்ந்த உன் மனைவி உன்னிடம் வைத்திருக்கும் ஆசையை மற்றுமோர் முறை சோதனை செய்ய விரும்புகிறேன். உன் மனைவியின் ராஜ்யத்தில் சிங்கச்சுனை என்று ஒரு நீர் ஊற்று இருக்கிறதாம். அந்த நீரை உட்கொண்டால் எவ்வித நோயும் நீங்கி விடுமாம். வயதான எனக்கு இந்தக் காலத்தில் திடீரென தேக அசௌக்கியம் ஏற்பட்டால் அந்த நீரை உபயோகிக்கலாம் என நினைக்கிறேன். அந்த நீரில் ஒரு புட்டி எனக்குக் கொண்டு வந்து தருவாயா?”

தன் தந்தை இவ்வாறு தன்னைச் சோதிப்பது கண்டு அஹமத் கலங்கிப் போனான். இதற்காகத் தன் மனைவியை எப்படித் தொந்திரவு செய்வது என்று அவன் கவலையடைந்தான். மிக்க வருத்தத்துடன் தன் மனைவியிடம் சென்றான். தன் கணவன் திரும்பி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பானு, அவன் கவலை தோய்ந்த முகத்துடன் வந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். “ஏன் கவலைப்படுகிறீர்கள்?” என்று கேட்டுப் பார்த்தாள். “ஒன்றும் இல்லை” என்று எவ்வளவோ அஹமத் சொல்லியும் பானு நம்பவில்லை. மறுபடியும் வற்புறுத்திக் கேட்கவே அஹமத் உண்மையைக் கூறினான்.

“அருமை பானு, உன்னையே மறுபடியும் தொந்திரவு செய்ய வேண்டியிருக்கிறது. என் தந்தையின் ஆசைக்கு அளவு இல்லை போலிருக்கிறது. கூடாரம் ஒன்று கேட்டார். அதை நீ தந்தாய். அதைக் கொண்டு போய்க் கொடுத்தேன். அதோடு அவர் திருப்தியடையவில்லை. சிங்கச் சுனையிலிருந்து கொஞ்சம் நீர் வேண்டுமாம். அவருடைய பேராசையை எப்படித் தீர்ப்பது?”

இதைக் கேட்ட பானு பதில் கூறினாள்: “பிரிய நாயகா! இதற்காக நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? அந்த மந்திரவாதிக் கிழவி சொல்வதை எல்லாம் உங்கள் தந்தை கேட்கிறார். அதனால் என்ன? பாதகம் இல்லை. உங்களிடம் சுல்தான் குறை கண்டு பிடிக்க நான் விரும்பவில்லை. உங்களிடம் நான் அன்பாக இல்லை என்று அவர் நினைக்க இடம் தரலாகாது. ஆனால் சுனை நீர் கொண்டு வருவது ஆபத்தானது. இந்தத் தடவை எப்படியாவது உங்களைக் கொன்றுவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். சிங்கச் சுனைக்குச் சென்று திரும்புவது சுலபமான காரியம் அல்ல. இந்தச் சுனை

மாய மாளிகை

ரா. நா.

8. சுல்தானின் பேராசை

அஹமத் தன் தந்தையின் விருப்பத்தைப் பானுவிடம் கூறினான். இதைக் கேட்ட பானு, "பூ! இவ்வளவுதானா? அந்தக் கூடாரத்தை ஒரு க்ஷணப் பொழுதில் வரவழைக்கிறேன்" என்று கூறினாள்.

உடனே தனது பணிப் பெண்களில் ஒருத்தியை வரவழைத்து "என் அறையில் ஒரு சிறு கூடாரம் இருக்கிறது. அதை உடனே இங்கு கொண்டு வா!" என்று கூறினாள்.

வேலைக்காரி அவ்விதமே அங்கு சென்று, உள்ளங் கையில் அடங்கக் கூடிய ஒரு கூடாரத்தைக் கொண்டு வந்தவுடன், "இந்தக் கூடாரமாவது, ஒரு பெரிய படை அடங்கும்படி இது விரியவாவது!" என்று அஹமத் சந்தேகித்தான். தன் மனைவி ஏதோ தமாஷ் பண்ணுகிறாள் என்றுகூட அவன் நினைத்தான். ஆனால் அஹமதின் சந்தேகம் சீக்கிரம் நீங்கி விட்டது. ஏனெனில் பானு, இளவரசனை அழைத்துக் கொண்டு தன் அரண்மனை முன் உள்ள பெரிய மைதானத்திற்குச் சென்று, அங்கு அந்தக் கூடாரம் விரியும்படி செய்தாள். உடனே கூடாரம் விரிந்தது. தனது தந்தையாகிய சுல்தானின் படைகளைப் போல் இருமடங்கு படைகள் அதில் அடங்கும் என்பதை அஹமது அறிந்து ஆச்சரியப்பட்டான். விரிந்த கூடாரம் மறுபடியும் சுருங்கிக் கைக்குள் அடங்கும்படி ஆனதும் அவனுடைய ஆச்சரியம் அதிகரித்தது.

அந்தச் சிறு கூடாரத்தைப் பானு தன் கணவன் கையில் கொடுத்தாள். தன் மீது இவ்வளவு அன்பு வைத்திருப்பது கண்டு தான் ஆனந்தமடைவதாக அஹமத் தன் மனைவியிடம் தெரிவித்தான். இந்தச் சம்பவம் நடந்த அடுத்த நாள் காலையிலேயே அவன் தன் தந்தையின் ராஜ்யத்திற்குப் புறப்பட்டான்.

சீக்கிரம் தன் நாட்டை அடைந்து தன் தந்தையைச் சந்தித்து, அவன் கையில் அந்தச் சிறு கூடாரத்தைக் கொடுத்தான். அரண்மனை முன் கூடாரம் தானாகவே விரிவதையும் அஹமத் தன் தந்தைக்குக் காட்டினான். இந்த அதிசயத்தைக் கண்ட சுல்தான் அப்படியே மயங்கி விட்டான். இவ்வளவு அருமையான பரிசைத் தனக்கு அளித்ததற்காக பானுவுக்கு நன்றி செலுத்தும்படி சுல்தான் தன் மகனைக் கேட்டுக் கொண்டான். தன் ஆசை நிறைவேறினாலும், சுல்தானுக்குத் தன் மகன்மீது பொறாமையும் ஆத்திரமும் அதிகரித்தது. தன் மகனைவிட தனது அந்தஸ்து உயர வேண்டும் என்கிற ஆசை வளர்ந்தது. ஆகையால் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள வழி இருக்கிறதா என்பதை அறிவதற்காக மறுபடியும் அந்த மந்திரவாதிக் கிழவியை



"அடே, என்ன ஆச்சரியமான விஷயம்! விசுவபதி என்னுடன் கூடப் படித்தவர். சுவேதாங்கா! உன் வரவு நல்வரவு ஆகட்டும். நீ எனக்குப் பிள்ளைக்குச் சமானமானவன்" என்றார் மிருத்யுஞ்ஜயர்.

தன் தகப்பனாருக்கும் மிருத்யுஞ்ஜயருக்கும் ஏற்கனவேயே பரிச்சயம் உண்டு என்பதை அறிந்த சுவேதாங்கனுக்கு எவ்வளவு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது என்பதைச் சொல்லி முடியாது. சுவேதாங்கனுடைய இதயத்திலே ஒருவித நம்பிக்கை முளைவிட்டு எழுந்தது. 'அப்படியானால் யசோதராவுக்கும் தனக்கும் கல்யாணம் நடப்பது என்பது நடக்கக் கூடிய காரியம் தானா?' என்னும் சிந்தனையில் அவனுடைய மனம் லயித்தது.

"நடக்காத காரியம்!" இது சுவேதாங்கனுக்குத் தெரியாத விஷயம் அல்ல; நன்றாகத் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும் சபலம் யாரை விட்டது? அவன் தகப்பனாரின் சொத்து அனைத்தும் அழிந்து எத்தனையோ காலமாகி விட்டது. ஆகவே தான் அவனுடைய தகப்பனார் கிராம வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். அவன் உயர் குலத்தவன்தான். ஆனால் அதனால் ஆகப்போவது என்ன? மிருத்யுஞ்ஜயர் அவனுடைய தகப்பனாரைக் காட்டிலும் தன விஷயத்தில் எத்தனையோ படி உயர்ந்தவர்; செல்வாக்கிலும் மேலானவர்; சகல விதமான சக்திகளும் வாய்ந்தவர். விவாகம் என்றால் இந்த விஷயங்களில் எல்லாம் ஒரு சமத்துவம் வேண்டும் அல்லவா? ஆயினும் 'யசோதராவுடன் தனக்கு விவாகம் ஆகிவிடக்கூடாதா?' என்ற ஆசை அவனை விடவில்லை. அவனுடைய உணர்ச்சிகளைக் கிளர்ச்சி கொள்ளச் செய்து அவனைக் கற்பனை உலகத்தில் ஆழ்த்திவிட்டது.

சுவேதாங்கன் மௌனமே உருவாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட மிருத்யுஞ்ஜயர், "குழந்தாய் சுவேதாங்கா! என்னுடைய மாளிகையை நீ உன்னுடைய மாளிகையாகவே பாவிக்கலாம். நீ இங்கே வந்திருக்கும் சமாசாரத்தை விசுவபதி எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது!" என்றார்.

"என் தகப்பனார் இப்பொழுது வானப்பிரஸ்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஒரு வேளை அதுதான் காரணமாயிருக்குமோ, என்னமோ? சரி, நான் போய் வர அநுமதி வாங்கிக் கொள்ளலாம் அல்லவா?" என்றான் சுவேதாங்கன்.

போஜனத்துக்கு நேரம் ஆகிவிடவே, மிருத்யுஞ்ஜயர் சுவேதாங்கனைப் பார்த்து, "என்னுடன் இப்பொழுது உணவு அருந்துவதில் உனக்குச் சங்கோசமோ, ஆட்சேபனையோ இல்லையே!" என்று கேட்டார்.

சுவேதாங்கன் புன்முறுவல் புரிந்து, "சங்கோசம் ஒன்றும் இல்லை. ஆனால், ஸ்வாமி! நானோ இப்போது பீஜகுப்த மன்னரின் ஊழியன். அவருடைய அனுமதியின்றி நான் ஒன்றும் செய்வதற்கில்லை. நல்லது, நாழிகையாகிறது. நான் போய் வர உத்தரவு கொடுங்கள். பீஜகுப்த மன்னர் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்" என்று சொல்லி எழுந்தான்.

"நல்லது, உன் கடமையை நீ நன்கு உணர்ந்திருக்கிறாய். ஆகவே உன்னைப் பாராட்டுகிறேன். சரி, நீ போய் வா. பீஜகுப்தனிடம் நான் சொன்ன விஷயத்தைச் சொல்ல மறந்து விடாதே!" என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினார் மிருத்யுஞ்ஜயர்.

சுவேதாங்கன் திரும்பி வந்து, பீஜகுப்தனிடம் மிருத்யுஞ்ஜயர் அழைத்திருக்கும் விஷயத்தைச் சொன்னான்.

"நமக்கு அழைப்பு வந்திருக்கிறதே! நாம் அங்கே போவது உசிதமாகுமா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் பீஜகுப்தன்.

அன்றுபகல் முழுதும் பீஜகுப்தன் தனக்கு வந்திருந்த அழைப்பைப் பற்றியே யோசனை செய்து கொண்டிருந்தான். அவன் அங்கே போவது அநுசிதமாவானேன்? பீஜகுப்தனின் மனதிலே இந்தக் கேள்வி எழுந்தது. ஆயினும் அவன் அங்கே போவது அநுசிதம் என்றுதான் எண்ணினான். ஆனால் அவனாலேயே அதற்குச் சரியான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதை வெகு நேரம் வரை பலவிதமாக உழற்றிக் கொண்ட பின் அவன் மிருத்யுஞ்ஜயரின் மாளிகைக்குப் போய்த்தான் வரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். மாலைக்கதிரவன் மலைவாயில் விழுந்த நேரத்தில் அவன் சுவேதாங்கனைக் கூப்பிட்டு, "சுவேதாங்கா! ஒரு பெரிய மனிதர் அனுப்பியிருக்கும் அழைப்பை நிராகரிக்கக் கூடாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றான்.

அவனுடைய உள்ளத்திலே மறுபடியும் இன்னொரு தடவை யசோதராவைக் காண வேண்டும்; கண்டு பேச வேண்டும் என்ற தெளிவற்ற எண்ணம், மெல்லிய நூலைப் போல ஊசலாடியது. (தொடரும்)

அல்லவா? அது மட்டும் அல்ல; இன்னொன்றும் யோசிக்க வேண்டிய விஷயம். பாவம் என்றால் என்ன? அதைப்பற்றி யாருக்குச் சரியாகத் தெரியும்? நான் எதைப் பாவம் என்று எண்ணுகிறேனோ, அதை இன்னொருவன் பாவம் என்று எண்ணாமல் இருக்கலாம். அதே போல், நாம் கவனிக்காமல் கவனக் குறைவாக விட்டிருக்கும் எத்தனையோ விஷயங்கள் பலருக்குப் பாவமாகவும் தோன்றலாம். ஆகவே பாவத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவது சற்றுச் சிரமமான காரியமாகத் தோன்றுகிறது" என்றான் சுவேதாங்கன்.

அந்தப் பதில் யசோதராவுக்கு அவ்வளவாகத் திருப்தி அளிக்கவில்லை. "ஸ்வாமி! தாங்கள் பேசுவதைப் பார்த்தால் மனிதர்களின் குணங்களை மட்டும் கிரகிப்பதில் தான் தாங்கள் அபார நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. தங்களுடைய இந்த உயரிய குணத்துக்காக நான் தங்களை மெச்சுகிறேன்" என்றாள்.

இதற்குள் மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயர் மாளிகைக்குள் பிரவேசித்தார். சுவேதாங்கன் எழுந்து அவருக்கு வணக்கம் செலுத்தினான். யசோதரா எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

சுவேதாங்கனை உட்காருமாறு சொல்லி விட்டு, "நேற்று பீஜகுப்தனுடன் வந்திருந்தாயே, அதே பேர்வழிதானே, நீ?" என்று கேட்டார் மிருத்யுஞ்ஜயர்.

"ஆம், தங்களுடைய ஊகம் முற்றிலும் சரியே. என் எஜமானர் தங்கள் பெயருக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்" என்றான் சுவேதாங்கன்.

மிருத்யுஞ்ஜயர் அவனுடைய கையிலிருந்த கடிதத்தை வாங்கிக் கொண்டார். கடிதத்தைப் படித்து முடித்ததும் அவருடைய முகத்திலே மகிழ்ச்சிக் குறி தாண்டவமாடியது. "பீஜகுப்த மன்னரிடத்தில், இதற்காக அவர் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியமே இல்லை. முன் போலவே அவரைப் பற்றி என் உள்ளத்தில் பரிசுத்தமான நல்ல எண்ணம்தான் குடிகொண்டிருக்கிறது என்று சொல்லு. அது மட்டும் அல்ல; இன்று மாலை அவருக்கு வேறு வேலையில்லாவிட்டால், நான் அவரை இங்கே விஜயம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாகவும், இன்று இரவு என் வீட்டிலேயே போஜனம் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னதாகவும் சொல்லு" என்றார். பிறகு சிறிது நேரம் கழித்து மறுபடியும், "சுவேதாங்கா! அவசியம் பீஜகுப்தனுடன் நீயும் வரவேண்டும்" என்றார்.

சுவேதாங்கனின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. "மதிப்புக்குரிய தங்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியத் தயாராயிருக்கிறேன். என் எஜமானர் வந்தால், நானும் அவசியம் வருகிறேன். ஆனால் எஜமானருடைய உத்தரவின்றி நான் இங்கே வருவது எவ்வளவு தூரம் உசிதம் என்பதைத் தங்களுக்கு நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை" என்றான்.

மிருத்யுஞ்ஜயர் சிரித்தவாறு, "நீ சாந்தமும், கம்பீரமும், கடமையிலே கண்ணும் கருத்தும் உள்ளவனாக இருப்பதைக் காண எனக்குப் பரம மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆமாம், உன் வம்சம் என்ன? உன் தகப்பனார் பெயர் என்ன? உன் சொந்த ஊர் எது;" என்று கேட்டார்.

"நான் சூரிய வம்சத்தில் பிறந்தவன். என் தகப்பனார் பெயர் விசுவபதி. நாங்கள் கோசலநாட்டைச் சேர்ந்தவர்கள்."

"என்ன! உன் தகப்பனார் பெயர் விசுவபதியா? நீங்கள் கோசல நாட்டைச் சேர்ந்தவர்களா? உன் தகப்பனார் காசியில் கல்வி பயின்றாரோ?"

"ஆம். தாங்கள் சொல்லுவது சரிதான்"

• • • • • • • • • • •

உத்தம புருஷன்

ஒரு பெண் எத்தகைய புருஷனைக் கணவனாக அடைய வேண்டும் என்பதைக் குறித்துப் பெண்கள் கூட்டம் ஒன்றில் பேசும்பொழுது காந்திஜி கூறியதாவது:

நாரதர் சிவனைப் பற்றிப் பார்வதியிடம் வர்ணிக்கும்போது, "முக்கண்ணன் உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக்கொண்டு அலையும் ஆண்டி; அழகற்றவன்" என்றார்.

பார்வதி அதைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "ஓ! அப்படியானால் அவனைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்" என்றாள்.

அதைப்போல், பெண்களாகிய நீங்களும் பணக்காரனையோ அழகனையோ தேடி அலையாமல், நல்லொழுக்கம் மிகுந்த உத்தமனையே கணவனாக அடைய வேண்டும்.

பார்வதிக்குச் சிவன் இலகுவில் கணவனாகக் கிடைக்கவில்லை. சிவனை அடைவதற்காக அவள் எவ்வளவோ கடுந்தவம் செய்தாள். உங்களுக்குத் தக்க கணவன் கிடைக்க வேண்டுமானால் பார்வதியைப்போல் நீங்களும் கடுந் தவம் இயற்றவேண்டும்.

• • • • • • • • • • •



"ஆமாம், நான் தெரிந்து கொண்டவரையில் உலகத்தின் உயர்ந்த புருஷர்களில் அவரையும் ஒருவராக எண்ணுவதில் யாருக்குமே ஆட்சேபனை ஏற்பட முடியாது."

"அப்படியா? அது போகட்டும். நடனராணி சித்திரலேகாவைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்னவோ?"

"அவளை மிக மிக உயர்ந்த பெண் திலகங்களில் ஒருத்தியாகச் சேர்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை கேட்டால், நான் அவளைத் தெய்வம் என்று வழிபடக் கூடத் தயாராயிருக்கிறேன். ஒரு மனிதன் சித்திரலேகாவை நன்கு உணர்ந்து கொண்டு விட்டால், அவன் சௌந்தர்யத்தையும், சௌந்தர்யத்தின் காரணமாக ஏற்படும் கடமைகளையும் நன்கு உணர்ந்து கொண்டு விட்டான் என்றே சொல்ல வேண்டும்" என்றான் சுவேதாங்கன்.

அதைக் கேட்ட யசோதரா 'கலீர்' என்று நகைத்தான். "அப்படியானால் நான் நினைத்ததிலும் தவறு இல்லை. நானும் தங்களைப் போன்ற அபிப்பிராயம்தான் கொண்டிருக்கிறேன் — ஆமாம், தங்களுடைய பெயர்தானே சுவேதாங்கன் என்பது?" என்று கேட்டான்.

"ஆமாம், அம்மணி! தங்களுடைய ஊகம் முற்றிலும் உண்மையானதே!"

"ஸ்வாமி! உங்களை இன்னொரு விஷயம் கேட்க விரும்புகிறேன். உங்களுடைய குரு உண்மையிலேயே உங்களைப் பாவத்தை அறிந்துவரும் பொருட்டுத்தான் பீஜகுப்த மன்னரிடத்தில் அனுப்பி யிருக்கிறாரா, அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா? பாபத்தை அறிந்து வருவதற்காகத்தான் அவர் உங்களை அனுப்பியிருக்கிறார் என்றால், பீஜகுப்த மன்னரோ அல்லது அவருடைய வாசஸ்தலமோ பாவத்தை அறிந்து கொள்ளுவதற்கு ஏற்ற இடம்தானா?" என்று கேட்டான் யசோதரா.

சுவேதாங்கன் இலேசாகச் சிரித்தான். "அம்மணி! என் குரு பாவத்தை அறிந்து வரும் பொருட்டுத்தான் என்னை பீஜகுப்த மன்னரிடத்தில் அனுப்பி வைத்திருக்கிறார். வேறு காரணம் ஒன்றும் இல்லை. 'பீஜகுப்த மன்னரோ அவருடைய வாசஸ்தலமோ பாவத்தை அறிந்து கொள்ளுவதற்கு ஏற்ற இடம்தானா?' என்று தாங்கள் இன்னொரு கேள்வி கேட்டீர்களே, அதற்குப் பதில் தேடுவதில் என் மூளையே குழம்பிவிட்டது. இன்னும் பதில் தெரியாமல்தான் திண்டாடுகிறேன். இன்னொரு விஷயத்தைக் கேட்டால் நீங்கள் இன்னும் அதிகமாக ஆச்சரியப்படுவீர்கள். நேற்று யோகி குமாரகிரியுடன் விருந்துக்கு வந்திருந்தானே, அவனும் என்னுடைய குருவின் சிஷ்யன்தான். அது மட்டும் அல்ல; அவன் என்னுடன் கூடவே கல்வி பயின்றவன். குரு அவனையும் பாவத்தை அறிந்து வருவதற்காகத்தான் யோகி குமாரகிரியிடம் அனுப்பி வைத்திருக்கிறார். இந்த விஷயம் உங்களுக்கு இன்னும் அதிகமான ஆச்சரியத்தைத் தரவில்லையா?" என்று கேட்டான்.

உண்மையிலேயே அதைக் கேட்டதும் யசோதரா திகைத்துத் திக்பிரமை பிடித்தவன் போலானான்.

"ஆனால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை, அம்மணி! நாங்கள் யார் யாரிடத்தில் அனுப்பப்பட்டிருக்கிறோமோ, அவர்களே பாவிகளாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. அவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களில் எத்தனையோ பேர் பாவிகளாக இருக்கலாம்

நேரில் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி நிறுத்தினான் சுவேதாங்கன். ஆனால் அடுத்தகணமே அவனை யறியாமல், அவன் வாயிலிருந்து "அவர் இல்லாவிட்டால் அவருடைய குமாரியின் கையில் கொடுக்கலாம்" என்ற வார்த்தைகள் வெளி வந்தன.

வாசற் காப்போன் உள்ளே சென்று சுவேதாங்கன் சொன்ன விஷயத்தை யசோதராவுக்கு அறிவித்தான். பிறகு சுவேதாங்கனை உள்ளே அழைத்துப் போய், விருந்தினர் விடுதியில் உட்கார வைத்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் யசோதரா அந்த அறைக்குள் பிரவேசித்தாள். அதைக் கண்ணுற்ற சுவேதாங்கன் அவளுக்கு வணக்கம் செலுத்துவதற்காக எழுந்து நின்றான். சுவேதாங்கனைப் பார்த்த யசோதரா ஆசனம் ஒன்றில் அமர்ந்தவாறே, "உட்காருங்கள். இங்கு இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு தாங்கள் விஜயம்செய்யக் காரணம் என்னவோ?" என்று கேட்டாள்.

"சித்ரரசர் பீஜகுப்தர் தங்கள் தந்தையின் பெயருக்கு, ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அதைக் கொடுத்துச் செல்வதற்காகத் தங்களை நாடி வந்திருக்கிறேன்" என்றான் சுவேதாங்கன். அவனுக்கு அப்பொழுது பீஜகுப்தனைத் தன் எஜமானன் என்று சொல்வது அவ்வளவு உசிதமாகப் படவில்லை.

"அப்பா இதோ வந்துவிடுவார். அவருக்காகக் காத்திருப்பது என்றால் உங்களுக்கு ஒரு வேளை சிரமமாயிருக்குமோ, என்னமோ?" என்றாள் யசோதரா. யசோதராவின் அகன்ற நீண்ட விழிகள் சுவேதாங்கனின் ஆவல் ததும்பும் விழிகளுடன் கலந்தன. ஆனால் அவளுடைய கண்களில் சிறிதும் நாணம் தோன்றவில்லை.



"பாடலிபுத்திர நகரத்தின் இணையற்ற அழகியான அம்மையாரின் எதிரிலே உட்கார்ந்திருப்பதில் யாருக்குத்தான் சிரமம் தோன்றும்?" என்று சுவேதாங்கன் கேட்டான்.

யசோதராவுக்கு அம்மாதிரிச் சொற்களைக் கேட்டுப் பழக்கமே இல்லை. அதுவும் முக்கியமாக அதிகப் பழக்கமே இல்லாத ஒரு மனிதன் அம்மாதிரி யெல்லாம் வார்த்தையாடுவதென்றால் சொல்லவா வேண்டும்? அவள் நாணிக் கண் புதைத்தாள். ஆயினும் சுவேதாங்கன் சொன்ன அந்தச் சொற்கள் அவளுடைய செவியிலே அதிமதுரமாக ஒலித்தன. யசோதராவின் அழகிய கண்களிலே மகிழ்ச்சியும் நாணமும் கண்ணா மூச்சி விளையாடத் தொடங்கின. இயல்பாகவே சிவப்பான அவளுடைய கண்கள் நாணத்தின் காரணமாக இரட்டிப்பாகச் சிவந்தன. சுவேதாங்கனோ அதிதியாக வந்திருந்தான். அவனை மரியாதையுடன் உபசரிக்க வேண்டியது அவளுடைய கடமையல்லவா? ஆகவே, அவள் அவனுடன் பேச்சுக் கொடுக்க எண்ணி, "ஆமாம், நீங்கள் பீஜகுப்தரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பீர்களே..." என்று ஆரம்பித்தாள்.

திரலேகாவின் இதயத்தைப் போன்றது தானா, இல்லையா என்பதையும் அவனால் ஒருவாறு உணர முடிந்தது. சித்திரலேகா அவனுடைய மனைவியாக இல்லாமல் இருந்த பொழுதிலும், மனைவியாக இருந்தாள். நடன மாதாக இருந்த பொழுதிலும் காதலித்தாள். அவள் பணத்துக்காக ஆசைப்பட்டுக் காதலிக்கவில்லை. அவனிடம் இருந்த ஐசுவரியத்துக்கு ஒரு கங்கு கரையில்லை. அவன் காதலுக்காகவே தான் காதலித்தாள். சித்திரலேகாவை முதன் முதலாகச் சந்தித்த அந்த இரவு அவனுக்கு நினைவு வந்தது. சித்திரலேகாவையும் யசோதராவையும் ஈடு கட்ட முடியாது. இருவருக்கும் எணி வைத்தால் கூட எட்டாது. சித்திரலேகா உயர்ந்தவள்; மிக மிக உயர்ந்தவள். அது சரி, யசோதராவின் நினைவு அவனுடைய உள்ளத்தில் எழுவானேன்? அதை நினைக்க நினைக்க அவனுக்கு வியப்பு மேலிட்டது. அவன் சுவேதாங்கனைப் பார்த்து, “சுவேதாங்கா! நான் சொன்ன கடும் சொற்களுக்காக மிருத்யுஞ்ஜயரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாகும்” என்றான்.

“எஜமானரின் சித்தப்படியே செய்து விட்டால் போகிறது!”

“ஆனால் நான் அவர் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை நீ மிருத்யுஞ்ஜயரிடம் கொடுத்து வா” என்றான் பீஜகுப்தன். அவன் எப்படியாவது யசோதராவை மறந்து விட வேண்டுமென்று முயன்றான்.

“எஜமானர் உத்தரவுப்படி செய்யச் சித்தமாயிருக்கிறேன்” என்று பவ்யமாகப் பதில் அளித்தான் சுவேதாங்கன்.

பீஜகுப்தன் மிருத்யுஞ்ஜயரின் பெயருக்கு ஒரு கடிதம் எழுதிச் சுவேதாங்கனின் கையில் கொடுத்தான். சுவேதாங்கன் அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு மிருத்யுஞ்ஜயரின் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றான்.




மிருத்யுஞ்ஜயரின் மாளிகையை அடைந்ததும், அவன் வாசற்காப்போனைப் பார்த்து, “எஜமானர் மாளிகையில் இருக்கிறாரா?” என்று கேட்டான்.

“அவர் ஏதோ அலுவலாக வெளியே போயிருக்கிறார். ஏதாவது காரியம் உண்டா?” என்று கேட்டான் வாசற் காப்போன்.

“அவருக்கு ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்” என்றான் சுவேதாங்கன்.

“கடிதத்தை வேண்டுமானால் என்னிடம் கொடுத்து விட்டுப் போங்கள். நான் அவரிடம் கொடுத்து விடுகிறேன்.”

“இல்லை, இந்தக் கடிதத்தை உன்னிடம் கொடுப்பதற்கில்லை. இதை நானே அவரிடம்



பதினேழாம் அத்தியாயம்

மன்னிப்புக் கடிதம்

மிருத்யுஞ்ஜயரைக் காரணமின்றி தான் அவமதித்து விட்டதாகத் தோன்றியது பீஜகுப்தனுக்கு. மறுநாள் காலை சுவேதாங்கன் தன்னருகில் வந்ததும், பீஜகுப்தன் அவனைப் பார்த்து, "சுவேதாங்கா! நேற்று மிருத்யுஞ்ஜயரின் மாளிகையில் நடந்த விருந்தின் பொழுது நான் ஏதாவது அநுசிதமான வார்த்தைகள் சொல்லிவிட்டேனா, என்ன? அவர் மாளிகையிலிருந்து திரும்பிவந்தது முதற்கொண்டு என் மனதை ஏதோ ஒரு பாரம் அழுத்துகிறது. அப்படி என்ன அநுசிதமான வார்த்தைகள் சொல்லி விட்டோம் என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். ஆனால் சரியாக விளங்கவே இல்லை. நேற்று நீயும்தான் அப்பொழுது அங்கு இருந்தாயே, உனக்கு நான் சொன்ன சொற்கள் நினைவிருக்கலாமே!" என்றான்.

சுவேதாங்கன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு, "எஜமானர் சொன்ன சொற்களில் அநுசிதமான சொற்கள் ஒன்றுகூட இருந்ததாகத் தெரியவில்லையே! ஆனால் அவமதித்ததாக நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஏனெனில் தாங்கள் மனதில் உள்ளதை ஒளிவு மறைவின்றி விட்டுச் சொல்லிவிட்டீர்கள். அதை அவர் தன்னை அவமதித்ததாக நினைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அதைப்பற்றி நாம் கவலைப்படுவானேன்? உண்மை உண்மையே. ஒருவருக்கொருவர் மாறுபாடான கொள்கைகள் கொண்டிருப்பதில் யாதொரு விதமான தவறும் இல்லையே!" என்றான்.

"இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை நீ மறந்துவிடுகிறாய், சுவேதாங்கா! உண்மை உண்மைதான். ஆனால் அந்த உண்மை பிறருடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கக் கூடாது. நான் சொன்ன அதே சொற்களை மனதைப் புண்ணாக்காத வகையில் வேறு முறையில் சொல்லியிருக்கலாம் அல்லவா?" என்றான் பீஜகுப்தன்.

மிருத்யுஞ்ஜயரை அவமதித்து விட்டோமே என்ற கவலைகூட பீஜகுப்தனுக்கு அவ்வளவாக இல்லை. அடக்கமற்ற தன் வார்த்தைகளினால் யசோதராவின் உள்ளத்தைக் காரணமின்றிப் புண்படுத்தி விட்டோமே என்ற வருத்தம்தான் அவன் உள்ளத்திலே மேலோங்கி யிருந்தது. அவன் கண்ணெதிரே யசோதராவின் உருவம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. யசோதராவின் எழில் உருவம் காதல் புரிவதற்கு ஏற்றதுதான். கள்ளங்கபடமற்ற அவளுடைய உள்ளம், அமைதியே உருவெடுத்த அமிர்தத்தை வர்ஷிக்கும் அவளுடைய கண்கள், லஜ்ஜையும் தேஜஸும் ஒருங்கே அமையப்பெற்ற அவளுடைய அழகிய முகாரவிந்தம்—இவையெல்லாம் அடிக்கொருதரம் அவன் கண்களெதிரே ஆனந்த நர்த்தனம் புரியத் தொடங்கின. ஆயினும் அவனால் யசோதராவைக் காதலிக்க முடியவில்லை. ஏனெனில் அவன் சித்திரலேகாவைக் காதலித்தான். சித்திரலேகாவினிடம் உள்ள மயக்கும் தன்மை யசோதராவிடத்தில் கிடையாது. யசோதராவின் இதயம் சித்

சாலைக்குத் தேன் இல்லாவிட்டால் நான் செத்தா போய்விடுவேன்? அதற்காகப் புதிதாக ஒரு புட்டி வாங்கவேண்டுமா?— பொதுப் பணத்தை ஏன் இப்படிக் கரியாக்குகிறீர்கள்?'' என்றார். ஸ்ரீமதி மீரா பென் வாயே திறக்கவில்லை.

★

பணத்தில் மாத்திரமா அவர் சிக்கனத்தைக் கையாண்டார்? வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவர் சிக்கனத்தை அனுஷ்டித்தார்.

காந்திஜி எப்போதும் மூன்றாம் வகுப்பு வண்டியில்தான் பிரயாணம் செய்வது வழக்கம். மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வதில்கூட அவர் மிகவும் சிக்கனமாகவே இருப்பார். 1945-ம் வருஷம் காந்திஜி வங்காளத்துக்குப் புறப்பட்டபோது, அவருக்கும் அவருடைய கோஷ்டிக்குமாக ரயிலில் இரண்டு கம்பார்ட்மெண்ட்கள் ரிசர்வ் செய்யப்பட்டன. இது காந்திஜிக்குத் தெரிந்ததும் அவர் தம் பேரன் ஸ்ரீ கனு காந்தியை அழைத்து அது உண்மையா என்று கேட்டார். ''ஆம், பாபுஜி!'' என்று பதில் அளித்தார் கனு.

''ஒரு கம்பார்ட்மெண்ட் நமக்குப் போதுமே!'' என்றார் காந்திஜி.

''இரண்டு கம்பார்ட்மெண்ட்களை ரிசர்வ் செய்து பணமும் கட்டியாகிவிட்டதே; இனிமேல் அதை ரத்துசெய்ய ரயில்வே அதிகாரிகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; பணமும் நமக்குத் திரும்பக் கிடைக்காது.''


''அதனால் என்ன? — பணம் போனால் பாதகம் இல்லை; இடமாவது மற்றவர்களுக்கு மிஞ்சும் அல்லவா! இப்போது ரயிலில் இடம் கிடைக்காமல் ஜனங்கள் எவ்வளவு திண்டாடுகிறார்கள்!''

இட விஷயத்திலும்கூட காந்திஜி இவ்விதம் சிக்கனத்தைக் கையாண்டார்.

காலத்தையும் அவர் வீணாக்குவதில்லை. ஒவ்வொரு நிமிஷத்தையும் பொன்போல் போற்றிப் பயன்படுத்தி வந்தார். பல ஆண்டுகளுக்கு முன் அவர் சபர்மதி ஆசிரமத்தில் வாசம் செய்தபோது, ஒவ்வொரு நாள் மாலைப் பிரார்த்தனையின் போதும் அங்கு கீதையில் இரண்டாம் அத்தியாயத்தின் கடைசியில் உள்ள சுலோகங்களை எல்லோரும் சேர்ந்து பாராயணம் செய்வது வழக்கம். ஒரு நாள் அப்படிப் பாராயணம் நடந்து கொண்டிருந்தபோது காந்திஜி மற்றவர்களைவிட வேகமாகச் சுலோகங்களைச் சொல்லத் தொடங்கினார். பிரார்த்தனை முடிந்த பிறகு ஆசிரம விர்வாசிகளில் ஒருவராகிய ஸ்ரீ மகன்லால் காந்தி இதைப்பற்றி மகாத்மாஜியிடம் குறிப்பிட்டார். அப்போது காந்திஜி சிரித்துக்கொண்டே, ''நான் பாராயணத்தைச் சீக்கிரமாக முடிக்க விரும்பினேன். அதன் மூலம் சில நிமிஷங்களைச் சிக்கனப்படுத்த முடியுமானால் அது நல்லது தானே!'' என்றார்.

* * *

ஒரு கெஜம் இரண்டு கெஜம் நீளமுள்ள சணல் கயிறுகளை காந்திஜி ஜாக்கிரதையாக எடுத்து வைத்திருப்பாராம். அவசியம் நேரும்போது அவற்றை எடுத்துக் கொடுப்பாராம். எந்தப் பொருளையுமே அவர் வரவுக் கணக்காகப் பத்திரமாக வைத்திருப்பாராம்.




நல்ல வேளையாக அகப்பட்டது. ஆசிரம வாசிகள் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, அதை காந்திஜியிடம் கொண்டு போய்க் கொடுத்தார்கள். காந்திஜி அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்.

★

பொதுப் பணத்தில் ஒரு தம்பிடியைக்கூட வீணாக்கக்கூடாது என்பது காந்திஜியின் கருத்து. ஒரு முறை ஸ்ரீமதி மீராபென் காந்திஜிக்குத் தெரியாமல் நான்கு அணா செலவழித்து விட்டதற்காக காந்திஜியின் சீற்றத்துக்கு உள்ளாக நேர்ந்தது. அப்போது காந்திஜி லண்டனில் வட்டமேஜை மகாநாட்டில் கலந்து விவாதித்துக் கொண்டிருந்தார். அவர் தங்கியிருந்த ஜாகைக்கும் வட்டமேஜை மகாநாடு நடந்த செண்ட் ஜேம்ஸ் மாளிகைக்கும் வெகுதூரம் இருந்தது. இதனால் மத்தியானச் சாப்பாட்டுக்கு அவர் தம் ஜாகைக்குப் போக முடிவதில்லை. சாப்பாடு மேற்படி மாளிகைக்கே வந்துவிடும். ஸ்ரீமதி மீராபென்தான் நாள்தோறும் சாப்பாடு கொண்டு வருவார். காந்திஜி உணவுடன் சிறிது தேனும் உண்பது உண்டு. தேனை அவர் விலைகொடுத்து வாங்கவில்லை. எகிப்து மக்கள் அவருக்கு அன்பளிப்பாக ஒரு ஜாடி நிறையத் தேன் அளித்திருந்தார்கள். அந்தத் தேனையே அவர் தினமும் கொஞ்சம் சாப்பிட்டு வந்தார். ஒரு நாள் ஸ்ரீமதி மீராபென் தேன் கொண்டுவர மறந்துவிட்டார். திரும்பிப் போய்க் கொண்டு வருவதானால் நேரமாகிவிடும் என்று கருதி, நான்கணா விலை கொடுத்து புதிதாக ஒரு தேன் புட்டியை வாங்கிக் கொண்டு வந்து வைத்தார் ஸ்ரீமதி மீராபென். காந்திஜி உணவை உண்டார். தேனையும் சாப்பிட்டார். அப்போது அந்தப் புதிய புட்டியைப் பார்த்தார். உடனே அவர் ஸ்ரீமதி மீராபென்னை நோக்கி, "இது எங்கிருந்து கிடைத்தது?—புதிதாக இருக்கிறதே?" என்று கேட்டார். ஸ்ரீமதி மீராபென் விஷயத்தை விளக்கிச் சொன்னார். அவ்வளவுதான்; — காந்திஜிக்குச் சீற்றம் உண்டாகி விட்டது. "ஒரு

மோட்சம் தந்த பெருமான்



நந்தனார் :—(மேலுலகத்தில்) அண்ணலே, வணங்குகிறேன். நான் எனக்கு மட்டும்தான் மோட்சம் தேடிக் கொண்டேன். ஆனால், தாங்களோ என் வர்க்கம் முழுவதற்குமே கதிமோட்சத்தைத் தேடிக் கொடுத்து விட்டீர்கள்!

சிக்கன  நிபுணர்

சபரி

காந்திஜி மிகவும் சிக்கனமானவர். எதையும் வீணாக்கமாட்டார். தண்ணீரைக்கூடச் செட்டாகத்தான் உபயோகிப்பார்.

இளமையிலிருந்தே இந்தச் சிக்கன வழக்கம் காந்திஜிக்கு உண்டு. லண்டனில் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தபோது, ஹோட்டலில் சாப்பிட்டால் செலவு அதிகமாகும் என்று கருதி, சொந்தமாகச் சமையல் செய்து சாப்பிட்டு வந்தார். வெகு தூரமானாலும் கால் நடையாகவே போய் விடுவார். உடைகளைத் தாமாகவே சலவை செய்து கொண்டார். இந்தச் சிக்கன வழக்கம் நாளடைவில் வளர்ந்து அவருடைய ஒவ்வொரு காரியத்திலும் அது ஒரு விசேஷ குணமாக அமைந்தது.

ஒரு பொருள் எவ்வளவு அற்பமானதாக இருந்தபோதிலும் சரி, அல்லது எவ்வளவு அதிகமாகக் கிடைத்தபோதிலும் சரி,—தேவைக்கு அதிகமாக அதை உபயோகிக்கக்கூடாது என்பது காந்திஜியின் கருத்து.

யாருக்காவது கடிதம் எழுதவேண்டுமென்று காந்திஜி விரும்பினால் ஒரு சிறு கடிதாசியை எடுத்துக்கொள்வார். அந்தச் சின்னஞ் சிறு கடிதாசியையும் அப்படியே உபயோகிக்கமாட்டார். அதை இரண்டாகவோ நான்காகவோ கிழித்து மிகவும் சிறிதாக்கி அதில்தான் எழுதுவார். விஷயம் கொஞ்சமாக இருந்தால் போஸ்ட்கார்டே எழுதி விடுவார். பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவதாயிருந்தால், அதற்காக நல்ல கடிதாசைத் தேடிக் கொண்டிருக்கமாட்டார். பழைய கடிதங்களின் பின்னால் எழுதி அனுப்பி விடுவார். குண்டூசியை அவர் விலைக்கு வாங்குவதே அபூர்வம். தமக்கு வரும் கடிதங்களில் உள்ள குண்டூசிகளை எடுத்துப் பத்திரமாக ஒரு டப்பியில் போட்டு வைத்துக்கொண்டு அதை உபயோகிப்பார். இது சம்பந்தமாக ஒரு ரசமான வரலாறு உண்டு.

காந்திஜி இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்குப் போய்க் கொண்டிருந்த போது, அவர் பிரயாணம் செய்த அதே கப்பலில் மற்றொரு ஆங்கிலேயனும் பிரயாணம் செய்தான். அவன் நாள்தோறும் காந்திஜியிடம் சென்று அவரைத் திட்டி விட்டுப் போவது வழக்கம். ஒரு நாள் அவன் சில அர்த்தமற்ற கவிதைகளைப் புனைந்து சென்று அவற்றைக் காந்திஜியிடம் கொடுத்து, "காந்தி, இதைப் படித்துப் பாரேன்!" என்று சொல்லிவிட்டுப் போனான்." காந்திஜி அதைப் படித்துப் பார்த்தார். அதில் விஷயம் ஒன்றும் இல்லை என்பது தெரிந்ததும், காந்திஜி அதில் செருகியிருந்த குண்டூசியை மாத்திரம் எடுத்து வைத்துக்கொண்டு, கடிதாசியைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டார். மறுநாள் காலையில் அந்த ஆங்கிலேயன் காந்திஜியிடம் வந்து, "நான் எழுதியதைப் படித்துப் பார்த்தீரா? அதில் ஏதாவது சாரம் இருந்ததா?" என்று கேட்டான். அதற்கு காந்திஜி, "ஓ, படித்துப் பார்த்தேன். இருந்த சாரத்தை எடுத்துப் பெட்டியில் பத்திரமாக வைத்துக் கொண்டு விட்டேன்!" என்றார். இதைக் கேட்டதும் அந்த ஆங்கிலேயன் வெட்கத்துடன் திரும்பிப் போய் விட்டான்.

காந்திஜி வெகுகாலம் வரை பௌண்டன் பேனாவால்தான் எழுதிக் கொண்டிருந்தார். ஒரு முறை எப்படியோ அவர் பௌண்டன் பேனா காணாமற் போய் விட்டது. அதுமுதல் அவர் பௌண்டன் பேனாவால் எழுதுவதே இல்லை. சாதாரண ஸ்டீல் பேனாவையும் மசிக்கூட்டையுமே உபயோகித்து வந்தார். சில சமயம் பென்சிலால்கூட எழுதுவது உண்டு. ஒரு முறை அவர் எழுதிவந்த சிறு துண்டுப் பென்சிலும் காணாமற் போய்விட்டது. காந்திஜி அதைத் தேடினார். கிடைக்கவில்லை. "எங்கே போச்சு?" என்று அவர் ஆசிரமவாசிகளைக் கடிந்து கொண்டார். ஆசிரம வாசிகளும் தேடிப் பார்த்தார்கள்; கிடைக்கவில்லை. அவர்கள் புதிதாக ஒரு நீளப் பென்சிலைக் கொண்டு வந்து காந்திஜியிடம் கொடுத்தார்கள். காந்திஜி அதை வாங்க மறுத்து, "புதுப் பென்சில் எனக்கு என்னத்துக்கு?" என்று சொல்லிவிட்டார். ஆசிரமவாசிகளின் நிலைமை சங்கடமாகிவிட்டது. அவர்கள் எங்கேயோ போய் மிகவும் சிரமப்பட்டு வேறொரு துண்டுப் பென்சிலைக் கொண்டு வந்து காந்திஜியிடம் கொடுத்தார்கள். காந்திஜி அதைப் பார்த்துவிட்டு, "பூ, இது யாருக்கு வேண்டும்? எனக்கு என் துண்டுப் பென்சில்தான் வேண்டும்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டார். அப்புறம் என்ன செய்வது? — ஆசிரமம் முழுவதும் சல்லடை போட்டுச் சலிப்பதுபோல வெகு நேரம் தேடிப் பார்த்தபோது அந்தப் பொல்லாத துண்டுப் பென்சில்

லட்சம் ரூபாய் வரி கொடுக்கக்கூடிய பீடி முதலாளி ஒருவர் முக்கூடலில் இருக்கிறார்.

ஆங்கிலேய நாகரிகத்திற்கு அடிமையான பிறகு அன்னிய நாட்டு ஸிகரெட்டுக்கு விளம்பரம் செய்யும் பத்திரிகைகள் பீடிக்கு விளம்பரம் செய்வதை இழிவென்று எண்ணிய காலமும் உண்டு. அந்தக் காலம் இப்போது மலை ஏறிவிட்டது.

ஒரு சமயம் பண்டித மோதிலால் நேருவிடம் ஒரு தேச பக்தர், "நீங்கள் மகாத்மாவின் சீடர் என்று சொல்லிக்கொண்டு ஸிகரெட் குடிக்கிறீர்களே, இது நியாயமா?" என்று கேட்டாராம். "அன்னிய நாட்டுத் துணிகளை நாம் கொளுத்தவில்லையா? அது போலவே அன்னிய நாட்டு ஸிகரெட்டுகளை நான் கொளுத்துகிறேன். இதில் என்ன தப்பு?" என்று சாதுர்யமாகப் பதில் சொன்னாராம் பண்டித மோதிலால் நேரு. ஆனால் நேருஜிக்கு முக்கூடல் கிளி மார்க் பீடியைப் பற்றித் தெரிந்திருந்தால், இந்த மாதிரி சாக்குப் போக்குச் சொல்லவேண்டிய அவசியம் இருந்திராது.

புகை குடிக்கும்வழக்கம் எப்படியோ இந்த நாட்டில் புகுந்து விட்டது. அதைக் கைவிட முடியாதவர்கள் சீமை ஸிகரெட் குடித்து ஏழை இந்தியாவின் பணத்தை அயல் நாட்டுக்கு அனுப்புவதற்குப் பதிலாக, சுதேசி பீடி குடித்து நம்முடைய நாட்டு மக்கள் பலருக்குத் தொழில் கொடுப்பது நல்லதல்லவா?

"நம்மால் வருடத்தில் ஒரு B. D. கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. நமது ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ ஆதிமூலம் ஒரே நாளில் எத்தனையோ ஆயிரம் பீடிகளைத் தயார் செய்து விடுகிறார்!" என்று நாஸரேத் என்ற ஊரில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் B. D. பட்டம் பெற்ற பாதிரியார் ஒருவர் சொன்னார். (B. D. என்பது Bachelor of Divinity என்று விரியும்.)

ஸ்ரீ ஆதிமூலத்தின் தந்தையான ஸ்ரீ சின்னையா நாடார் 1920-ம் வருடம் வியாபார நிமித்தம் பம்பாய்க்குச் சென்று திரும்பிய போது கதரணிந்து காந்திக் குல்லாய் தரித்துக் கொண்டு வந்தார். முக்கூடலுக்கு முதலில் கதரணிந்து வந்தவராதலால் இவரை 'முக்கூடல் காந்தி' என்று அழைப்பார்களாம். அவர் தொடங்கிய இரட்டைக் கிளிமார்க்கு பீடி வியாபாரத்தை ஸ்ரீ ஆதிமூலம் தம்முடைய பதினைந்தாவது வயதிலிருந்தே பொறுப்பேற்று நடத்தி வருகிறார். இன்று வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபாய்க்குமான வரி செலுத்தக் கூடியவாறு அவருடைய தொழில் வளர்ந்திருக்கிறது.

ஸ்ரீ ஆதிமூலத்தைக் கிளி என்று பொது மக்கள் சொல்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக அவர் வீட்டைக் கிளிக்கூண்டு என்று சொல்லாமல் கிளி வீடு என்று சொல்கிறார்கள்!

ஸ்ரீ ஆதிமூலம் இளம் வயதினராயிருந்தாலும் பழைய காலத்து மனிதர்களைப் போல் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு படபட வென்று நடக்கிறார். பி. ஓ. எல். எம். ஓ. எல். பட்டங்கள் பெறாதவரானாலும் நல்ல தமிழில் அழகாகப் பேசுகிறார். அவருடைய கையிலாவது பையிலாவது குறள் எப்போதும் இருக்கும்.

ஸ்ரீ ஆதிமூலம் எந்தக் காரியத்தையும் சாதிக்கும் திறமைசாலி. ஆனால் தம்மைப் பற்றித் தாமே புகழ்ந்து கொள்ளும் திறமையும் தம் பெருமையைப் பற்றித் தாமே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் திறமையும் அவரிடம் இல்லை. ஜில்லா போர்டு தலைவரான பிறகு தமக்குக் கிடைத்த நூற்றுக் கணக்கான வரவேற்புப் பத்திரங்களுக்குப் பதில் சொல்லும்போது, "காந்திஜியின் பேரால் இவற்றை நான் ஏற்றுக் கொள்கிறேன்!" என்று அவர் அடக்கத்துடன் தலை குனிந்து சொல்லி வருகிறார்.

தந்தைக்குப் பின் தாங்கமுடியாத தாவாக்களை நடத்தி வியாபாரத்தில் வெற்றி கண்டு தேவையான பொருளைச் சேர்த்து வைத்திருப்பதோடு சேர்த்த பொருளை செவ்வையான வழியில் செலவும் செய்கிறார்.

கல்வி ஸ்தாபனங்களுக்கு ஆயிரக்கணக்காக அள்ளிக் கொடுத்திருக்கிறார். முக்கூடல் கிராமத்து மக்கள் அள்ளிப் பருக 'ரிசர்வாயர்'களைக் கட்டித் தண்ணீர் தர்மம் செய்து வருவதோடு ஆஸ்பத்திரியும் வாசகசாலையும் நடத்தி வருகிறார். விளையாட்டுகளில் வல்லவராதலால் 'விவேகானந்தா பாட்மிண்டன் கிளப்' என்று ஒன்றும் நடத்தி வருகிறார். திருநெல்வேலி முக்கூடல் சாலையில் பதினையாயிரத்துக்கு மேல் செலவு செய்து பாலம் கட்டியிருக்கிறார். ஜில்லா போர்டில் பணமில்லா விட்டாலும் அதைப் பற்றி இவருடைய காலத்தில் கவலைப்பட வேண்டியதில்லை என்று ஜில்லா வாசிகள் எண்ணியிருக்கிறார்கள்.

இதனால் ஆஸ்பத்திரிகள், சாலைகள், சத்திரங்கள், திருநெல்வேலி, திருச்செந்தூர் போகும் முருகன் எக்ஸ்பிரஸ் ரயில்கள், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் அடங்கிய பாடசாலைகள் ஆகியவை யெல்லாம் "அபயம்! ஆதிமூலமே!" என்று இன்று கோஷித்து வருகின்றன. அவற்றின் அபயக் குரல் வீண் போகாது என்று நம்புகிறேன்.

அபயம் ஆதிமூலமே!

எம். ஆர். மேகநாதன்

தண் பொருனை நதி ஓடும் திருநெல்வேலி ஜில்லாவில்தான் தமிழ் பிறந்தது. அப்பனும் மகனும் சொல்லிக் கொடுத்த தமிழை அகத்தியர் பொதிகை மலையிலிருந்து நாணக்கு எடுத்துரைத்தார்.

"இமயத்தில் இட்டிலி!" என்று விருது கூறுதல் மிகையாகாது. இக பரம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது நமது இட்டிலியும் சாம்பாரும். இட்டிலியைச் சாப்பிட்டுவிட்டு, "இன்று விரதம்" என்று சொல்லிவிடுகிறோமல்லவா? இந்தியா முழுதும் நம் இட்டிலி படை யெடுத்துப் பரவி விருப்போடு பதரி நாராயணம்—கேதாரம் யாத்திரை செய்கிறவர்களும் பொட்டணம் கட்டிக் கொண்டு போகிறார்கள். ஆகவே இமயத்தின் உச்சியை அடைந்துவிட்டது நமது ஈடு இணையில்லாத தமிழ் நாட்டு இட்டிலி. அந்த இட்டிலியும் திருநெல்வேலி ஜில்லாவிலேதான் பிறந்திருக்க வேண்டும். பிறந்திராவிட்டாலும் நன்கு வளர்ந்து சிறந்திருப்பது இங்கேதான்!

"செத்தும் கெடுத்தான்" என்ற பழிச் சொல்லுக்கு எதிராக "செத்தும் கொடுத்தான்" என்ற புகழ்ச் சொல் பெற்ற சீதக்காதி; கம்பெனியாரைக் கதிகலங்க வைத்த கட்டப் பொம்மன்; நாட்டு நடையில் தேசியப்பாட்டுகளைப் பாடிய பாரதியார்; வெட்டிக்குப் போட்டியாக இந்தியக் கப்பலை ஓட்டிய சிதம்பரம் பிள்ளை; அந்தச் சிதம்பரம் பிள்ளைக்குத் தண்டனை கொடுத்த ஆஷ் என்ற ஆங்கிலேயரைச் சுட்டுக் கொன்ற வீரன் வாஞ்சி ஐயர்; காலஞ்சென்ற நீலன் சிலையை ஒலயிடச் செய்த சோமயாஜுலு; கம்பனைப் பற்றிய வம்புகளுக்கிடையே கம்ப ராமாயணத்துக்குத் தெம்பு கொடுத்து வளர்க்கும் ரஸிகமணி டி.கே.ஸி. —இவ்வளவு பேரும் பிறந்த திருநெல்வேலி ஜில்லாவில்தான் சமீபத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸுக்கு 52-க்கு 50 ஸ்தானங்கள் கிடைத்தன.



போட்டி போட்டு வோட்டுக்கு விடாமல் ஏகோபித்துத் தலைவரைத் தேர்ந்தெடுத்து நாட்டுக்கு வழி காட்டிய பெருமையும் திருநெல்வேலியைச் சேரும். எம். ஏ.க்கள் பி. ஏ.க்கள் எத்தனையோ பேர் இருக்க, எங்களுக்கு இவர்தான் வேண்டுமென்று ஸ்ரீ ஆதிமூலத்தைத் தலைவராக்கிய அங்கத்தினர்கள் வாழ்க!

"திருவாரூரில் பிறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி" என்பது போய், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள முக்கூடல் கிராமத்தை நினைக்க முக்தி என்று பீடி குடிப்பவர்கள் சொல்வார்கள்!

இந்திய தேசம் தென்பாண்டிய நாட்டிலுள்ள சிவகாசிக்கும் முக்கூடலுக்கும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. மேல் நாட்டுத் தீப்பெட்டிகளோடு சிவகாசி தீப்பெட்டி எப்படி போட்டி போடுகிறதோ, அப்படி அந்நிய நாட்டு ஸிகரெட்டுகளோடு முக்கூடல் பீடி போட்டி போடுகிறது. பீடியும் தீப்பெட்டியும் மிக முக்கியமான குடிசைத் தொழில்கள். அவற்றினால் இந்தியாவுக்கு எத்தனையோ கோடி ரூபாய் லாபம். சிவகாசியிலும் முக்கூடலிலும் சோம்பேறிகளைப் பார்க்க முடியாது. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக மேற்படி தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

முக்கூடல் ஒரு கிராம நகரம். இதைத் திருநெல்வேலியின் அமெரிக்கா என்று கூடச் சொல்லிவிடலாம். பீடி வியாபாரத்தில் கோடிக்கணக்காகத் தேடியவர்கள் இங்கு இருக்கிறார்கள். பீடியில் எப்படி கோடி கோடியாகச் சேர்க்க முடியும் என்று ஆச்சரியப்படுகிறவர்கள், முக்கூடல்காரர்கள் சர்க்காருக்குக் கொடுக்கும் வருமான வரியைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். வருடத்திற்கு எழு





எதிர்ப் பக்கம் மேலே: காந்தா (இசை); சிவகுருநாதன் (தமிழ்த் தேர்வு); மா. நாராயணன் (கையெழுத்து)


நடுவில்: மாணவர் மன்றத் தலைவர் டாக்டர் தர்மாம்பாள்



கீழே: நாகநாதன் (உரை வளம்) கற்பகம் (உரை வளம்); அனந்தலக்ஷ்மி (கதை)

●

இந்தப் பக்கத்தில்: 1. ரா. பால சுப்பிரமணியம் (கவிதை); 2 ஜெ. பரிமளா (உரை வளம்): 3. விழாவில் ஒரு காட்சி; 4. இரா. சீனிவாசன் (கதை) 5. நா. இராமய்யன் (தமிழ்த் தேர்வு); 6. எஸ். ரத்தினசாமி (வள்ளுவர், வள்ளலார் பரிசு); 7. எஸ். கல்யாணி (வள்ளுவர் வள்ளலார் பரிசு); 8. மன்றத்தாரின் பரிசில்கள்; 9. கு. இராமன் (வள்ளுவர், வள்ளலார் பரிசு); 10. லட்சுமி (இசை)











மாணவர் மன்றம் பதினெட்டாம் ஆண்டு விழா

- சென்னை மாணவர் மன்றத்தைத் திறம்பட நடத்தி வரும் தலைவர் டாக்டர் தர்மாம்பாள் அவர்களும்
- மாணவர் மன்றத்தார் அளித்த பல்வகைப் பரிசில்களும் பதக்கங்களும்
- பரிசுபெற்ற நூற்றுக்கணக்கான மாணாக்கர் மாணாக்கியரில் ஒரு சிலரும்
- ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை சர்க்கார் பொருளாதார நிபுணர் டாக்டர் நடராஜன் அவர்களும் பரிசு வழங்கிய ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் இங்கே காட்சி தருகிறார்கள்.





“மாணவர் மன்றத் தலைவர் டாக்டர் தர்மாம்பாள் அம்மாள் என்னை மிகவும் தரும சங்கடமான நிலையில் வைத்து விட்டார்கள். பரீட்சையே கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். என்னைக் கொண்டு பரீட்சையில் தேறி யிருப்பவர்களுக்கு வாழ்த்துக் கூறும்படி செய்து விட்டார்கள். இது தர்மமா?” என்று கேட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தார் “கல்கி” ஆசிரியர்.

குமரி முதல் வேங்கடம் வரையில் உள்ள பத்தாயிரம் மாணவர்கள் வழக் கட்டாயம் ஒன்றும் இல்லாமல் மாணவர் மன்றத்தின் பரீட்சைகளில் கலந்துகொண்ட அற்புதத்தைக் குறித்து வியந்தார். பரீட்சை முறையை வைத்துக் கொள்வதாயிருந்தால், இந்தமாதிரி மாணவர்களே மகிழ்ச்சியுடன் முன் வந்து பரீட்சை எழுதும் முறையைத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினார். மாணவர்கள் எல்லாரும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வந்து பரீட்சை எழுதும்படி செய்திருக்கும் மாணவர் மன்றத்தையும் அதன் தலைவர் டாக்டர் தர்மாம்பாள் அம்மையாரையும் பாராட்டினார். மாணவர் மன்றம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து இத்தகைய அரிய தொண்டைத் தொடர்ந்து செய்ய அதற்கு எல்லாரும் பொருள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பலவகைப் பரிசு பெற்ற மாணவர்களை வாழ்த்தினார்.

“போட்டியினால்தான் ஒவ்வொருவரும் முன்னுக்கு வர முடியும்” என்று கூறித் தம்முடைய வாழ்க்கையில் ஏற்பட்ட போட்டிச் சம்பவங்களை எடுத்துக் கூறினார் ஸ்ரீ தியாகராஜ பாகவதர். மாணவர் மன்றத்தார் நடத்திவரும் போட்டியில் வெற்றி பெற்ற நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளுக்குச் சுமார் ஒரு மணி நேரம் கால் கடுக்க நின்று பரிசுகள் வழங்கினார்.

“குட்டுப் பட்டாலும் மோதிரக் கையினால் குட்டுப்பட வேண்டும்” என்று பழமொழி உண்டு. மோதிரக் கையினால் குட்டுப் படுவதே பெருமை என்றால், ஸ்ரீ பாகவதருடைய விலை உயர்ந்த வைர மோதிரம் அணிந்த கையினால் பரிசுகள் பெற்றவர்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

மாணவர்கள் பரிசு வாங்கிக் கொள்ள மேடைக்கு வரும்பொழுதெல்லாம் சபையோர் கரகோஷம் செய்து மாணவர்களை உற்சாகப் படுத்தினர். கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்ரீ ரா. பாலசுப்பிரமணியம், ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் குமாரர் என்று கூறியதும் சபையில் எழுந்த கரகோஷ ஆரவாரத்தில் ஏற்கனவே மக்களால் முற்றுகை யிடப்பட்டிருக்கும் மண்டபத்துக்கு எங்கே ஆபத்து வந்து விடுமோ என்று எனக்குப் பயமாயிருந்தது.

கடைசியாக ஸ்ரீ பாகவதர் குடியரசுத் திருநாளை முன்னிட்டுத் தாம் இசைத் தட்டில் பாடியிருக்கும் “பாருக்குள்ளே நல்ல நாடு” என்ற பாரதியார் கீதத்தைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார். காந்தி மகான் மீது பாடியிருக்கும் ஒரு பாட்டை அவர் பாடும்போது மக்கள் கைகொட்டி ஆரவாரித்து மகிழ்ந்தனர். மாணவர் மன்ற ஆண்டு விழா இனிது முடிந்தது.

• • • •

பல பெரியோர்களின் ஆசியுடனும் டாக்டர் தர்மாம்பாள் அம்மையாரின் சலியாத உழைப்புடனும் திறமையாக நடந்து வரும் மாணவர் மன்றத்துக்குப் பொது மக்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து மன்றத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

பையனின் உதவி!



மனைவி:—உங்கள் பிள்ளை அநியாயமாய்ப் பிடிலைப் போட்டு உடைக்கிறான். கொஞ்சம் கூட மிரட்டாமல் நிற்கிறீர்களே?

கணவன்—சரி, சரி! இனிமேல் நமக்கும் அடுத்த வீட்டாருக்கும் சண்டை வராதே, அதைப் பாரு!

மாணவர் மன்றத்தின் மகத்தான தொண்டு

பகீரதன்

சென்னை நகரில் 'மாணவர் மன்றம்' என்னும் பெயருடன் ஒரு ஸ்தாபனம் இருப்பதாகப் பலர் அறிந்திருக்கக் கூடும். ஆனால் அந்த மன்றம் எத்தகைய மகத்தான தொண்டு செய்து வருகிறது என்பது அநேகருக்குத் தெரிந்திருக்க முடியாது.

மாணவர் மன்றத்தார் சென்ற ஆண்டில் நடத்திய போட்டிகளிலும் தேர்வு(பரீட்சை)களிலும் மொத்தம் பதினாயிரம் வாலிபர்களும் யுவதிகளும் குழந்தைகளும் ஈடுபட்டார்கள். ஒருவித வலுக்கட்டாயமில்லாமல் அவ்வளவு மாணவர் மாணவிகளும் பரீட்சை எழுதினார்கள். இந்தப் பதினாயிரம் பேரும் சென்னை நகரத்தில் மட்டும் வசிப்பவர்கள் அல்ல; தமிழ் நாடெங்கும் உள்ளவர்கள். கலாசாலை மாணாக்கர்களிலிருந்து ஐந்து வயதுக் குழந்தைகள் வரையில் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் சிறப்பாகத் தேறிய நூற்றுக் கணக்கானவர்களுக்கு மாணவர் மன்றம் பரிசுகள் வழங்கியது. பணப்பரிசு, நூற்றெட்டு காலணாப் பரிசு, பதக்கப் பரிசு, புத்தகப் பரிசு, வெள்ளிக் கோப்பைப் பரிசு, நற்சாட்சிப் பத்திரப் பரிசு,—இப்படிப் பல விதமான பரிசுகள் அளிக்கப்பட்டன.

இவ்வளவு காரியங்களையும் செய்வதற்குப் பணம் எப்படிக் கிடைத்தது என்பது ஒரு வியப்பான காரியந்தான். தமிழ் நாட்டில் நல்ல தொண்டுகளுக்குப் பொருளுதவி நிச்சயம் கிடைத்தே தீரும் என்பதற்கு மாணவர் மன்றம் ஓர் உதாரணம் என்று சொல்லலாம்.

• • •

சென்ற 22-ந் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று மாணவர் மன்றத்தின் பதினெட்டாவது ஆண்டு விழா சென்னை மெமோரியல் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு சென்னை அரசாங்கப் பொருளாதார ஆலோசனையாளர் டாக்டர் பி. நடராஜன் தலைமை வகித்தார். மன்றத்தார் சென்ற ஆண்டில் நடத்திய கவிதை, கதை, நாடகம், இசை, கட்டுரை, நடிப்பு, பேச்சு, எழுத்து முதலிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்காக "கல்கி" ஆசிரியரும் மேற்படி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதரும் விழாவுக்கு வந்திருந்தனர்.

அன்று பிற்பகல் சுமார் மூன்று மணிக்குப் பொது மக்களால் முற்றுகையிடப்பட்டிருந்த மெமோரியல் மண்டபத்துக்குள் நுழைவதற்கே பெரிய பிரயத்தனம் செய்ய வேண்டியதாகி விட்டது. மண்டபத்துக்குள்ளேயோ ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக எள் விழவும் இடம் இல்லாதபடி நெரிசலாக உற்சாகத்துடன் உட்கார்ந்திருந்தனர்.

கடவுள் வணக்கத்துடன் விழா ஆரம்பமாயிற்று. வசனத்திலும் கவிதையிலும் உபசாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மாணவர் மன்றத்தின் காரியதரிசியான புலவர் கோ. பி. வில்வபதி மன்றத்தின் ஆண்டு அறிக்கையை மள மள வென்று படித்து முடித்தார். பிறகு இரு சின்னஞ் சிறு குழந்தைகள் மேடையில் காலியாயிருந்த ஒரு சதுர கெஜத்துக்குள் நின்று ஆடிப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

பின்னர் விழாத் தலைவர் டாக்டர் நடராஜன் நிறுத்தி நிதானமாக நல்ல தமிழில் பேசினார். "இந்த மன்றம் பதினெட்டு ஆண்டுகளைக் கடந்து 'மேஜர்' அடைந்து விட்டது. இனிமேல் இந்த மன்றத்தின் வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை" என்று அபயமளித்தார். தற்கால கல்வி முறையில் உள்ள நலங்களையும் குறைகளையும் எடுத்துச் சொன்னார். பள்ளிக்கூடத்து மாணவர்கள் அரசியல் கட்சிகளில் ஈடுபடும் அறியாமையைக் கண்டித்தார். வாழ்வுக்கு அடிப்படையான ஆக்க வேலைகளில் ஈடுபட்டு நம் நாடு பெற்றுள்ள சுதந்தரத்தைப் போற்றி வளர்த்து வருவதுடன் தமிழ்ப் பண்பையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நிலைமையைக் கண்டு வைஸராய் லார்டு ரெடிங் திகைத்தார்; திணறினார். தம்முடைய திகைப்பையும் திணறலையும் வெளியிட்டுச் சொன்னார்.

கல்கத்தாவில் டிசம்பர் 14-ந் தேதி லார்டு ரெடிங்குக்கு ஐரோப்பிய வர்த்தக சங்கத்தார் உபசாரம் அளித்தனர். அதற்குப் பதில் சொல்லும்போது லார்ட் ரெடிங் தமது திகைப்பைப் பின்வரும் வார்த்தைகளில் வெளியிட்டார் :—

"சமூகத்தில் ஒரு பகுதியாரின் காரியங்கள் எனக்கு அர்த்தமாகவில்லை யென்பதை ஒப்புக் கொள்கிறேன். நான் இந்தியாவுக்கு வந்ததிலிருந்து இதைப்பற்றி யோசித்தும் எனக்கு அது விளங்கவில்லை. சர்க்காரைச் சண்டைக்கு இழுக்கும்படியாக வேண்டுமென்று சிலர் சட்டங்களை மீறுகிறார்கள்; தங்களைக் கைது செய்யும்படி சர்க்காரைக் கட்டாயப் படுத்துகிறார்கள். இதில் அவர்களுக்கு என்ன லாபம் கிட்டப் போகிறது என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். இன்னமும் எனக்குத் திகைப்பாகவும் குழப்பமாகவுமே இருக்கிறது!"

இவ்விதம் லார்ட் ரெடிங் பகிரங்கமாகச் சொன்னார். அவர் தமது ஆங்கிலப் பேச்சில் Puzzled and Perplexed என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்.

இந்த வார்த்தைகள் ஒத்துழையாமை இயக்கத்தின் சரித்திரத்தில் மிகப் பிரபலமாயின. "மகாத்மாவின் இயக்கம் லார்ட் ரெடிங்கைத் திகைத்துத் திண்டாடிப் போகும்படி செய்தது" என்று ஆயிரக்கணக்கான மேடைகளில் காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களும் பெருமிதத்தோடு எடுத்துச் சொன்னார்கள்.

இப்படி லார்ட் ரெடிங் திகைத்துத் திணறி நின்ற வேளையில் பூனைவேளையில் கரடியை விட்டு அடித்ததுபோன்ற ஒரு முயற்சி நடைபெற்றது. இந்தியாவின் அரசியலில் "மிதவாதிகள்" என்ற ஒரு பிரிவினர் இருந்தனர். கொஞ்ச காலமாக அவர்கள் இருந்த இடம் தெரியாமலிருந்தது. இப்போது அவர்கள் "நாங்களும் இருக்கிறோம்" என்று முன் வந்தார்கள். "நிலைமை மிஞ்சி விட்டது. இதை இப்படியே விட்டிருந்தால் வெள்ளம் தலைக்கு மேலே போய்விடும். உடனே ராஜிப் பேச்சுத் தொடங்க வேண்டும். நாங்கள் ராஜி செய்து வைக்கிறோம். இருதரப்பினரும் நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்!" என்று கூறிக்கொண்டு மிதவாதப் பிரமுகர்கள் ராஜி செய்து வைப்பதற்கு முன் வந்தார்கள்.

இவ்விதம் பூனைவேளையில் புகுந்த கரடியின் கதி என்ன ஆயிற்று என்பதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

★ திலகரும் பின்பற்றினார்! ★

கல்கத்தாவில் லோகமான்ய திலகரும் மகாத்மா காந்தியும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச நேர்ந்தது. மகாத்மா காந்தி நம் நாட்டு மொழிகளில் ஒன்று தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு ஹிந்துஸ்தானிக்குத் தேசிய மொழியின் ஸ்தானத்தைக் கொடுத்துப் பிரசாரம் செய்து வந்தார். ஆனால் திலகரோ அதை அவ்வளவு அவசியமாகக் கருதவில்லை. தேசிய மொழியின் விஷயத்தில் இருவருக்கும் அபிப்பிராய பேதம் இருந்து வந்தது.

அந்தக் கூட்டத்தில் திலகர் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். அவர் பேசி உட்கார்ந்ததும் காந்திஜி எழுந்து, "இப்பொழுது ஸ்ரீ திலகர் பேசியதைப் புரிந்து கொண்டவர்கள் தயவுசெய்து கைதூக்குங்கள், பார்க்கலாம்" என்றார் ஆங்கிலத்தில்.

வெகு சிலரே கை தூக்கினர். பிறகு "இந்தப் பேச்சைப் புரிந்து கொள்ளாதவர்கள் கை தூக்குங்கள்" என்று காந்திஜி ஹிந்துஸ்தானியில் சொன்னதுதான் தாமதம், கூட்டத்தில் தூக்காத கைகளே பாக்கி இல்லை.

காந்திஜி பிறகு திலகரைப் பார்த்து, "பார்த்தீர்களா? உங்களுடைய உயர்ந்த கருத்துக்கள் நாட்டாருக்குப் புரிந்து அதனால் அவர்கள் பயன் பெற வேண்டுமானால் அவர்களுக்குப் புரிந்த பாஷையில் பேசவேண்டும். அப்பொழுதுதான் நம் எண்ணம் கைகூடும்" என்றார்.

அதற்குப் பின்னர்தான் திலகர் நம் நாட்டு மொழிகளில் ஒன்று தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து ஹிந்துஸ்தானியைக் கற்கத் தொடங்கினார்.

கையொப்பம் இட்டார்கள். சேர்ந்தவர்களின் பெயர்கள் பத்திரிகையில் உடனுக்குடன் பிரசுரிக்கப்பட்டன; அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டன.

சிற்சில நகரங்களில் காங்கிரஸ் ஆதரவில் பொதுக் கூட்டங்கள் கூட்டக் கூடாதென்று அதிகாரிகள் உத்திரவிட்டனர். உடனே அந்த நகரங்களில் குறிப்பிட்ட இடங்களில் கூட்டம் நடத்தப்படும் என்று காங்கிரஸ் தலைவர்கள் அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள்.

வேறு சில இடங்களில் 144-வது பிரிவின் பிரகாரம் பேசக் கூடாது என்று அதிகாரிகள் சில பிரபல தலைவர்களுக்கு வாய்ப்பூட்டு உத்திரவு போட்டார்கள். அத்தகைய உத்திரவை மீறிப் பேசப் போவதாக மேற்படி தலைவர்கள் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்கள்.

இவ்வாறு தேசமெங்கும் பிரபல காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களும் சட்ட மறுப்புச் செய்து சிறை புகுவதற்குச் சர்க்கார் நடவடிக்கைகளே வசதி செய்து கொடுத்தன. அந்த வசதிகளைத் தலைவர்களும் ஊழியர்களும் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் எங்கேயும் கலகம், கலவரம் எதுவும் நிகழவில்லை. பொது மக்களின் உள்ளத்தில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆயினும் அவர்கள் பெரிய பெரிய சமூகத் தலைவர்களும் பிரமுகர்களும் சிறைபுகும் அதிசயத்தைக் கண்டு திகைத்துப்போயிருந்தார்கள். அவர்களுடைய உற்சாகத்தை வேண்டாத வழிகளில் பிரயோகிக்கவில்லை.—இந்த நிலைமை காந்திஜிக்கு எல்லையற்ற உற்சாகம் அளித்ததில் வியப்பில்லை அல்லவா?

* * *

மேலும் மேலும் நாலா பக்கங்களிலிருந்தும் பலர் கைதியான செய்திகள் வந்து கொண்டேயிருந்தன.

பண்டித நேரு கைதியானதற்கு மறுநாள் கல்கத்தாவில் தேசபந்துதாஸின் தர்ம பத்தினி ஸ்ரீ வஸந்தி தேவியும் அவருடைய சகோதரி ஸ்ரீமதி ஊர்மிளா தேவியும் கைதியானார்கள்! இவ்விதம் இரண்டு பெண்மணிகள்!—அதிலும் எத்தகைய பெண்மணிகள்,—சிறைப்பட்ட செய்தி இந்தியா தேசத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிப் போட்டது.

மகாத்மா சந்தோஷத்தினால் குதித்தார். ஆசிரமத்துப் பெண்மணிகளைப் பார்த்து "உங்களில் யார் யார் சர்க்கார் விருந்தாளிகளாகத் தயார்?" என்று கேட்டார். எல்லாரும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தனர். அவர்களில் சிலர் ஏற்கெனவே தென்னாப்பிரிக்காவில் சிறை அநுபவம் பெற்றவர்கள். அவர்களைப் பார்த்து மகாத்மா, "இந்தத் தடவை வங்காளத்துச் சகோதரிகள் உங்களை முந்திக் கொண்டு விட்டார்களே!" என்று பரிகாசம் செய்தார்.

பத்தாந்தேதி இரவு பத்துமணிக்குமேல் மகாத்மா படுத்துத் தூங்கிய பிறகு, "தந்தி! தந்தி!" என்ற குரல் கேட்டது. மகாத்மா விழித்து எழுந்தார். மற்றவர்களை முந்திக்கொண்டு அவரே வாசலில் போய்க் கையெழுத்துப் போட்டுத் தந்தியைப் பிரித்துப் படித்தார். எதிர்பார்த்தபடியே தந்தியில் மிக மிக முக்கியமான செய்தி இருந்தது.

தேசபந்து தாஸ், மௌலானா ஆஸாத், ஸஸ்மால், பத்மராஜ், அக்ரம்கான் ஆகியவர்கள் கல்கத்தாவில் கைதுசெய்யப்பட்டதாகச் செய்தி கூறியது.

தேசபந்து தாஸ் அந்த மாதக் கடைசியில் ஆமதாபாத்தில் நடப்பதற்கிருந்த காங்கிரஸ் மகா சபையில் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். எனவே, இது மிக முக்கியமான செய்தி அல்லவா? அந்தச் செய்தியைக் கேட்டுவிட்டு ஆமதாபாத்திலிருந்து தலைவர்கள் வந்தார்கள். (காங்கிரஸை முன்னிட்டு அப்போது குஜராத் தலைவர்கள் அனைவரும் ஆமதாபாத்தில் தங்கியிருந்தார்கள்.) ஸ்ரீ வல்லபாய், ஸ்ரீ மாவலங்கர், தயாள்ஜி, கல்யாண்ஜி முதலியவர்கள் வந்தார்கள். மேலே நடக்கக்கூடிய சம்பவங்களைப் பற்றியும் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும் அவர்கள் மகாத்மாவுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அன்றிரவு ஆசிரமத்தில் 'சிவராத்திரி' கொண்டாடப்பட்டது.

மறுநாளும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தலைவர்கள் சிறை புகுந்த செய்திகள் வந்து கொண்டிருந்தன.

சென்னையிலிருந்து ராஜாஜி தாம் வேலூரில் 144-வது பிரிவை மீறியதாகத் தந்தி அனுப்பினார். "மிகவும் சந்தோஷம். உங்களுக்குப் பூரண தண்டனை கிடைக்குமாக!" என்று மகாத்மா பதில் தந்தி அடித்தார். அடுத்த சில நாளைக்குள் கல்கத்தாவில் இரண்டாயிரம் தொண்டர்கள் சிறைப்பட்டார்கள். டில்லியில் ஹஸரத் ஆஸப் அலி முதலியவர்கள் சிறை புகுந்தார்கள். பஞ்சாபில் மிச்சமிருந்த ஆகா ஸப்தார், ஸத்தியபால் முதலியவர்களும் சிறைப்பட்டார்கள்.

தேசமெங்கும் சிறைப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரம், இரண்டாயிரம், பதினாயிரம், இருபதினாயிரம் என்று போய்க் கொண்டேயிருந்தது.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

31. பூஜைவேளையில் கரடி

"பண்டித மோதிலால் நேருவை எப்போது கைது செய்து விட்டார்களோ, அப்போது தேசபந்து தாஸையும் சீக்கிரத்தில் கைது செய்து விடுவார்கள். பிறகு என்னையும் அதிக காலம் வெளியில் விட்டு வைத்திருக்க மாட்டார்கள்!" என்று மகாத்மா ஆசிரம வாசிகளிடம் உற்சாகத்துடன் கூறினார்.

"அப்படி எங்களையெல்லாம் கைது செய்து விட்டாலும் ஆமதாபாத் காங்கிரஸை நிறுத்திவிடக் கூடாது. எப்படியும் காங்கிரஸ் நடந்தே தீரவேண்டும்" என்றும் தெரிவித்தார்.

மகாத்மா அப்போது உற்சாகத்தின் சிகரத்தில் இருந்தார். இது ஆசிரமவாசிகளிடம் அவர் அவ்வப்போது குதூகலமாகப் பேசியதிலிருந்தும் உரக்கச் சிரித்ததிலிருந்தும் வெளியாயிற்று.

பண்டித நேரு முதலியவர் கைது செய்யப்பட்டதனால் அலகாபாத்துக்கு யாரையாவது அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அலகாபாத்தில் அப்போது "இண்டிபெண்டெண்ட்" என்னும் தினப் பத்திரிகை பிரபலமாயிருந்தது. நேரு குடும்பத்தினர் அதை நடத்தினார்கள். அதன் ஆசிரியர் ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப் மதுரையைச் சேர்ந்தவர். ஆங்கிலத்தில் மிகச் சிறந்த எழுத்தாளர். (தற்சமயம் பிரபல எழுத்தாளராயிருக்கும் ஸ்ரீ போத்தன் ஜோஸப்பின் சகோதரர்.) அதோடு, மகாத்மாவிடம் மிக்க பக்தி கொண்டவர். அவர் ஆசிரியராயிருந்த "இண்டிபெண்டெண்ட்" மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தைத் தீவிரமாக ஆதரித்தது. எனவே, நேரு குடும்பத்தாருடன் ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்பும் கைது செய்யப்பட்டார். பண்டித மோதிலால் நேருவுக்கு ஆறு மாதமும் ஸ்ரீ ஜார்ஜ் ஜோசப்புக்கு இரண்டு வருஷமும் சிறைவாசம் விதிக்கப்பட்டதாக மறு நாளே செய்தி வந்தது. (அப்போதெல்லாம் அரசியல் வழக்குகள் சட் பட்டென்று தீர்ந்து போயின. ஏனெனில் ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் வக்கீல் வைத்து வழக்காட மறுத்தனர். ஆகவே மாஜிஸ்ட்ரேட்டுகள் உடனுக்குடன் தீர்ப்புக்கூறி தண்டனை விதித்தார்கள்.)

"இண்டிபெண்டெண்ட்" பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதில் உதவி செய்வதற்காக யாரையாவது அனுப்பும்படி ஸ்ரீ மகாதேவ தேஸாய் மகாத்மாவுக்குத் தந்தி யடித்திருந்தார். அதற்கிணங்க மகாத்மா ஸ்ரீ பியாரிலாலையும் ஸ்ரீ தேவதாஸையும் அலகாபாத்துக்கு உடனே புறப்படச் சொன்னார். ஸ்ரீ தேவதாஸ் அலகாபாத்தில் கைது செய்யப்படக்கூடும் என்று எல்லாருக்கும் தெரிந்திருந்தது. ஸ்ரீ தேவதாஸ், மகாத்மாவிடம் விடை பெற்றுக் கொள்வதற்காக வந்து நமஸ்காரம் செய்தார். அப்போது மகாத்மா உரக்கச் சிரித்த வண்ணம் ஸ்ரீ தேவதாஸுக்கு ஆசி கூறியதுடன் அவர் நமஸ்கரித்து எழுந்ததும் அவர் முதுகில் பலமாக ஒரு 'ஷொட்டு'க் கொடுத்தார். அதன் சத்தம் ஆசிரமம் முழுவதும் கேட்டது! அதிலிருந்து ஆசிரம வாசிகள் அனைவரும் மகாத்மா எவ்வளவு குதூகலமாயிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

உண்மையிலேயே மகாத்மா குதூகலமடையக்கூடிய முறையில் தேசமெங்கும் அப்போது நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. லார்ட் ரெடிங்கின் சர்க்கார் கையாண்ட முறைகள் மகாத்மாவின் மனதுக்கு உகந்த முறையில் தேசமெங்கும் சாத்விகச் சட்டமறுப்பு இயக்கம் நடப்பதற்குச் சாதனமாயிருந்தன.


"தேசியத் தொண்டர்படை திரட்டுவது சட்ட விரோதம்" என்று அதிகார வர்க்கத்தார் உத்திரவிட்டனர். உடனே ஒவ்வொரு முக்கியமான நகரத்திலும் பிரபல தலைவர்கள் தொண்டர் படையில் சேர்ந்து



● கவர்னர் ஜெனரல் பதவியை
விட்டு விலகுவதில் ராஜாஜிக்கு
ஒரே குதூகலம் என்று தெரி
கிறது. ● ரயில்வே மந்திரிக்
கும் உதவி பிரதம மந்திரிக்கும்
நடுவில் வீற்றிருக்கும் போதும்.
● பிரதம மந்திரி ஜவாஹர்லா
லிடம் விடைபெறும் போதும்.
● வரப்போகும் ஜனாதிபதியை
வரவேற்று அவர் தங்கவேண்
டிய ஜாகையைச் சுற்றிக் காட்
டும்போதும். ● ருஷ்ய ஸ்தா
னிகர் நோபுர் நோவிகா
வுடன் கைகுலுக்கும் போதும்.






● ரிக்கெட் தலைவர்களுக்
கும் பேட்டி கொடுக்கும்
போதும். ● மந்திரிகள்,
அவர்களுடைய மனைவிமார்
களுடன் குருப் போட்டோ
எடுத்துக்கொள்ளும்போதும்
கூட ராஜாஜி ஒரே குதூ
கலமாய்த்தா னிருக்கிறார்......
● ஆனால் ராஜாஜிக்கு
விடை கொடுக்கும் நேருஜி
யின் முகம் ஏன் வாட்ட
முற்றிருக்கிறது?


"விடை கொடுங்கள்

நேருவின் மனம் புண்படலாம் நடக்கலாமா?" என்று சிங்களவர்களின் பத்திரிகையான "டெயிலி நியூஸில்" இலங்கையர்கள் எழுதும் கடிதங்கள் இப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இலங்கை இந்தியர்களின் பிரச்னையைப்பற்றி சர்க்காருடனே அல்லது வேறு யாருடனோ இம்முறை பேசப் போவதில்லை என்று சொல்லிய நேருஜீ கடைசியில் பல லட்சம் ஜனங்கள் முன் தமது மன வேதனையைக் கல்லும் கரையும்படி உருக்கமாகச் சொல்லிவிட்டுப் போனார்.

இந்தியத் தலைவர்கள் நேருஜீயுடன் இரு முறை ரகசிய மகாநாடு கூடிப் பேசினார்கள். தங்கள் குறைகளை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். ஏதாவது ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்று கோரினார்கள். அவ்வளவுக்கும் நேருஜீ ஒரு சில வார்த்தைகளில் பதில் சொன்னார். "இலங்கையும் இந்தியாவும் சுதந்திர நாடுகள்; ஒன்றின் உள் நாட்டு விஷயங்களில் இன்னொன்று தலையிடுவதற்கில்லை. உங்கள் பிரச்னைகளை முக்கியமாக நீங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். குறைகளிருந்தால் பயந்து ஓடிவிடாமல் கிளர்ச்சி செய்து போராடுங்கள்" என்றார்.

சர்வதேசத் தொழில் மகாநாடு

இலங்கையில் இயற்கை வளப்புமிக்க மலைப்பிரதேசமான நுவரெலியாவில் சர்வதேசத் தொழில் ஸ்தாபன மகாநாடு இப்பொழுது நடக்கிறது. இருபது நாடுகளைச் சேர்ந்த சுமார் இருநூற்றைம்பது பிரதிநிதிகளும் அனேகம் சர்வதேசப் பத்திரிகைக்காரர்களும் இந்த மகாநாட்டுக்கு வந்திருக்கிறார்கள். சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் முன்போல மேற்கத்திய நாடுகளிடம் மட்டும் இனிக் கவனம் செலுத்திக் கொண்டிருக்க முடியாதென்றும் ஆசியாவின் கைத்தொழில் விவசாயத் தொழில்களை அபிவிருத்தி செய்து வறுமையை விரட்டியடிக்காவிடில் அகில உலகத்துக்குமே ஆபத்தென்றும் அனேகமாக எல்லாப் பிரதிநிதிகளும் மகாநாட்டில் வற்புறுத்தினார்கள். முன்போல ஆசியாக் கண்டம் ஐரோப்பாவுக்குத் தொலை தூரத்திலுள்ள பிரதேசமல்ல. உலக நாடுகள் இன்று ஒன்றையொன்று அதிகம் அண்டியிருக்கவேண்டியிருப்பதால் உலகின் எந்த ஒரு மூலையில் வறுமை தாண்டவமாடினாலும் அது உலகத்துக்கே ஆபத்தென்று ஒருவர் எச்சரித்தார்.

புது வருஷம்!



புதிய 1950-ம் ஆண்டு பிறக்கும்போது உலகப் பிரமுகர்களின் நிலை இவ்விதம் இருந்தது! இடதுபுற மிருந்து: ஸ்டாலின், சியாங்காய் ஷேக் - மாஸே துங், சர்ச்சில் - ஆட்லி, நேரு - ட்ரூமன்.

நமது இலங்கைக் கடிதம்

வந்தார், பார்த்தார், வெற்றி கொண்டார்!

ரஜனி

கொழும்பு, ஜனவரி 20

சீஸர் வந்தார், பார்த்தார், வெற்றி கொண்டார் என்பார்கள். அது அந்தக் காலத்திய கதை. இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு இலங்கைக்கு வந்தார்; ஒரு வாரம் தங்கியிருந்து பார்த்தார்; குழந்தை குட்டி கிழம் உள்பட சகலருடைய உள்ளங்களையும் வெற்றி கொண்டு பறந்துபோய் விட்டார்!

நேருஜீ இங்கு வந்துவிட்டுப் போனது ஒரு பெரிய புயல் காற்று வீசிவிட்டு நின்றதைப் போலிருக்கிறது. அவர் இங்கு தங்கியிருந்த ஒருவாரகாலம் முழுவதும் கொழும்பு நகரம் ஒரு பெரிய தேசியத் திருவிழாவைக் கொண்டாடுவதைப் போலத் தானிருந்தது. ஒவ்வொரு நாளும் தெருக்களில்தான் என்ன கூட்டம்! ஜனங்களிடையில் தான் என்ன உற்சாகம்! கண்டி, கம்பளை, யாழ்ப்பாணம், நுரேலியா முதலான தொலை தூரங்களிலிருந்தெல்லாம் தொழிலாளர்களும் பள்ளி மாணவர்களும் பல்லாயிரக் கணக்கிலே தினசரி பஸ்களில் வந்து பண்டிட்ஜீ தங்கியிருந்த ராணி மாளிகை வாசலில் தவம் கிடக்க ஆரம்பித்தார்கள். உலகில் வேறு எந்த நாட்டையும் சேர்ந்த ஒரு தனி மனிதருக்கு இவ்வளவு உபசாரம் நடந்திருக்க முடியாது என்று சொல்லும்படி இலங்கை மகா ஜனங்கள் அவ்வளவு அமோகமான ராஜோபசாரம் செய்தனர் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரிக்கு!

நேருஜீ விமானத்தில் ஏறி உட்கார்ந்து இந்தியாவுக்குப் புறப்பட்டதும் "அப்பாடா!" என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு ஆசுவாசப் படுத்திக் கொண்டார்கள் இலங்கைப் போலீசார்! "நாம்தான் இத்தனை ஜபர்தஸ்துகள் செய்கிறோமே தவிர அந்த மனிதர் கொஞ்சமாவது தம்முடைய பாதுகாப்பில் அக்கறை காட்டுகிறாரா? அலட்சியமாக மோட்டார் காரின் மேற் கூரையில் உட்கார்ந்து அவர் போவது நமக்கல்லவா 'பக்' 'பக்' என்கிறது!" என்றார் ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி.

கல்லையும் கரைக்கும் பிரசங்கம்

இலங்கை மகா ஜனங்களின் சார்பாக குதிரைப் பந்தய மைதானத்தில் ஒரு பிரம்மாண்டமான ஜன சமுத்திரத்தின் முன்னால் நின்று பண்டித நேருவுக்கு ஸர் எர்னஸ்டு டி சில்வா ஒரு உபசாரப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்தார். அப்பொழுது நேருஜீ நிகழ்த்திய பிரசங்கம் சரித்திரப் பிரசித்தமானது. இலங்கை "டெய்லி நியூஸ்" பத்திரிகை குறிப்பிட்டிருந்ததைப் போல இவ்வளவு உத்வேகமான பிரசங்கத்தை இலங்கையில் வேறு என்றுமே கேட்டதில்லை. ரேடியோ சிலோன் அன்று பண்டித நேருவின் பிரசங்கத்தை ரிக்கார்டு செய்திருந்தது. திறந்த வாய் மூடாமல் பிரமை கொண்டவர்களைப் போல பல லட்சம் ஜனங்களோடு ஒருவராக அன்று பிரசங்கத்தைக் கேட்டவர்கள் ஆர அமர மறுபடியும் அதைக் கேட்பதற்காக ரேடியோ சிலோன் திரும்பவும் அந்த ரிக்கார்டை ஒரு நாள் அஞ்சல் செய்தது.

பண்டிட்ஜீ உலக ராஜீய நிலைமையை விரிவாக விமர்சனம் செய்து விட்டு இந்தியத் தோட்டத் தொழிலாளர் நிலைமையைப்பற்றி பிரஸ்தாபித்தார். ஒவ்வொரு முறையும் இலங்கைக்கு வரும்பொழுது தோட்டத் தொழிலாளரைப் பாராமல் திரும்புவதில்லையென்றும் இம்முறை தோட்டங்களுக்குப் போக அவகாசம் கிடைக்காததற்கு வருந்துவதாயும் சொன்னார். "இங்குள்ள இந்தியர்களைப் பற்றிய அனேகப் பிரச்னைகளிருக்கின்றன. அவைகளை நினைக்கும்பொழுது என் மனம் வேதனையடைகிறது. இலங்கையின் பொருளாதார சுபிட்சத்துக்கு அரும்பாடுபட்ட இவர்களிடம் உங்கள் அரசாங்கம் அனுதாபம் காட்டி நியாயம் வழங்கும் என்று நம்புகிறேன்" என்று சொன்னார்.

இதை அவர் உருக்கமாகச் சொல்லியது இலங்கையர்களின் மனதையே ஒரு கலக்கு கலக்கி யிருக்கிறதென்பதற்கு அறிகுறியாக, "உலகப் பெரியார்களில் ஒருவரான பண்டித

கண் காட்சியில்!



காங்கிரஸ் சுதேசிப் பொருட்காட்சியில் காண வேண்டிய அதிசயங்களில் ஒன்று டீ மார்க்கெட்டிங் போர்டார் நடத்தும் போஜன சிற்றுண்டிச்சாலை.

● இங்கே, மின்சார சக்தியினால் தோசைமா தானே அரைத்துக் கொள்வதையும், கரியும் விறகும் புகையுமின்றி மின்சார அடுப்பில் தோசை வார்க்கப் படுவதையும் காணலாம்.

● இந்த ரேஷன் காலத்தில் வேறெங்கும் கிடைக்காத உயர்தரச் சிற்றுண்டிகள், காப்பி, டீ இவை அருந்தலாம்.

குழந்தைகளின் குதூகலம்



ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு விலகித் தமிழ்நாடு வந்து சேர்ந்தது பற்றித் தமிழ் இலக்கியம் முதலிய குழந்தைகள் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றன.



அகில இந்திய காதி, சுதேசி, தொழிற் பொருட்காட்சி

தேனாம்பேட்டை :: மதராஸ்

“ஸர்வோதய தினம்”

30—1—1950 திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி	—	பாட்டு
சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடய்யா	—	பிடில்
கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன்	—	மிருதங்கம்
ஸ்ரீ விஸ்வாத்ரி அய்யர்	—	கடம்

அன்றைய தினம் பொருட்காட்சி டிக்கெட் வருமானத்தை சென்னை கடற்கரையில் ஸ்தாபிதமாக விருக்கும் மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஸ்தூபி நிதிக்குக் கொடுக்கப்படும்.

எஸ். வெங்கட்ராமன், காரியதரிசி.
காதி, சுதேசி, தொழிற் பொருட்காட்சி

ரூ. 5—0—0 அளித்த அன்பர்கள் :

ஸ்ரீமதி லக்ஷ்மி, புதுக்கோட்டை; ஸ்ரீ வி. ராமநாத ஐயர், கபா ஆயில் மில்காரர்கள் சங்கம், வாரங்கல்; தாசபளஞ்சிக ஜுவிலிரிங் கமிட்டி, காரமடை; ஸ்ரீ டி. என். கோபாலகிருஷ்ணன், சுதேசி இண்டஸ்டிரீஸ், மேற்கு வங்காளம்; ஜனாப் முகம்மது இப்ராஹிம், மூர் தெரு, சென்னை; ஸ்ரீ டி. பி. சுந்தரம், தோட்டியம், திருச்சி ஜில்லா; ஸ்ரீ டி. விஜயராகவன், திருவல்லிக்கேணி, சென்னை; ஸ்ரீ கே. ரங்காச்சாரி, 42, குமாரசாமிப் பட்டி கிழக்குத் தெரு, சேலம்; ஸ்ரீ கி. ஷண்முகம் செட்டியார், செவந்திப்பட்டி, தேனூர்; ஸ்ரீ பெ. திருஞானசம்பந்தன், பிரின்ஸிபால், அரசர் கல்லூரி, திருவையாறு; டாக்டர் ஆர். சாம்பமூர்த்தி, புளியவலம், திருச்சி; ஸ்ரீ டி. எஸ். ரங்கநாத ஐயர், பி. ஏ. எல். டி. தியாகராயநகர், சென்னை; ஸ்ரீ வேலுசாமி, காரியதரிசி, சீர்திருத்த நாடார் வாலிபர் சங்கம், ராசிபுரம்; ஸ்ரீ கி. ரா. கோபாலன், வில்லிவாக்கம், சென்னை. ஆக ரூ. 70 0 0

ஸ்ரீமதி எஸ். எம். லலிதா, தேவி நிலையம், கூனூர் 4 0 0

ஸ்ரீ எஸ். என். வெங்கட்ராமன், பவானிசாகரம். 3 10 0

ஸ்ரீ ஆர். பி. கவாமிநாதன், திருச்செந்தூர். 2 8 0

ஸ்ரீ ஏ. சூரணகுருசாமி, திருச்செந்தூர். 2 8 0

ரூ. 2—0—0 கொடுத்த அன்பர்கள் :

ஸ்ரீ வி. ஆர். கோபால அய்யர், உப தலைவர், சேலம் ஹோட்டல் தொழிலாளர் சங்கம், சேலம்; ஸ்ரீ பி. கே. கிருஷ்ணமூர்த்தி, பின்னவாசல், பூவனூர் போஸ்டு; ஸ்ரீமதி அரவிந்த லோசனி, கார்ப்பொரேஷன் பெண்கள் பாடசாலை, எழும்பூர், சென்னை; ஸ்ரீமதி ஞானாம்பாள், தஞ்சாவூர்; ஸ்ரீமதி எம். பத்மா, உல்சூர், பங்களூர்; ஸ்ரீ எம். நாராயணசாமி, கம்பம்; ஸ்ரீ தி. பா. கோபால கிருஷ்ணன், விழுப்புரம்; ஸ்ரீ எம். சிவசாமி கன்னூர்பாளையம், காரமடை; ஸ்ரீ எஸ். என். ஜகன்நாதன், தேவி நிலையம், கூனூர். ஆக ரூ. 18 0 0

ரூ. 1—0—0 கொடுத்த அன்பர்கள் :

ஸ்ரீ கே. ராதாகிருஷ்ணய்யா, போடிநாய்க்கனூர்; ஸ்ரீ கே. ஆர். சுந்தரசாமி, 5-ம் பாரம், போர்டு உயர்தர பாடசாலை, திருச்செந்தூர்; ஸ்ரீ செல்லையா பிரதர்ஸ், ஆலங்கநல்லூர்; ஸ்ரீ ஆர். ஆர். குப்புசாமி, ராமய்யன்பாளையம், சேயூர் போஸ்டு; ஸ்ரீ கே. நடராஜன், வடமணப்பாக்கம்; ஸ்ரீ கே. விஸ்வநாதன், மல்லீஸ்வரம், பங்களூர்; ஸ்ரீ எம். வி. கோபால் நாயுடு, கொத்தவால்சாவடி, சென்னை; ஸ்ரீ ஆர். கண்ணன் செட்டியார், கொத்தவால் சாவடி, சென்னை; ஸ்ரீ வி. பி. அண்ணாதுரை முதலியார், கொத்தவால்சாவடி, சென்னை; ஸ்ரீ எம். நடேச முதலியார், கொத்தவால் சாவடி, சென்னை; ஸ்ரீ வ. தங்கரத்தினம், கொத்தவால்சாவடி, சென்னை; ஸ்ரீ எம். ஏகாம்பரம், கொத்தவால்சாவடி, சென்னை; ஸ்ரீ மாரிமுத்து, கொத்தவால்சாவடி, சென்னை; ஸ்ரீ பி. குப்புசாமி, சிந்தாதரிப்பேட்டை, சென்னை; ஸ்ரீமதி என். ரஞ்சிதா, ராஜன் நிலையம், அகரமானம்பேட்டை; ஸ்ரீ எம். எம். சுப்பராமன், கிருஷ்ணன் கோயில் 1-ந் தெரு, தஞ்சாவூர்; ஸ்ரீ எம். எம். முத்துசாமிச் செட்டி, மணப்பாறை; ஸ்ரீ கி. ஆர். தருமராஜுலு, ஆலை, சென்னை; ஸ்ரீ ஜி. எஸ். சேதுராமன், நெல்லிக்குப்பம்; ஸ்ரீ கே. சுப்பிரமணியம், திருச்சி; ஸ்ரீ கே. எஸ். ராஜகோபாலன், மீரட் கண்டோன்மெண்ட்; ஸ்ரீ ஏ. மணவாளன், கோடம்பாக்கம், சென்னை; ஸ்ரீ இ. கிருஷ்ணன் குட்டி (1-1-0) கொல்லங்கோடு; ஸ்ரீ கே. ராமநாதன், நகரம் போஸ்டு, தஞ்சை; ஸ்ரீ கி. ஹரிஹரன், பார்னல் ஸ்ரீரக். எஸ். ஐ. ஆர். தனுஷ்கோடி. ஆக ரூ. 25 1 0

யாத்திரா மார்க்கம்!



இந்த இசைத் தட்டில் அவருடைய குரல் இனிமையும் சங்கீதமும் உணர்ச்சி பாவமும் சிகரத்தை எட்டியிருக்கின்றன. மெட்டுக்கள் வெகு அழகாக அமைந்திருக்கின்றன.

"ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!" என்னும் புகழ் பெற்ற பாரதியார் பாடலுக்கு மெட்டு அமைத்த ஸ்ரீ எஸ். வி. வெங்கட்ராமன் இந்தப் பாடல்களுக்கும் மெட்டு அமைத்திருப்பதோடு பின்னணி சங்கீதமும் உதவியிருக்கிறார் என்றால், வேறு என்ன சொல்ல வேண்டும்?

ஆமாம்; ஒன்று சொல்ல பாக்கி இருக்கிறது. இந்த இசைத் தட்டு விற்பனையில் பாடகிக்கு உரிய சன்மானம் முழுதும் மகாத்மா காந்தி ஸ்தூபி நிதிக்குச் சேருகிறது.

• • •

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாவிலும் மகாத்மா ஸ்தூபி நிதி வசூல் செய்யும் பொறுப்பு சில அன்பர்களுக்கு அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ரசீது புத்தகங்களும் அனுப்பப்படுகின்றன. அவர்களுடைய பெயர்கள் அடுத்த வாரக் "கல்கி" இதழில் வெளியிடப்படும்.

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்களின் ('மனோஹரா' நாடகத்தின் மூலம் வசூல்) நன்கொடை 2,301 0 0

சைதாப்பேட்டை திருமகள் டாக்கீஸ் திறப்பு விழா வரவு 1,001 0 0

சென்னை நகரசபை அங்கத்ினர் (தியாகராஜநகர்) ஸ்ரீ கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் மூலம் நன்கொடை :

மெஸர்ஸ் எச். ஏ. ஆர். முகம்மது அண்டு சன்ஸ், 6, இடங்குத் தெரு, சென்னை 500 0 0

மெஸர்ஸ் டி. என். நஜீமூர் அண்டு கம்பெனி, 95, இடங்குத் தெரு, சென்னை 500 0 0

மெஸர்ஸ் வி. நாராயண செட்டி 2/74, இடங்குத் தெரு, சென்னை 500 0 0

மெஸர்ஸ் நஜீ முகம்மது அப்துல் அஜீஸ் சாகேப், 99, இடங்குத் தெரு, சென்னை 500 0 0

மெஸ்ஸர்ஸ் குமரன் பிரதர்ஸ், 5, இடங்குத் தெரு, சென்னை 500 0 0

சென்னை சர்க்கார் மின்சார இலாகா உத்தியோகஸ்தர்களின் நன்கொடை :

ரூ. 10—0—0 அளித்த அன்பர்கள் :

ஸ்ரீ டி. சம்பத்குமாரன், ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி, ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ எம். ஜே. பார்த்தசாரதி, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்.

ரூ. 5—0—0 அளித்த அன்பர்கள் :

ஸ்ரீ பி. எஸ். மல்லய்யா, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்; ஸ்ரீ கஸ்தூரி ரங்கன், ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ சி. சஞ்சீவி, ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ பி. வி. நீலகிரீந்த், ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ நாகேஸ்வர ராவ், ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ பாஸ்கரன் நாயர், ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ ஆர். எஸ். ராமச்சந்திரன், அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்; ஸ்ரீ சேஷரத்தினம், ஜூனியர் இன்ஜினியர்; ஜனாப் இப்ராஹிம் குட்டி, ஜூனியர் இன்ஜினியர்; ஸ்ரீ எம். வி. குரு ராவ், சூப்பர்வைசர்; ஜனாப் அன்வார் பாஷா, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்; ஸ்ரீ என். பி. வாசுதேவன், எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர்; டாக்டர் ஏ. ஜி. காந்தையா, எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர்; ஸ்ரீ என். நாகப்ப நாயக், எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர்; ஸ்ரீ கே. எஸ். ராமு, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர். ஆக ரூ. 105 0 0

ஸ்ரீ டி. வி. என். விஸ்வநாதன், மர்ச்சண்ட், 14, காந்தி ரோட், எக்ஸ்டென்ஷன், சேலம் 101 0 0

டாக்டர் ஸ்ரீ வி. ராமய்யங்கார், ஸ்ரீ தியாக பிரும்ம கான சபா, 63, கோபதி நாராயணசாமி செட்டி ரோடு, தியாகராயநகர், சென்னை 101 0 0

ஸ்ரீ பி. கே. சாரங்கபாணி முதலியார், இன்ஜினியரிங் கண்ட்ராக்டர், பெங்களூர் 100 0 0

ஸ்ரீ டி. செங்கு செட்டி, இரும்பு வியாபாரம், ராசப்ப செட்டி தெரு, பார்க் டவுன், சென்னை 50 0 0

ஸ்ரீ எஸ். வி. சோமசுந்தரம் பிள்ளை, "குண்டூசி" ஏஜண்ட், கும்பகோணம் 33 9 6

ஸ்ரீ எம். ஆர். சேதுராமய்யர், ஆரிய பவன் காபி ஹோட்டல், பெரிய தெரு, கும்பகோணம் 25 0 0

ஸ்ரீ எம். வடிவேல் ஆச்சாரி, 8, சுப்பிரமணிய முதலியார் தெரு, சைதாப்பேட்டை, சென்னை 21 0 0

ஸ்ரீ டி. பி. ராமநாதன், ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ் காபி ஹோட்டல், காக்கிநாடா [illegible] 20 0 0

ஸ்ரீ நசீர்யாராஜ், கோணவகரை, நீலகிரி 20 0 0

ஸ்ரீ பி. சுந்தரம், அன்னூர், அவிநாசி தாலூக்கா 15 0 0

ஸ்ரீமதி லக்ஷ்மி கே. சர்மா, வின்ஸெண்ட் ரோட், மாதுங்கா, பம்பாய். 11 0 0

ஸ்ரீ ஆ. கோ. ஆவடியாப் பிள்ளை செருகுடி, திருச்சி ஜில்லா. 11 0 0

ரூ. 10—0—0 வழங்கிய அன்பர்கள் :

ஸ்ரீ எஸ். தண்டபாணி அய்யர், 35, ஹைதக் ஸ்குவேர், புது டெல்லி; ஸ்ரீமதி எஸ். ராஜலக்ஷ்மி, வெங்கடாபுரம், கிழக்கு கோதாவரி ஜில்லா; ஸ்ரீ எஸ். வி. தர்மையா, மஞ்சுகொண்ட வீதி, விஜயநகரம்.

ஆக ரூ. 30 0 0

ரூ. 6—0—0 வழங்கிய அன்பர்கள் :

ஸ்ரீ கே. பி. செல்லையா, லேயர் வாருவேலி எஸ்டேட், தலையாறு போஸ்டு; ஸ்ரீ என். வைத்தியநாதன், 12-ஏ, காஜுட் பிளேஸ், புது டில்லி; ஸ்ரீ ஆர். என். கிருஷ்ணய்யர், மதுரை. ஆக ரூ. 18 0 0

மாகும். கச்சேரி வழக்கமான பாணியில் பக்க வாத்தியங்களுடன் நடைபெறும். மகாத்மாவுக்கு உகந்த தெய்வப் பிரார்த்தனை கீதங்கள் கச்சேரியில் முக்கியமா யிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

• • •

சென்னை நகருக்கே ஒரு புதிய சோபையை அளிக்கப் போகும் மகாத்மா காந்தி ஸ்தூபி நிதிக்குச் சென்னை நகரசபை ஐயாயிரம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கும் செய்தியைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை நகரசபை அங்கத்தினரில் பல மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். எனினும், இந்த ஐயாயிரம் ரூபாய் நன்கொடையை எவ்வித அபிப்பிராய பேதமும் இல்லாமல் சென்னை நகரசபை அங்கத்தினர்கள் ஏகமனதாக அளித்திருப்பதைக் குறிப்பிட வேண்டும். அங்கத்தினர்கள் தங்கள் கடமையையே செய்திருப்பதால் அவர்களை நாம் பாராட்டுவது மிகையாகும். எனினும் இந்தக் காரியத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தந்த டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்களையும் ஸ்ரீ ராதாகிருஷ்ணப் பிள்ளை அவர்களையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டுவது அவசியமா யிருப்பதுபோல், எவ்வளவு நல்ல காரியமா யிருந்தாலும் யாராவது மேற்போட்டுக் கொண்டு நடத்துவதற்கு முன்வர வேண்டு மல்லவா?

• • •

சென்னை நகரில் மகாத்மா ஸ்தூபி நிதிக்கு நன்கொடை வசூலிப்பதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் பக்தவத்ஸலம் அவர்களின் தலைமையில் கூடிய சில சென்னைப் பிரமுகர்களின் கூட்டத்தில் இக் கமிட்டி அமைக்கப்பட்டது. கமிட்டி அங்கத்தினர் பெயர்கள் வருமாறு:—

டாக்டர் செரியன் (மேயர்)
டாக்டர் கிருஷ்ண ராவ்
ஸ்ரீ டி. செங்கல்வராயன்
ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி நாயுடு
ஜனாப் ஷாபி முகம்மது
ஜனாப் ஸிபக்துல்லா
ஸ்ரீமதி ஸரோஜினி வரதப்பன்
ஸ்ரீ ஆர். ராமநாதன் செட்டியார் (ஷெரீப்)
ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை

கமிட்டியின் காரியதரிசி பொறுப்பை ஸ்ரீ ராதாகிருஷ்ணப் பிள்ளை ஏற்றுக் கொண்டிருக்கிறார். சென்னை நகரில் மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி கைங்கரியத்துக்கு உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் ஸ்ரீ எம். ராதாகிருஷ்ணப் பிள்ளையிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக் கோருகிறோம்.

• • •

மகாத்மாவின் தலைமையில் சுதந்திரப் போர் தொடங்கிய நாளிலிருந்து வர்த்தக சமூகம் தேசிய நிதி வசூல்களில் பேருதவி செய்து வந்திருக்கிறது. திலகர் சுயராஜ்ய நிதி முதல் கஸ்தூரிபா நிதி வரையில் வர்த்தகர்களே பெரும்பகுதி கொடுத்து உதவி யிருக்கிறார்கள். மகாத்மா ஸ்தூபி நிதி விஷயத்திலும் வர்த்தகர்களின் பங்கு குறைந்து போகாது என்று எதிர்பார்க்கலாம். பின்னி கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ கே. எம். சுப்பிரமணியம் அவர்களின் பிரயத்தனத்தினால் சென்னையில் ஐந்து பிரபல ஜவுளி வர்த்தகக் கம்பெனிகள் ரூ. ஐந்நூறு வீதம் நன்கொடை அளித்திருக்கிறார்கள். மற்ற வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டவர்கள் அவர்களுக்குப் பின்வாங்குவது முறையல்ல. ஐந்நூறு ரூபாய் கொடுக்கக் கூடியவர்கள் கொடுக்கலாம். ஐம்பது ரூபாய் அல்லது ஐந்து ரூபாய் கொடுக்கக் கூடியவர்களும் கொடுக்கலாம்.

• • •

இந்தியக் குடியரசு விழாவை முன்னிட்டுச் சில விசேஷ இசைத்தட்டுகள் வெளியாகி யிருக்கின்றன. இவற்றில் எச். எம். வி. கம்பெனியாரின் மூலம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாடி யிருக்கும் பாரதியாரின் இரு பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு ஒன்று. ஒரு பக்கத்தில் புதிய சுதந்திர பாரதத்தை வரவேற்கும் "ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா!" என்னும் பாடல். இன்னொரு பக்கத்தில் "மன்னும் இமய மலை எங்கள் மலையே" என்னும் பெருமிதமான பாடல். ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இதுவரையில் பல இசைத்தட்டுக்கள் கொடுத்திருக்கிறார். ஆனால்

புனிதத் திருநாள்

நாளைய தினம் அதாவது ஜனவரி மாதம் 30-ந் தேதி பாரத நாட்டின் சரித்திரத்தில் மிகப் புனிதமான திருநாள். அந்தத் திருநாள் 'ஸர்வோதய தினம்' என்று அழைக்கப்படும்.

26-ந் தேதி 27-ந் தேதிகளில் இந்தியா தேசம் பரிபூரண சுதந்திரத்துடன் குடியரசு ஆன திருவிழாவைத் தேசமெங்கும் கோலாகல வைபவங்களுடனே கொண்டாடினோம்.

அத்தகைய பூரண சுதந்திரமும் குடியாட்சி முறையும் எந்த மகானுடைய ஆத்ம சக்தியினால் ஸ்தாபிக்கப்பட்டதோ, அந்த மகான் பாரத புண்ணிய பூமியின் சுதந்திர யக்ஞத்தில் தமது உயிரைத் தியாகம் செய்த புண்ணிய தினம் நாளை வருகிறது.

ஜனவரி 30-ந் தேதி யன்று பாரத மக்கள் வேறு எதுவும் செய்ய முடியாது. அன்று மகாத்மா காந்திக்கு உகந்த ஏதேனும் ஒரு கைங்கரியத்தில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

மகாத்மாவுக்கு உகந்த கைங்கரியங்களில் பிரார்த்தனை ஒன்று. மகாத்மா உயிர் வாழ்ந்திருந்த வரையில் தினந்தோறும் அவர் பிரார்த்தனை நடத்தத் தவறியதில்லை. இறுதியாக, அவர் மகா தியாகம் செய்ததும் மாலை நேரம் பிரார்த்தனையின் போதுதான்.

ஆகையால், சர்வோதய தினத்தில் மகாத்மா காந்தியின் ஞாபகத்துக்காகப் பிரார்த்தனை நடத்த வேண்டியது அவசியம்.

பிரார்த்தனை நடத்துவதற்குத் தக்க ஓர் இடம் வேண்டும். டில்லியில் மகாத்மாவின் பொன்மேனி தகனமான இடத்தில் பிரார்த்தனை நடத்துவார்கள். அந்த இடத்தில் ஒரு மகத்தான ஞாபகச் சின்னத்தையும் ஏற்படுத்தப் போகிறார்கள்.

சென்னை நகரிலும் சர்வோதய தினத்தன்று மகாத்மாவுக்கு உகந்த பிரார்த்தனை நடத்துவதற்கு ஓர் இடம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அங்கே மகாத்மாவின் புனித மேனியின் அஸ்தியை அஸ்திவாரத்தில் இட்டு ஒரு ஸ்தூபி எழுப்பவும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அந்த ஸ்தூபியின் அடியில் எட்டுப் பக்கங்களில் மகாத்மாவின் மணி மொழிகளை, ஆயிரமாயிரம் ஆண்டு காலம் வரப்போகும் நம் சந்ததிகள் எல்லாரும் படித்துப் பயனடையுமாறு நிரந்தர வடிவில் செதுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபியின் அடிவாரத்திலும் சுற்றிலும் பதினாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து ஸர்வோதய தினத்தில் பிரார்த்தனை நடத்துவது எவ்வளவு பொருத்தமாயிருக்கும்?

அநேகமாக அடுத்த வருஷத்து ஸர்வோதய தினத்தில் இது சாத்தியமாகக் கூடும். அதற்குள்ளே மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி கட்டி முடிக்கப் படலாம். இதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் சென்னை சர்க்கார் செய்யப் போகிறார்கள். ஸ்தூபி கட்டும் செலவுக்கு மட்டும் பொது மக்களின் பொருளுதவியைக் கோருகிறார்கள்.

நாளை ஜனவரி 30-ந் தேதி யன்று மகாத்மாவுக்கு உகந்த ஏதேனும் ஒரு நிர்மாணப் பணியில் ஈடுபடும்படி நேயர்களை வேண்டிக் கொள்கிறோம். அதோடு, மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபிக்கு ஒரு காணிக்கையும் அனுப்பிவைக்கும்படி கோருகிறோம்.

• • •

சென்னை சுதேசிப் பொருட் காட்சியில் ஒரு தினத்து டிக்கட் விற்பனை வருமானத்தை மகாத்மா ஸ்தூபிக்குக் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரிவித்திருந்தோம். தேதி இப்போது நிச்சயமாகி விட்டது. மகாத்மாவின் மகா தியாக தினமான ஜனவரி 30-ந் தேதி யன்று பொருட் காட்சி வருமானத்தையெல்லாம் மகாத்மா ஸ்தூபி நிதிக்குக் கொடுத்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள். அன்றைய தினம் சுதேசிக் கண்காட்சியில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி கச்சேரி செய்வார். கச்சேரி மாலை 5-30 மணிக்கு ஆரம்ப

ஜனாதிபதியையும் மந்திரிகளையும் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அந்தப் பதினாறு கோடி மக்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதைக் காட்டிலும் வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமையை, — அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க வேண்டியது அவசியமாகும்.

எதிர்காலத்தில் இந்தியக் குடியரசு சிறப்புற்று ஓங்கி, உலக நாடுகளிடையே உன்னதமான ஸ்தானத்தை வகிக்குமாயின், அந்தப் பெருமையில் பாரத நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.

அது போலவே, குடியரசு சிறப்புடன் விளங்குவதற்கான கடமைகளையும் காரியங்களையும் செய்ய வேண்டிய பொறுப்பும் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

* * *

குடியரசை அடையும் பாக்கியம் வாய்க்கப் பெற்றுள்ள பாரத நாட்டு மக்கள், அந்தக் குடியரசின் முதலாவது தலைவராக, ஜனாதிபதியாக பாபு ராஜேந்திரப் பிரசாதரைப் பெற்றதன் மூலம் இன்னும் அதிக பாக்கியசாலிகள் ஆகியிருக்கிறார்கள்.

அஜாத சத்ரு மன்னனுக்கு மேலே குறிப்பிட்டவாறு ஹிதோபதேசம் செய்த புத்த மகான் எங்கு அவதரித்தாரோ, அதே பிரதேசத்தில் ஜனித்த பாபு ராஜேந்திரரும் அந்த முனிவரைப் போலவே களங்கமற்ற சீரிய வாழ்க்கையை நடத்தி வருகிறார்.

காந்தி மகானின் அன்பையும் மதிப்பையும் பெற்று அவருடைய அந்தரங்க சகாக்களாகவும் சீடர்களாகவும் இருக்கும் பெருமை வாய்ந்தவர்களை ஒரு கை விரலால் எண்ணிவிட முடியும்.

அத்தகைய ஒரு சில தியாக சீலர்களில் பாபு ராஜேந்திரர் ஒருவர். மகாத்மா காந்தியின் உபதேசங்களை இம்மி வழுவாது கிரியாம்சையில் அனுஷ்டித்து வருபவர்.

சம்பாரான் சத்தியாக்கிரக இயக்கம் நடந்த காலத்தில் பாபு ராஜேந்திரப் பிரசாதர் மகாத்மாவின் உறு துணைவராக இருந்து அந்த இயக்கம் வெற்றி பெறச் செய்ததை மறக்க முடியாது.

அரசியல் நிர்ணய மகாசபை அக்ராசனர் பதவியை அவர் மிகத் திறமையுடனும் பாரபட்சமின்றியும் சமயோசித புத்தியுடனும் வகித்து வந்ததைப் பாராட்டாதவர்கள் யாருமில்லை.

இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபைக்கு அக்ராசனம் வகித்து இருமுறை ராஷ்டிரபதி கிரீடத்தைத் தரிக்கும் வாய்ப்பும் பாபு ராஜேந்திரப் பிரசாதருக்குக் கிடைத்தது.

அத்தகைய உத்தமத் தலைவர்—சத்திய சீலர்—இன்று முப்பத்தைந்து கோடி மக்களின் இணையற்ற அதிபதியாக வீற்றிருக்கிறார். இது இந்தியாவின் பாக்கியம் என்பதில் ஐயம் என்ன?

* * *

இந்திய ஜனாதிபதியின் மகத்துவத்தை அவருடைய விசேஷக் கொடி உலக நாடுகளுக்கு எல்லாம் பறை சாற்றுவதாக இருக்கிறது.

அந்தக் கொடியில் பொறிக்கப்பட்டுள்ள அசோக ஸ்தம்பமானது ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற முப்பெரும் அரசியல் நியதிகளின் சின்னமாக விளங்குகிறது.

அதே கொடியில் காணப்படும் யானை பொறுமையையும் பலத்தையும் பிரகடனப் படுத்துகிறது.

பாரபட்சமற்ற நீதியின் சின்னமாகத் தராசு விளங்குகிறது.

தாமரை மொட்டுக்கள் பாரத நாட்டின் எதிர்காலச் செழுமையையும் சுபிட்சத்தையும் அறிவிக்கின்றன.

மங்களகரமான அந்தச் சின்னங்கள் ஜனாதிபதியின் மகோன்னதமான கடமைகளை எல்லோரும் அறிய எடுத்துக் காட்டுகின்றன.

அந்தக் கடமைகளை பாபு ராஜேந்திரர் வெற்றிகரமாக நிறைவேற்றுவார் என்பதில் பாரததேச ஜனங்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

பீகாரிலும் குவெட்டாவிலும் பயங்கரமான பூகம்பங்கள் ஏற்பட்டு ஜனங்கள் பரிதவித்தபோது ஏழை பங்காளரான பாபு ராஜேந்திரர் அலுக்காமலும் சலியாமலும் செய்த சிறந்த தொண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

அந்த பூகம்பங்களினால் துன்பத்திற்கு இலக்கான ஜனங்களுக்குத் தொண்டராக இருந்து பேருதவி புரிந்த பாபு ராஜேந்திரர், அரசியல், பொருளாதார பூகம்பங்களினால் இன்று பரிதவித்துக் கொண்டிருக்கும் பாரத நாட்டுக்கு ஜனாதிபதியாக இருந்து பேருதவி புரிய இறைவன் அருள்புரிவாராக!

வாழ்க குடியாட்சி! வாழ்க ஜனாதிபதி!

வாழ்க குடியாட்சி!
வாழ்க ஜனாதிபதி!

“1. வஜ்ஜி நாட்டுமக்கள் ஒற்றுமையுடன் கூட்டம் கூடி தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்து வருகிறார்களா?

2. சட்டம் இயற்றாமல் தங்களுடைய மனம் போன போக்கில் நடந்து கொள்ளும் வழக்கத்தை அனுஷ்டிக்காமல் இருக்கிறார்களா?

3. தங்களுக்குத் தாங்களே இயற்றிக் கொண்டுள்ள சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து அவற்றை ஏகோபித்த முறையில் நிறைவேற்றி வருகிறார்களா?

4. நாட்டின் தலைவர்களை வணங்கி அவர்களுக்கு மரியாதை காட்டுகிறார்களா? அவர்களுடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறார்களா?

5. வஜ்ஜி ஜனங்கள் தங்களுடைய பெண்மணிகளிடம் கொடுமையாக நடந்துகொள்ளாமல் இருக்கிறார்களா?

6. ஜாதி மத வேற்றுமை எதுவுமின்றி எல்லா மக்களையும் சமத்துவமாக நடத்துகிறார்களா?

7. கவிகளுக்கும் கலைகளுக்கும் கோவில்களுக்கும் மடங்களுக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறார்களா?”

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் புத்த பிரான் அஜாத சத்துரு மன்னனைப் பார்த்து மேற்கண்ட ஏழு கேள்விகளைக் கேட்டதாகச் சரித்திரம் கூறுகிறது.

வடக்கு பீகார் மாகாணம் வஜ்ஜி நாடு என்று அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. அப்போது அந்த நாட்டில் குடியரசு முறையே அனுஷ்டிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

தெற்கு பீகார் அஜாத சத்துரு மன்னனுடைய ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. அஜாத சத்துரு வடக்கு பீகார்மீது படையெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்.

தன்னுடைய தலைநகருக்கு அருகாமையில் குன்றில் தவம் புரிந்து கொண்டிருந்த புத்தர்பிரானை அவ்விஷயமாக அபிப்பிராயம் கேட்டான்.

அந்தச் சமயத்திலேதான் புத்த முனிவர் அஜாத சத்துருவைப் பார்த்து அவ்வாறு ஏழு கேள்விகளைக் கேட்டார்.

வஜ்ஜி நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே சிறப்பாக ஆட்சி புரிந்து வந்ததால், அந்தக் கேள்விகளுக் கெல்லாம் “ஆம்” என்று கூறுவதைத் தவிர அஜாத சத்துருவுக்கு வேறுவழி இராமற் போயிற்று.

“அவ்விதம் சிறப்பாக ஆட்சி புரிந்து வரும் ஜனங்கள் மேன்மேலும் வெற்றி பெற்று அபிவிருத்தியும் க்ஷேமமும் அடைவார்களே யன்றித் தோல்வியடைய மாட்டார்கள். ஆகையால், அவர்கள்மீது படையெடுக்கும் உத்தேசத்தைக் கைவிட்டுவிடு” என்று புத்தமகான் புத்திமதி கூறினார்.

அந்த மாமுனிவரின் உபதேசத்தைச் சிரமேற்கொண்டு அஜாத சத்துரு யுத்த நோக்கத்தைக் கைவிட்டான்.

அந்த மகா புருஷரின் பொன்மொழிகள் முக்காலத்துக்கும் மூவுலகத்துக்கும் பொருத்தமான அரசியல் தத்துவ விளக்கம் அல்லவா?

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் புத்தர்பிரான் கேட்ட அதே கேள்விகளுக்கு “ஆம்” என்று பதில் அளிக்கக்கூடிய நிலையில் இருக்கும் வரையில் பாரதநாடு மேன்மேலும் புகழும் வெற்றியும் பெற்றுச் சுதந்திரத்துடனும் சுபிட்சத்துடனும் விளங்கி வரும் என்பதில் ஐயமே இல்லை.


* * *

பாரத தேசம் பெறுதற்கரிய பூரண சுதந்திரக் குடியரசு உரிமையைப் படாத பாடுபட்டுப் பெற்றிருக்கிறது.

குடியரசு ஜனன விழாவை மகா ஜனங்கள் வெகு குதூகலத்துடனும் மனமகிழ்ச்சியுடனும் மகோற்சவமாகக் கொண்டாடினார்கள்.

ஆனால், அவர்களுடைய குதூகலம் நிலைத்து அவர்கள் நிரந்தரமாக ஆனந்த வாழ்வைப் பெறுவது அவர்களுடைய கையிலேயே இருக்கிறது. அதாவது அவர்களுடைய எதிர்கால க்ஷேமமும் சுபிட்சமும் பெருமையும் அவர்கள் நிதானமாகவும் நேர்மையுடனும் நிறைமையுடனும் குடியரசு நிர்வாகத்தை நடத்துவதற்குத் தகுதி வாய்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதையே பொறுத்திருக்கிறது.

புதிய குடியரசுத் திட்டத்தின்படி சுமார் பதினாறு கோடி ஜனங்களுக்கு மேல் வோட்டுரிமை பெறுவார்கள்.



மரணத்தைவென்ற மகாபுருஷர்
ஜனவரிமீ 30உ ஞாபக தினம்

திய முறைதான் ஏற்றது என்று அவர் குறிப்பிட்டார். நோய் வந்து சிகிச்சை செய்வதைக் காட்டிலும், டாக்டர்களின் தொகையையும் ஆஸ்பத்திரிகளின் தொகையையும் பெருக்கிக் கொண்டு போவதைக் காட்டிலும் நோய் வராமல் தடுப்பதற்குற்ற வழிகளையே ஆயுர்வேத சாஸ்திரம் வற்புறுத்துகிறது என்ற உண்மையை வெளியிட்டார். ஆயுர்வேத வைத்திய முறையின் சிறப்பு ஒருபுறமிருக்க, ஐரோப்பிய நாடுகளில் அபாரமாக அபிவிருத்தியடைந்திருக்கும் நவீன விஞ்ஞான, சஸ்திர முறைகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், ஆயுர்வேத முறை இன்னும் சில ஆண்டுகளில் மக்களின் பூரண ஆதரவைப் பெற்று ஆச்சரியகரமாக அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமில்லை.

காப்டன் மூர்த்தியின் தொண்டு

ஆயுர்வேத மகாநாடு நடந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்திய ஔஷதங்களின் புனருத்தாரணத்துக்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டுள்ள காப்டன் ஜி. ஸ்ரீனிவாச மூர்த்தியின் தொண்டைப் பற்றிக் குறிப்பிடவேண்டியது அவசியம். சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் பதினேழு வருஷ காலம் பிரின்ஸிபாலாக இருந்து எட்டு வருஷங்களுக்கு முன் விலகிய காப்டன் ஸ்ரீனிவாச மூர்த்தியின் வெண்கலச் சிலை ஒன்று, அந்தக் கல்லூரியின் வெள்ளி விழா சென்ற வாரம் கொண்டாடப் பட்டபோது அதைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவ் வைபவத்துக்கு சென்னைப் பிரதமர் கனம் குமாரசாமி ராஜா தலைமை வகித்து, 'இந்திய வைத்தியக் கல்லூரியின் தந்தை' என்று அன்புடன் அழைக்கப்படும் காப்டன் ஸ்ரீனிவாச மூர்த்தியின் அரிய தொண்டையும் குணாதிசயங்களையும் பாராட்டினார். கல்லூரியின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் பலத்துக்கும் காப்டன் மூர்த்திதான் காரணஸ்தர் என்பதையும் குறிப்பிட்டார்.

இந்திய வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு இருபத்தைந்து வருஷங்களாகின்றன. எனவே, அதன் வெள்ளி ஜுபிலி விழா சுகாதார மந்திரி டாக்டர் ராஜனின் தலைமையில் நடந்தது. காப்டன் ஸ்ரீனிவாசமூர்த்தி குழந்தையைப்போல் வளர்த்த மேற்படி கல்லூரி யௌவனப் பருவம் அடைந்திருப்பதைக் குறித்துத் தலைவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். ஆங்கில வைத்திய முறையே வியாபகமாக இருந்து வரும் இக்காலத்தில் அந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் இதுவரையில் சுமார் பதினேழு லட்சம் ஜனங்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் என்றால், ஸ்ரீ மூர்த்தியின் தலைமையில் கல்லூரி செய்துள்ள அரிய தொண்டை ஊகித்துக் கொள்ளலாம். அவ்வளவு நன்மை செய்துள்ள மேற்படி கல்லூரிக்குச் சர்க்கார் உதவியளிக்கத் தவறமாட்டார்கள் என்று டாக்டர் ராஜன் கூறிய உறுதிமொழி நிறைவேறி, அந்தக் கல்லூரி இந்திய ஔஷதங்களின் பழைய மகத்துவத்தை மீண்டும் ஸ்தாபிக்கப் பாடுபடும் என்று எதிர்பார்க்கலாம்.

தாசர்களின் நாசவேலை

தங்களுடைய கட்சியில் பலம் இல்லாத வக்கீல்கள் அதை மறைக்க வசைமொழிப் பிரயோகத்தில் ஈடுபடுவார்கள் என்று கூறுவது உண்டு. அதுபோலவே பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களிலுள்ள சில பிரஞ்சு தாசர்கள் தங்களுடைய கட்சியின் பலவீனத்தை மறைப்பதற்காகக் கொடிய பலாத்கார முறைகளில் இறங்கியிருக்கிறார்கள். சமீபத்தில் புதுச்சேரியில் சிலர் ஏராளமான வீடுகளில் கொள்ளையடித்து, அவற்றிற்குத் தீ வைத்து விட்டார்களாம். பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் இணைக்கப்படவேண்டும் என்ற கொள்கையுடையவர்களின் வீடுகளே துஷ்டர்களின் கோபத்துக்கு இலக்காயின என்று கூறப்படுகிறது. எவ்வளவு வல்லமை பொருந்தியவர்களாலும் பெரும்பாலான ஜனங்களின் அபிலாஷைகளை நசுக்கிவிட முடியாது என்பதற்கு இந்தியாவில் பிரிட்டிஷார் அடைந்த தோல்வியைக் காட்டிலும் நிதர்சனமான உதாரணம் வேறு தேவையில்லை. அப்படியிருக்க, ஒரு சிலர் பொது மக்களின் கோரிக்கையைக் குண்டாந்தடியால் நசுக்கிவிடப் பார்ப்பது சாத்தியமான காரியமா? அது எப்படியாயினும் அத்தகைய அராஜகமான நிலைமைக்கு இடம் கொடுப்பது பிரஞ்சு சர்க்காரின் கௌரவத்துக்கு ஏற்றதல்ல. துஷ்டர்களின் எதேச்சாதிகாரம் காரணமாக நிரபராதிகள் வீடுவாசல்களை இழக்க நேருவது ஜனநாயகக் கொள்கைக்கு, குடியரசு தர்மத்துக்கு முரணானது என்பது பிரஞ்சுக் குடியரசு சர்க்கார் அறியாத விஷயமல்ல. பிரஞ்சு சர்க்கார் நேர்மையாக நடந்து கொள்வதாயின் அவ்வித அராஜகமான காரியங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டியதும், அந்தப் பிரதேசங்களில் பொதுஜன வாக்கு எடுப்பைத் துரிதப்படுத்த வேண்டியதும் அவசரமான கடமையாகும்.

கல்கி

மலர் 9 இதழ் 26

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

என்ன சேதி?

புதையுண்ட செல்வம்

பாதாளத்தில் எத்தனையோ அடிக்குக்கீழே சுரங்கச் செல்வம் போன்ற அரிய பொக்கிஷங்கள் புதையுண்டு கிடக்கின்றன. அந்த இடத்திலேயே இருக்கும் வரையில் அவைகளால் யாருக்கு என்ன பலன் ஏற்பட முடியும்? அவைகள் இருப்பதும் இராததும் ஒன்று என்று தானே கருதவேண்டும்? அவற்றைத் தோண்டி வெளியே எடுத்துப் பண்படுத்திய பின்தான் அவை மானிட வர்க்கத்துக்கு இன்றியமையாத அருமையான சாதனங்களாகின்றன. அது போலவே அரும்பெரும் கலைகள் புதையுண்டு கிடந்தால்-யாருக்கும் தெரியாத இரகசியமாக இருந்தால் யாருக்கு என்ன லாபம்? இந்தியாவில் ஒருவருக்கும் தெரியாத இரகசியக் கலைகள் இருக்கின்றன என்று பெருமை கொள்வதோ, இந்த நாட்டில் ஒரு காலத்தில் குறிப்பிட்ட கலைகள் குன்றின் மேலிட்ட தீபம்போல் பிரகாசித்து வந்தன என்று ஆறுதல் அடைவதோ அர்த்தமற்ற காரியம். அவைகளால் இன்று மக்கள் அடையும் பிரயோஜனம் என்ன? இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டே அவற்றின் உயர்வை நிர்ணயிக்க வேண்டும்.

பாரத நாட்டில் காலச் சுழலினாலும் அன்னியரின் ஆதிக்கத்தினாலும் நசித்துப்போன அரும் பெரும் கலைகள் ஒன்று அல்ல, இரண்டு அல்ல. அவைகளில் ஆயுர்வேத வைத்திய முறையும் ஒன்றாகும். உயிருக்கு மூலஸ்தானமான உடலையும் உடலுக்கு மூலஸ்தானமான உயிரையும் பாதுகாக்கும் வேதம்தான் ஆயுர்வேதம் என்பது. ஒரு காலத்தில் இந்தியரின் சராசரி வயது நூறாக இருந்தது. இப்போதோ சராசரி வயது இருபத்தைந்தாக இருக்கிறது. இத்தகைய பயங்கரமான நிலைமைக்குக் காரணம் என்ன? நம் நாட்டில் ஆயுர்வேதம் பெரிதும் நசித்து விட்டது அல்லவா? அதுதான்.


புனருத்தாரண முயற்சி

எனினும் அது அடியோடு நசித்துவிடவில்லை என்பதையும், அது மறுபடியும் ஆக்கம் பெற வழி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கவனிப்போர் திருப்தியடையாமல் இருக்க முடியாது. சென்னை ரஸிகரஞ்சனி சபையில் நடந்த பதினாறாவது தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டின் நடவடிக்கைகள் எல்லோருக்கும் அத்தகைய நம்பிக்கையைக் கொடுப்பதாக இருக்கின்றன.

"ஆயுர்வேதத்தில் எத்தனையோ அரிய பெரிய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றில் ஒன்றுகூட இப்போது ஒருவருக்கும் தெரியவில்லை. அது மீண்டும் அதன் பழைய மகத்துவத்தை அடையாவிட்டாலும் மற்ற வைத்திய முறைகளைப் போலவாவது, அவற்றிற்கு உபசாதனமாகவாவது இருக்க வேண்டாமா?" என்று மகாநாட்டை ஆரம்பித்து வைத்த மந்திரி கனம் மாதவ மேனன் உருக்கமாகப் பேசினார்.

இந்தியாவிலுள்ள லக்ஷக்கணக்கான கிராமங்களில் வசிக்கும் ஜனங்கள் வைத்திய வசதியின்றித் திண்டாடும் இக்காலத்தில், அவர்களில் எண்பது சதவிகிதம் பேருக்கு ஆயுர்வேதம்தான் உயிர் கொடுத்து வருகிறது என்று மகாநாட்டின் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய ஐயர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

சிறந்த ஆயுர்வேத வைத்தியரும் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினருமான ஸ்ரீ வி. சுப்பிரமணியம் ஆயுர்வேத சாஸ்திரத்தின் அருமை பெருமைகளைச் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினார். இந்தியாவில் ஜனங்களின் சராசரி வயது மறுபடியும் நூறு ஆவதற்கு ஆயுர்வேத வைத்




கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 26 | ஜனவரி 29 | விரோதி தை 16உ.

உமா

சுவர்ண அலங்காரம். மிஸ்ரம லோகத்தின் மேல் அசல் தங்கத் தகட்டினால் மூடப்பட்டு தயார் செய்தவை. கருக்காமல் இருக்கும். 10 வருஷம் உத்திர வாதம். நகைகள் வி. பி. பார்சல் சார்ஜ் 0–15–0 அணா மாத்திரம்.



விபரங்கள் தெரியப்படுத்த கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்

உமா மஹால் :: மசூலிப்பட்டணம்

Telegrams: "UMA" MASULIPATAM


இப்பொழுது நடைபெறுகிறது
ஜூபிடரின்
கிருஷ்ண
விஜயம்
...சென்னை...
கெயிட்டி & கிரௌன்
தினசரி 3 காட்சிகள்
மற்றும் ராஜதானி பூரா
வும் நடைபெறுகிறது
டைரக்ஷன்
சுந்தர் ராவ் நட்கர்ணி
ஸ்டூடியோ சென்ட்ரல்.

ஆரோக்யமும் சந்துஷ்டியுமுள்ள குழந்தைகளுக்கு

அவர்கள் செலவழித்த சக்தியைத் திரும்பப் பெற <u>அதிகப்படி</u> உணவு அவசியம்.



குழந்தைகளின் விளையாட்டிலும், படிப்பு வேலையிலும் துரிதமாக ஜீவசக்தி விரயமாகி விடுவதால், குளிர்ந்த ஓவல்டின் இழந்த சக்தியை புதுப்பிக்க உதவும்.

ஓவல்டின் இளம் குழந்தைகளுக்கும் சுலபமாக ஜீரணமாகும். விவேகமுள்ள தாய்மார் அவர்களது குடும்பத்தினருக்கு காலையிலும், இரவில் படுப்பதற்கு முன்பும் ஓவல்டினைக் கொடுக்கின்றனர்.

குழந்தைகள் "ஓவல்டின்" மணத்தை விரும்புகின்றனர். அதில் பழுத்த பார்லி மால்டிலிருக்கும் புஷ்டி, ஜீவ சக்தியளிக்கும் குணங்களும், சுத்தமான ஏட்டுப்பால், விசேஷமாகத் தயாரித்த கோக்கோ, மதிப்பு வாய்ந்த இயற்கை பாஸ்படைட்கள், விடமின்கள் முதலியவை நிறைந்த அளவில் அடங்கியுள்ளன.

இளம் உடல் வளரவும், எதிர்கால ஆரோக்யத்தை உறுதிப்படுத்தவும் உங்கள் குழந்தைகளுக்கு "ஓவல்டின்" கொடுங்கள். இப்பெயர் கொண்டது இது ஒன்றுதான்.



'OVALTINE'


ஓவல்டின்

உலகில் மிகப் பிரசித்தி பெற்ற உணவு பானம்.

வினியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.

OV. 302.

ஹமாம் — ஒவ்வொருவருடைய மனதிற்கு மிசைந்த ஸோப்பு! ★



★ மற்றெந்த ஸோப்பையும்விட ஹமாமுக்கே அதிக கிராக்கி என்பதற்கு அசல் விற்பனை புள்ளி விவரங்களே சான்று.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்


தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்தில்
மகிழ்வுடன் உலாவி வருகிறார்கள்.
மாடர்ன்
தியேட்டர்ஸ்
பொன்முடி
இப்பொழுது தென்னாடெங்கும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது


கதையிலே புதுமை....
காட்சியிலே இனிமை..
..சென்னை..
பாரகன்
மஹாராணி
......லக்ஷ்மி......
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
வாழ்க்கை
மற்றும் இப்பொழுது தமிழ்நாடெங்கும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது
AVM
புரொடக்ஷன்ஸ்